




Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 84 பிலவ வருடம், தை மாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
(30.01.2022) ஹிஜ்ரி-1443, ஜமாஅத்துல் ஆகீர் - 26, 0115886187 - பக்கங்கள் 16+8+8+8

விலை ரூ.50









நீதி அமைச்சினால் ஏற்பாடுசெய்யப்பட்ட 'நீதிக்கான அணுகல்' எனும் தொனிப்பொருளிலான நடமாடும் சேவைக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமல்போனோரின் உறவுகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தச் செயலமர்வில் காணாமல்போனோர் விவகாரத்தைக் கையில் எடுக்கக்கூடாது என அவர்கள் வலியுறுத்தினர். (படம் – யாழ். நிருபர்)



நீதி அமைச்சினால் ஏற்பாடுசெய்யப்பட்ட 'நீதிக்கான அணுகல்' எனும் தொனிப்பொருளிலான நடமாடும் சேவை நேற்று யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமானபோது, நீதி அமைச்சர் அலி சப்ரி, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட்ட பிரமுகர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

## 'வெடி'மணியம்



'பூகோள அரசியல்' எண்டு வாய்கிழிய ஊரெல்லாம் கத்திக்கொண்டு திரிஞ்ச பொன்னம்பலத்தாற்ற மோன் கஜேந்திரகுமாருக்கு;

உண்மையிலேயே அவருக்கு அதற்கான 'விளக்கம்' துப்பரவா இல்லை எண்டதை அவரே ஒத்துக்கொண்டுள்ளார்.

"தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒற்றுமை" தான் இலங்கையில் இப்போது நிகழும் பூகோள அரசியலின் முதல் துருப்புச்சீட்டு.

இந்த 'ஒற்றுமை' வெறுமனே உதட்டளவிலோ அல்லது தேர்தல் கூட்டாகவோ இருக்கலாம். இல்லாமலும் போகலாம்.

ஆனால், அதுவல்ல இப்ப பிரச்சினை!

தற்போதைய நிலையில் ஸ்ரீலங்காவில் நிகழும் மிக மோசமான அரசியல் ஆட்டத்தில்;

ஆட்சியாளர்களுக்கு ஒரு 'கடிவாளத்தை' போடவேண்டிய இக்கட்டான நிலையில் தமிழர் தரப்பு இருக்கிறது.

ஆக;

அதற்கு ஒரே வழி 'இந்தியாவை' உள்ளே இழுத்துவிடுவதுதான்.

'இந்தியா' ஈழத்தமிழர்களுக்கு நல்லது செய்யுமா? செய்யாதா? என்ற கேள்வியை இப்போதைக்கு கொஞ்சம் புத்திசாலித்தனமாக அணுகவேண்டும்.

"வந்தா வா. போனா போ" எண்ட அடிப்படையில்தான் தமிழர் தரப்பின் இந்தியாவுடனான 'டீல்' உள்ளது.

இந்தியாவை ஈழத்தமிழர்கள் முழுசாக எந்தக் காலத்திலும் நம்பியதும் இல்லை. நம்பப்போவதும் இல்லை.

ஆனால், ஸ்ரீலங்காவில் நிகழும் மிக மோசமான அரசியல் சடுகுடு ஆட்டத்தில்;

எங்கட பக்கம் ஆட்டத்தை திருப்ப இந்தியாவை இதுக்குள்ள இழுத்துவிட்டு கோத்துவிடவேண்டியது அவசியம்.

அதுக்கு "இத்துப்போன பழசான 13ஆம் திருத்தச்சட்டத்தை" தவிர, ஒரு கோதாரியும் எங்கள் கைகளில் இல்லை.

இது கஜேந்திரகுமாருக்கு தெரியாமல் இல்லை.

ஆனால், கஜேந்திரகுமாருக்கும் அவரோட திரியும் கஜேந்திரனுக்கும் ஓர் அரிகண்ட "குணம்" இருக்கு!

"ஊரில எல்லா மாடும் வடக்கால ஓடும்போது இவை இரண்டுபேரும் தெற்கால ஓடுவினம்"

07 ஆம் பக்கம்

# தீர்வினை போராடிப் பெற முடியாது!



## பேசியே பெறவேண்டுமென அமைச்சர் அலி சப்ரி யாழில் தெரிவிப்பு

*- யாழ் நிருபர் -*

போராட்டங்களை நடத்துவதன் மூலம் காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினைக்குத் தீர்வினை பெற்றுவிடமுடியாது. தமது பிரச்சினைக்குத் தீர்வு வேண்டுமாக இருந்தால் அரசுடன் பேசினால் பெற்றுக்கொடுக்க முடியும் - என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற நீதி அமைச்சின் நடமாடும் சேவையினை ஆரம்பித்து வைத்தபின்...

02 ஆம் பக்கம்

## தடுப்பூசி பற்றிய பொய் தகவல்களை நம்பாதீர்

### புனித பாப்பரசர் வேண்டுகோள்



கொரோனா மற்றும் தடுப்பூசிகள் குறித்த பொய் செய்திகளை நம்ப வேண்டாம் - என புனித பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கம்

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள திருத்தங்கள்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பல திருத்தங்களை அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலம் ஏற்கனவே வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சர்வதேச தரத்துடன்...

02 ஆம் பக்கம்

# தேசிய ஐக்கிய முன்னணி - பிரஜைகள் முன்னணி

### தேர்தலில் போட்டியிட தற்காலிக தடை விதிப்பு!

*- றிப்தி அலி -*

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே. ஸ்ரீரங்காவின் பிரஜைகள் முன்னணி மற்றும் மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலியின் தேசிய ஐக்கிய முன்னணி உள்ளிட்ட ஆறு அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையின்படி தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்கவினால் இது தொடர்பிலான 2263/22 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 21ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கம்

## நக்கல் நமசிவாயம்

நிதிநிலை அறிக்கை என்னத்துக்கு...
சாதாரண சில்லறைக்கடையில
சாமான் வாங்குறவரிட்ட
கேட்டா நாட்டு பொருளாதார
நிலைமைய ஒரே வார்த்தையிலே
சொல்லிவிடுவாரே..



## 13ஆவது திருத்த சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பேரணி

### யாழ். வலிகாமம் மேற்கு பிரதேசத்தில்



*- யாழ் நிருபர் -*

13ஆவது திருத்த சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்துள்ள வாகனப் பேரணி நேற்று யாழ்ப்பாணம் - வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் இடம்பெற்றது.

02 ஆம் பக்கம்






## நிதி நிலை அறிக்கை தேவையென்ற வாசுதேவவின் கோரிக்கை நிராகரிப்பு

### பகிரங்கப்படுத்தினால் பாரிய பிரச்சினை என்கிறார் பெசில்



நாட்டின் நிதி நிலை குறித்த அறிக்கையை பகிரங்கப்படுத்தினால் அது பாரிய பிரச்சினையாக அமையும் - என நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிதி நிலைமை தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார முன்வைத்த கோரிக்கைக்குப்...

02 ஆம் பக்கம்




மரண அறிவித்தல், நினைவஞ்சலி, மற்றும் பிறந்தநாள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கலாம்

அழையுங்கள் 0761393805

# இலங்கையைச் சேர்ந்த குடும்பஸ்தரும் இரு பிள்ளைகளும் ஆஸி.யில் சடலங்களாக மீட்பு

## இரட்டைக் கொலைசெய்த பின்னர் தந்தை உயிர்மாய்த்திருக்கலாமென பொலிஸார் தெரிவிப்பு

இலங்கையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் தனது குழந்தைகளுடன் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் மேற்கு அவுஸ்திரேலியாவில் நேற்று முன்தினம் (28) மாலை இடம்பெற்றுள்ளது.

இந்திக்க குணதிலக்க என்ற 40 வயதுடையவரே இவ்வாறு தனது குழந்தைகளுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன் இவர் தனது குழந்தைகளை கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என அவுஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவரது 4 வயது மகளும் 6 மகனுமே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்திக்க குணதிலக்கவின் வீடு மேற்கு அவுஸ்திரேலியா, பேர்த் பிரதேசம் எசிங்டன் வீதியில் அமைந்துள்ளது. தாய் இவர்களுக்காக வெளிப் பிரதேசம் ஒன்றில் காத்திருந்துள்ளதுடன் மூவரும் குறித்த நேரத்தில் வருகை தராததால், அயலவர்களுக்கு அறிவித்துள்ளார். அவர்கள் சென்று பார்த்தபின்னர் மூவரும் சடலமாக



காணப்பட்டமை தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

அதனையடுத்து மூவரும் நேற்று மாலை 6.30 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். தந்தையின் சடலம் வீட்டிலுள்ள வாகன தரிப்பிடத்திலிருந்து மீட்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதுதொடர்பில் மேற்கு அவுஸ்திரேலியாவின் உதவி பொலிஸ் ஆணையாளர் எலன் எடம்ஸ் தெரிவித்துள்ளதாவது, “மன உளைச்சல் காரணமாக தந்தை இரண்டு பிள்ளைகளையும் கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்துகொண்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக தீவிர புலனாய்வு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம். எமக்கு கிடைக்கபெற்ற தகவல்களின் பிரகாரம் தந்தையால் இரட்டை கொலை செய்யப்பட்டுள்ளது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

தந்தை கடந்த டிசம்பர் மாதம் 16ஆம் திகதி பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் 18 நிமிட காணொளியொன்றை பதிவு செய்துள்ளார். அந்தக் காணொளியில் தனக்குள்ள மன உளைச்சல் பிரச்சினைகள் தொடர்பில் கூறியுள்ளார். அத்துடன், பிரச்சினைகளுக்கு தற்கொலை தீர்வாகாது என்றும் அந்தக்காணொளியில் தெரிவித்துள்ளார்.

கொலைச் சம்பவம் இடம்பெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் தனது குழந்தைகள் இருவருடனும் இருக்கும் புகைப்படத்தை அவரது முகப்புத்தகத்தில் பதிவேற்றியுள்ளார். இவர் ஒரு பாடகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 13ஆவது திருத்தச் சட்டம்: திருகோணமலையில் உரை

இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டம் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தடைக்கல்லா, கொழுக்கொம்பா என்ற தலைப்பில் இடம்பெற்றுவரும் ஆய்வுரையின் இரண்டாம் பகுதி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

திருகோணமலை உட்துறைமுக வீதியிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பத்திரிகையாளர் அ.நிக்ஸன் மேற்படி தலைப்பில் உரையாற்றவுள்ளார். திருகோணமலையில் செயற்படும் சமூக உரிமைக்கான புழுதி அமைப்பு நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் அரசியல், விஞ்ஞான மாணவர்கள் உட்பட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

## 7 மாடிக் கட்டடத்திலிருந்து விழுந்த சிறுவன் பலி!

பம்பலப்பிட்டியில் ஏழு மாடிக் கட்டடத்திலிருந்து தவறி விழுந்து சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் (28) மாலை பம்பலப்பிட்டி கிரெஸ்டர் பகுதியில் 7 மாடிக் கட்டடத்திலிருந்து சிறுவன் தவறி விழுந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த 15 வயதுச் சிறுவன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். அதே பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அமைச்சர் ஒருவரின் இல்லத்தின் நீர்க் கட்டண நிலுவை ரூ. 20 இலட்சம்

உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து இதுவரை நீர்க் கட்டணத்தை செலுத்தாத 30 அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலுவைத் தொகையை அவர்களின் மாதாந்த சம்பளம் அல்லது ஓய்வூதியத்திலிருந்து ஒதுக்குமாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

நிலுவைத் தொகையைச் செலுத்தவேண்டிய அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமார் 40 பேர் உள்ளனர். அவர்களில் பத்து பேர் உயிரிழந்துள்ளனர்.

அமைச்சர் ஒருவரின் நிலுவைத் தொகை ரூ. 20 இலட்சத்தை தாண்டியதாக சபை வட்டாரங்கள் தெரிவித்தன. பட்டியல்களை விரைவாக செலுத்துவதற்கான இறுதி அறிவிப்புகளும் கடந்த வாரத்தில் வெளியிடப்பட்டன.

இதன்படி, தொடர்ந்தும் கட்டணம் செலுத்தத் தவறிவரும் மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார பணிப்புரை விடுத்துள்ளார்.

# 2021இன் சிறந்த இளம் நாடாளுமன்ற உறுப்பினராக சாணக்கியன் தெரிவு

2021ஆம் ஆண்டுக்கான சிறந்த இளம் நாடாளுமன்ற உறுப்பினருக்கான விருது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

Institute of Politics என்ற அமைப்பினால் குறித்த விருது இரா.சாணக்கியனுக்கு வழங்கப்பட்டுள்ளது. குறித்த விருது வழங்கும் நிகழ்வானது முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இடம்பெற்றிருந்தது.

எனினும், மட்டக்களப்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்புகள் மற்றும் வேறு சில முக்கிய காரணங்களினால் இரா.சாணக்கியன் குறித்த நிகழ்வில் பங்கேற்றிருக்கவில்லை என அவரது ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில், கடந்த வாரம்




Institute of Politics என்ற அமைப்பின் அலுவலகத்தில் வைத்து இரா.சாணக்கியனுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து திட்டம்

நாட்டின் 74ஆவது சுதந்திர தின நிகழ்வு ஒத்திகைக்காக நேற்றுமுதல் விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல் படுத்தப்படுகின்றது.

பெப்ரவரி 3ஆம் திகதிவரை தினமும் காலை 7 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை இப்போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திர தினக் கொண்டாட்டங்கள், சுதந்திர சதுக்கத்தில் காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இந்த ஒத்திகையால் சுதந்திர சதுக்கத்தைச் சுற்றி வாகனப் போக்குவரத்து அவ்வப்போது மட்டுப்படுத்தப்படும் என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# கற்பிட்டி கார் விபத்தில் ஒருவர் பலி; இருவர் காயம்

*- ரஸீன் ரஸ்மின் -*

பாலாவி - கற்பிட்டி பிரதான வீதியின் நாச்சிக்கள்ளி வேளாங்கண்ணி ஆலயத்திற்கு அருகில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கற்பிட்டி, பாலக்குடா பகுதியில் நடந்த திருமண விருந்து நிகழ்வொன்றுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பும்போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

கற்பிட்டி, குறிஞ்சிப்பிட்டி தெற்கு பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற அதிகாலை வேளையில் கற்பிட்டி, பாலக்குடா பகுதியிலிருந்து குறிஞ்சிப்பிட்டி பகுதியை நோக்கி பயணம் செய்த சொகுசு காரொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையால் வீதியை விட்டு விலகி அருகிலுள்ள தொலைபேசி சேவை வழங்கும் தூணில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது குறித்த சொகுசு காரில் பயணம் செய்த மூவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்தபோதிலும் அங்கு ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அத்துடன், காயமடைந்த இருவரில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையிலிருந்து புத்தளம் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், மற்றைய நபர் தொடர்ந்தும் கற்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில் வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன் அறிந்துகொள்ளலாம்
தமிழன் தமிழன்

### தீர்வினை போராடி...

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் நீண்டகாலமாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இன்றைய தினம் (நேற்று) யாழ்ப்பாணத்திலும் எமது நிகழ்வு நடக்கும் இடத்திற்கு முன்பும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

நான் முல்லைத்தீவில் ஒரு நிகழ்வில் கலந்துகொண்டபோதும் நான் கலந்துகொண்ட நிகழ்வு முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்களை நான் சந்திக்க அழைத்தேன். ஆனால், அவர்கள் சந்திக்க விரும்பவில்லை என்று கூறினார்கள்.

எனவே, அதிலிருந்து ஒன்றை நான் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அவர்கள் போராட்டம் செய்யவே வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு பிரச்சினைக்குரிய தீர்வு தேவையில்லை. அவர்களுக்கு போராட்டத்தின் மூலம் தீர்வு கிடைக்காது.

கடந்த 13 வருடங்களாக போராட்டங்களை மேற்கொண்டு அவர்களுக்கு என்னதான் கிடைத்தது? போராட்டங்களை மேற்கொள்வதன் மூலம் எதையும் அவர்கள் பெற்றுக்கொள்ள முடியாது.

குறிப்பாக, இயக்கங்களில் இருந்தவர்களின் உயிரை மீட்டுத் தருமாறு கூறினால் அதை பெற்றுக்கொடுக்க முடியாதுதானே? அதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் இந்த காணாமலாக்கப்பட்டோருக்கான பிரச்சினைக்கு ஒரு தீர்வு வழங்க வேண்டும். அதை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

நீதி அமைச்சர் என்ற ரீதியில் நான் ஒன்றை கூறிவைக்க விரும்புகின்றேன். காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டுமானால் அது அரசுடன் பேசித்தான் அதற்குரிய தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, போராட்டங்களை மேற்கொண்டு தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியாது.

போராட்டங்களை மேற்கொள்வது அவர்களுடைய ஜனநாயக உரிமை. அதனை மதிக்கின்றேன். அதனை தடுக்கமாட்டேன். ஆனால், போராட்டங்களை நடத்தி எதனையும் பெற்றுக்கொள்ளமாட்டார்கள் - என்றார்.

தற்போது விற்பனையில்




தொடர்புகளுக்கு : 0777 983308 - விநியோகப்பிரிவு

### தடுப்பூசி பற்றிய...

ஐரோப்பாவின் ரோம் நகரில் கொரோனா குறித்த பொய் செய்திகளை தோலுரித்துக் காட்டும் கத்தோலிக்க செய்தியாளர்கள் குழுவுக்கு பாப்பரசர் பிரான்சிஸ் பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது,

கொரோனா பரவல் குறித்தும், அதற்கான தடுப்பூசி பற்றியும் பொய்யான தகவல்கள் பரப்பப்படுகின்றன. அவற்றை நம்பாமல், அறிவியல் தரவுகளின் அடிப்படையில் துல்லியமான தகவல்களை அறிவது மனித உரிமையாகும்.

குறிப்பாக, வலைத்தளங்களில் காணப்படும் தகவல்களில், உண்மை எது, பொய் எது என்பதை ஆராய்ந்து பார்க்கும் திறன் இல்லாதோருக்கு துல்லிய விவரங்கள் சென்றடைய வேண்டும். பொய் செய்திகள் மறுக்கப்பட வேண்டும்.

அதேசமயம், போதிய விழிப்புணர்வு அல்லது பொறுப்பின்றி கிடைக்கும் தகவல்களை நம்பும் தனிநபரின் மரியாதையும் காக்கப்பட வேண்டும். பொய் தகவல் என்ற வலையில் விழுந்தோரிடம் கருணையுடன் பேசி, உண்மையை எடுத்துக் கூற வேண்டிய பொறுப்பு கத்தோலிக்க திருச்சபைக்கு உள்ளது - என்றார்.

### 13ஆவது திருத்த...

இதன்போது தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை 13ஆவது திருத்தத்திற்குள் முடக்கும் சதி முயற்சியை முறியடிக்க அனைத்து தமிழ் மக்களதும் பூரணமான ஆதரவைக்கோரி துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

வாகனப் பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணிகளான ந.காண்டீபன், க.சுகாஸ், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பயங்கரவாதத்தடை...

சீரமைக்கும் நோக்கத்துடன் பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட திருத்தங்களின்படி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விதிகளின்கீழ் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யலாம்.

விளக்கமறியலில் அல்லது தடுப்புக்காவலில் உள்ள ஒருவரை சட்டத்தரணி அணுகுவதற்கும், விளக்கமறியலில் அல்லது தடுத்துவைக்கப்பட்டுள்ள நபரை அவரது உறவினர்களுடன் தொடர்புகொள்ளவும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

தடுப்பு உத்தரவின்கீழ் ஒரு நபரின் மொத்த தடுப்புக்காவலின் காலத்தை 18 மாதங்களிலிருந்து 12 மாதங்களாகக் குறைக்கவும் திருத்தங்கள் முன்மொழிகின்றன.

இதற்கிடையில், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இடத்திற்குச் செல்லும் ஒரு மாவட்ட நீதிவான், சந்தேகத்திற்குரிய நபரை நேரில் பார்க்க முடியும் மற்றும் அவரது நலனைப் பார்க்க முடியும். நலன் மற்றும் நிபந்தனைகளின்கீழ் அவர் தடுப்புக்காவலில் வைக்கப்படவும் மற்றும் அவரது அவதானிப்புகள் மற்றும் சந்தேகநபர் செய்யக்கூடிய எந்தவொரு புகாரையும் பதிவுசெய்யவும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் என நீதிவானுக்கு சந்தேகமிருப்பின், சந்தேகநபரை மருத்துவப் பரிசோதனைக்காக நீதித்துறை மருத்துவ அதிகாரியிடம் ஆஜர்படுத்தும்படி அவர் அறிவுறுத்தலாம், நீதித்துறை மருத்துவ அதிகாரியால் சமர்ப்பிக்கப்படும் ஓர் அறிக்கையை அவரிடம் உரிய அதிகாரிகள் சமர்ப்பிக்க வேண்டும்.

### நிதி நிலை அறிக்கை...

பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். “கொடுக்க முடியும். ஆனால், அது அங்கே ஒரு பெரிய பிரச்சினை. நான் அதை அமைச்சரவைக்கு வழங்குவேன்” என்று நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன்படி அடுத்த அமைச்சரவையில் அறிக்கையைச் சமர்ப்பிக்க நிதி அமைச்சர் இணங்கியுள்ளார்.

இதேவேளை, இவ்வருடம் இலங்கை அரசாங்கம் செலுத்தவேண்டிய வெளிநாட்டுக் கடன் தொகை 690 மில்லியன் அமெரிக்க டொலர் என நிதியமைச்சு அமைச்சரவைக்கு அறிக்கையொன்றின் மூலம் அறிவித்துள்ளது.

### தேசிய ஐக்கிய....

இதற்கமைய, பிரஜைகள் முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, ஈழவர் ஜனநாயக முன்னணி, எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய, எக்சத் லங்கா மகா சபா கட்சி, ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி ஆகிய அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிட தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த அரசியல் கட்சிகளின் செயலாளர் பதவி தொடர்பில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளைச் சமர்ப்பிக்காமை போன்றன காரணமாகவே இந்த தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளதாக குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 73 அரசியல் கட்சிகளை தேர்தல் ஆணைக்குழு தேர்தலில் போட்டியிட அங்கீகரித்துள்ளது. புதிய அரசியல் கட்சிகளை பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் தேர்தல் ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ள நிலையிலேயே இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, “குறித்த அரசியல் கட்சிகளின் செயலாளர் பதவியில் நிலவும் சர்ச்சை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளைச் சமர்ப்பித்தல் ஆகியவற்றின் மூலம் இந்த தற்காலிக தடையினை நீக்க முடியும்” - என தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் தெரிவித்தார்.



# சஜித்-சம்பிக்க பிளவு!

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நாட்டை மீட்டெடுக்க அரசாங்கத்தைக் கவிழ்ப்பதா அல்லது தேர்தல் மூலம் ஆட்சியை மாற்றுவதா? இந்த சங்கடமான நிலையில்தான் அரசியல் கட்சிகள் தடுமாறுகின்றன. செய்வதறியாத நிலையில் மக்கள் தலையை பிய்த்துக்கொள்கிறார்கள். அரசாங்கம் விழுவதற்கு முன்னர் நாடு விழுந்துவிட்டது என்கிறார் தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

வங்குரோத்து நிலையில் செல்லும் பொருளாதார நிலையால், நாடு மியன்மார், வடகொரியாவின் நிலைக்குச் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளது என அழுத்திச் சொல்கிறார் முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

நாட்டின் பொருளாதாரம் பாதாளத்தில் வீழ்ந்துள்ளது. இதிலிருந்து மீட்சிப் பெற முடியும். நிலையானதும் நேர்மையானதுமான வேலைத்திட்டத்தினூடாகவே அதனை முன்னெடுக்க முடியும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறுகிறார்.

நாடு அதலபாதாளத்துக்குச் சென்றுவிட்டது. ராஜபக்ஷக்களின் சுயஇலாப பொருளாதாரத் திட்டமிடலால் இவ்வளவு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்கவும் அவரது உயர்நிலை தோழர்களும் நாடெங்கும் பேசி வருகின்றார்கள்.

இந்த அரசியல் தலைவர்களின் கருத்துகளைப் பார்க்கின்றபோது, நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படை இலக்கு தெரிகிறது. ஆனால், அரசாங்கத்தை மாற்றுவதால் மட்டும் நெருக்கடி நிலைக்குத் தீர்வுகாண முடியாது என்பதில் தெளிவாக இருக்கிறார்கள் என்பது இவர்களுடைய உரைகள் மூலம் தெளிவாகின்றது.

பதவியிலிருக்கும் ஆட்சியாளர்களை மாற்றி புதிய கொள்கைத் திட்டங்களை வகுத்து அதன்மூலமே நாட்டை பாதுகாக்க முடியும் என்பது ஒருசில பொருளாதார நிபுணர்களின் கருத்தாக இருக்கிறது. அல்லது தேர்தல் மூலம் புதிய தலைமைகளைத் தேர்ந்தெடுத்து, கொள்கைகளை வகுத்து செயற்பட்டால், மீட்சிப்பெற முடியும் என்பது இன்னும் சிலரின் கருத்து பரிமாற்றமாக இருக்கிறது.

நாடு மிகப்பெரிய வங்குரோத்து நிலையில் இருக்கும்போது, தேர்தல் ஒன்றை நடத்துவதற்கும் அதுபற்றி சிந்திப்பதற்குமான நேரம் இதுவல்ல. ஆனால், ஒரே ஒரு தீர்வுதான் இப்போதைக்கு சாத்தியமாக்கிக்கொள்ள முடியும்.

ஆட்சியாளர்களையும் ஆட்சியையும் தக்கவைத்துக்கொண்டு, சகல அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு நாடாளுமன்றத்தில் எடுக்கும் தேசிய நலன்சார்ந்த பொருளாதார தீர்மானங்கள், நாட்டின் சீரழிவிலிருந்து தடுக்க முடியும். இதற்கு அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி செய்கின்ற, பொதுஜன பெரமுன அரசாங்கமும் ஒத்துழைக்க வேண்டும்.

43ஆம் படையணியின் (43 movement) தலைவரான சம்பிக்க ரணவக்க, இதனைத்தான் இப்போது வலியுறுத்துகிறார். ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான பாட்டலி சம்பிக்க ரணவக்க, 43ஆம் படையணி என்ற அரசியல் சார்பற்ற இயக்கத்தை உருவாக்கி, தான் சார்ந்த கட்சியின் செயற்பாடுகளுக்கு அப்பால் சில வேலைத்திட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கியிருக்கிறார். இந்தப் படையணியை ஒரு தேசிய இயக்கமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான சம்பிக்க ரணவக்க.

இதன் தேசிய மாநாடு, கடந்த 23ஆம் திகதி, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. நாடு முழுவதுமிருந்து பேராளர்கள் இதில் கலந்துகொண்டார்கள். தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளும் இதில் அடங்கியிருந்தனர். என்றாலும் சில அரசியல் தலைவர்கள் இதிலிருந்து ஒதுங்கிக்

## 43ஆம் படையணியை தேசிய இயக்கமாக பிரகடனம் செய்தார் சம்பிக்க

கொண்டார்கள். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவுக்கும் இந்த மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும், அவர் அதில் கலந்துகொள்ளவில்லை. அதேநேரம் ஜே.வி.பி. தலைவரும் இதில் பங்கேற்கவில்லை.

43ஆம் படையணி மாநாட்டில் நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கான ஐந்து அம்சங்களைக்கொண்ட கொள்கைப் பிரகடனம் ஒன்று வெளியிடப்பட்டது.

இங்கு கொள்கை விளக்கவுரையாற்றிய சம்பிக்க ரணவக்க, நாட்டை மீட்கும் புரட்சியை நாடாளுமன்றத்திலிருந்து ஆரம்பிக்கப் போவதாக அறிவித்தார். இதனை நடைமுறைப்படுத்த, தேசம் என்ற ரீதியில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார். மக்கள் படும் துன்பங்களையும் கஷ்டங்களையும் பார்க்க முடியவில்லை. மிக மோசமான வங்குரோத்து நிலையில் நாடு விழுந்துவிட்டது. இந்த நிலை தொடர்ந்தால், மியன்மார், வடகொரியாவின் நிலையைவிட மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படுவோம்.

இந்த அரசை மாற்றியே ஆகவேண்டும். இந்த வங்குரோத்து நிலையில், தேர்தல் நடத்தக்கூடிய நேரமுமல்ல இது. நாடாளுமன்றத்திலிருந்து ஒரு புரட்சியை ஆரம்பிப்போம். அதுதான் இதனை தடுக்கக்கூடிய ஒரே வழி என சம்பிக்க நீண்டதொரு உரையை நிகழ்த்தினார்.

நம்பிக்கையோடு காத்திருப்போம், உயர்வோம் உயர்த்துவோம் என்ற தொனியில்தான் இந்த மாநாடு நடந்தது. சம்பிக்கவைப் பொறுத்தவரை, எடுத்த காரியத்தை மிகவும் கனகச்சிதமாகவும் திறம்படவும் செயற்படுத்தக்கூடியவர் என்ற பெருமையை சிங்கள மக்கள் மத்தியில் பெற்றவர் சம்பிக்க. மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் மின்னியல் பொறியியலாளரான இவர், அந்தப் பல்கலைக்கழகத்தில் 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜே.வி.பி. மாணவர் அமைப்பில் தீவிர செயற்பாட்டாளராக இருந்தவர்.

ஜனதா மித்துரோ – மக்களின் நண்பன் – என்ற பெயரில், அரசியல் சார்பற்ற அமைப்பொன்றை உருவாக்கி சமூகப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டவர். இவரோடு வணக்கத்துக்குரிய அத்துரலிய ரத்தன தேரரும் இணைந்து செயற்பட்டார். மிகவும் துடிப்புள்ள அறிவு சார்ந்த மாணவனாகவே சம்பிக்க செயற்பட்டவர் என்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

ஆட்சியை மாற்றும் அமிலப் பரீட்சைக்கு செல்லாமல், பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கண்டே ஆகவேண்டும் என்ற பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் யோசனை, கடும் விமர்சனத்துக்குள்ளாகியிருக்கிறது. சம்பிக்க இந்த அரசை பாதுகாத்து தனது சுயநல அரசியலை முன்னெடுக்கப் பார்க்கிறார் என்பது பல அரசியல்வாதிகளினதும் அரசியல் கட்சிகளினதும் விமர்சனமாக இருக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு எம்.பியானவர் சம்பிக்க. இருந்தும், 43ஆம் படையணியை உருவாக்கி, அரசியலுக்கப்பால் தேசிய நோக்கோடு இந்த தேசிய இயக்கம் செயற்பட்டு வருவதாக கூறும் சம்பிக்க, இந்த தேசிய மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் மத்துமபண்டார ஆகியோருக்கும் அழைப்பு விடுத்திருந்தார். அவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை என்பதும் ஒரு முக்கியமான விடயம்.

சம்பிக்கவின் இந்த செயற்பாட்டில் சஜித் கடும் கொதிப்பிலும் கடுப்பிலும் இருக்கிறார் என்பது தெரியவருகிறது. ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்துகொண்டே, தனது அரசியலை சம்பிக்க முன்னெடுக்கிறார் என்பது கட்சிக்குள்ளும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இது தொடர்பில் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுடன் நேரடியாகவே தொடர்புகொண்டு சில கேள்விகளைக் கேட்டேன்.

**கேள்வி : 43ஆம் படையணி என்ற தேசிய இயக்கத்தின் நோக்கம் என்ன? இலக்கு என்ன?**

**பதில் :** சீரழிந்து பாதாளத்துக்குள் விழுந்து'கொண்டிருக்கும் நாட்டை மீட்பதுதான் எனது நோக்கம்.

**கேள்வி : இதில் வெற்றி பெறலாம் என நினைக்கிறீர்களா?**

**பதில் :** நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகலரும் ஒத்துழைத்தால் வெற்றி நிச்சயம்.

**கேள்வி : உங்களது தேசிய இயக்கத்தின் செயற்பாடுகள் மூலம் சஜித் பிரேமதாசவுக்கும் உங்களுக்கும் இடையில் பிளவு ஏற்பட்டுள்ளதா?**

**பதில் :** பிளவும் ஏற்படவில்லை, முரண்பாடும் ஏற்படவில்லை. ஆனாலும் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட கருத்துகளும் கொள்கைகளும் இருக்கலாம்தானே?

**கேள்வி : எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை நோக்காகக்கொண்டு இப்படி செயல்படுகின்றீர்களா?**

**பதில் :** இல்லை.. இல்லை... இது தேர்தலைப் பற்றி சிந்திப்பதற்குரிய நேரமல்ல. அதற்கு காலம் இருக்கிறது தானே?

உண்மையில், சம்பிக்க ரணவக்க இப்படிக் கூறினாலும், அவருடைய முழுமையான இலக்கு ஜனாதிபதித் தேர்தலாகும். அதற்கான தயார்ப்படுத்தல்களில் அவர் தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டே இருக்கிறார். கடந்த காலங்களிலிருந்து அவருடைய அரசியலை பார்த்தால், அவருடைய ஒவ்வொரு அரசியல் நகர்வும் சாட்சியங்களாக இருக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியினுள், உட்கட்சிப் போராட்டங்கள் நடத்தி, ரணில் விக்ரமசிங்கவுடன் மோதி, வெளியில் வந்த சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தியை ஆரம்பித்து அதன்மூலம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு 43 சதவீத வாக்குகளைப் பெற்று, இப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தோல்வி கண்டவர் சஜித் பிரேமதாச.

எதிர்வரும் தேர்தல்களை இலக்குவைத்து, சஜித் பிரேமதாச செயற்பட்டுக்கொண்டிருக்கும்போது, நிச்சயமாக சம்பிக்கவின் நடவடிக்கைகள் அவருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் வியப்பில்லை. சஜித் பிரேமதாசவும் சம்பிக்க ரணவக்கவும் மோதல்களை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாவிட்டாலும், இப்போதெல்லாம், பொது நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் சஜித், மறைமுகமாக சம்பிக்கவுக்கு பதில் சொல்வதுபோலவே பேசி வருகிறார். கடந்த 23ஆம் திகதி, கொழும்பில் நடந்த சம்பிக்கவின் தேசிய மாநாட்டுக்குப் பின்னர், கொழும்பின் புறநகர்ப் பகுதி ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் பேசிய சஜித்,

படுகுழியில் விழுந்துள்ள நாட்டை குணப்படுத்த சம்பிரதாயங்கள் மட்டும், ஒருபோதும் ஒத்துவராது என்று கூறியுள்ளார்.

இது சம்பிக்கவின் தேசிய மாநாட்டு உரைக்கு நேரடி பதிலளிப்பாகும்.

நிலையானதும் நேர்மையானது மான வேலைத்திட்டத்தின் ஊடாகவே, நாட்டை மீட்டெடுக்க முடியும். நாடாளுமன்றத்தில் தனித்தனி தீர்மானங்களை எடுத்து சுயமாகச் செயற்பட முடியாது. விசேடமாக நீதித்துறை, சட்டவாக்கத்துறை, நிறைவேற்றுத்துறை அதிகாரம் ஆகிய மூன்று தூண்களின் ஒன்றுபட்ட சுழற்சிமுறை இருக்கவேண்டும் எனவும் சஜித் பிரேமதாச கடுந்தொனியில் பதில் கூறியிருப்பது, இருவருக்கு இடையிலும் ஏற்பட்டுள்ள பிளவை தெட்டத்தெளிவாக காட்டுகிறது.

ஐக்கிய மக்கள் சக்திக்குள் சம்பிக்க ரணவக்க இன்னமும் முக்கிய சக்தியாக விளங்குகிறார். கட்சிக்குள் சஜித் பிரேமதாசவுக்கு வலது கையாக இருந்தார். இந்நிலையில், அவர் முரண்பாடுகளை மேலும் வளர்த்துக்கொண்டு கட்சியிலிருந்து வெளியேறினால் அல்லது வெளியேற்றப்பட்டால் அல்லது கட்சியால் ஓரங்கட்டப்பட்டால், இலாபம் அடையப்போவது ஆளுந்தரப்பு மாத்திரமே.

## தனித்துவ அரசியலில் சம்பிக்க குதிப்பு

அதாவது, சம்பிக்கவின் செயல்பாடு மூலம் ஐக்கிய மக்கள் சக்தி பலவீனப்பட்டால், எதிர்க்கட்சியினரால் கொடுக்கப்பட்டுவந்த தொல்லையிலிருந்து ஆளுந்தரப்பு தப்பித்துக்கொள்ளும்.

ஆளும் கட்சியும் அரசாங்கமும் மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து பலவீனமாக இருக்கும் நிலையில், ஐக்கிய மக்கள் சக்திக்குள் ஏற்படுகின்ற பிளவு, ஆளுந்தரப்புக்கு மேலும் மேலும் சாதகமாகவே முடியும் என்பதில் ஐயமில்லை.

இதனால்தான், காட்டாட்சியை ஒழிக்கவேண்டுமாக இருந்தால், சஜித்தும் சம்பிக்கவும் கரம் கோர்த்து செயற்படவேண்டும் என மனோ கணேசன் எம்.பி. பகிரங்கமாகவே அறிவித்தார்.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்திக்குள் முரண்பாடு வெடிப்பதை பற்றியோ அல்லது பிளவு ஏற்படுவதை பற்றியோ பொருட்படுத்தாது, சம்பிக்க தனது தனித்துவ அரசியலை முன்னெடுப்பாராக இருந்தால், சிறுபான்மை மக்கள் மத்தியில் பெரும் சவால்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும்.

சிங்களத் தேசியவாத கட்சியான சிஹல உருமய மூலம் அரசியலுக்குள் பிரவேசித்த சம்பிக்க ரணவக்க, தேசியப் பட்டியல் எம்.பியாக நாடாளுமன்றத்தில் கால் பதித்தார். அதன்பின்னர், ஜாதிக ஹெல உறுமய ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உட்பட பல்வேறு கட்சிகளின் ஊடாக, பல்வேறு பரிமாணங்களில் அரசியலை முன்னெடுத்த சம்பிக்க, பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் சகல தமிழர்களையும் பயங்கரவாத கண்கொண்டே நோக்கினார். புலிகளை ஒழித்தே முடிக்க வேண்டும் என்று திடமாக இருந்தவர்களில் சம்பிக்கவும் ஒருவர். இது இன்னும் மாறாத வடுவாக தமிழர்கள் மத்தியில் இருக்கிறது.

அதேபோல் சம்பிக்கவின் செயற்பாடுகளில்

## சஜித்தும் தனி வழியில்

அதிருப்திகொண்டவர்களாகவே முஸ்லிம்களும் இருக்கின்றனர். முஸ்லிம்கள் பற்றி, அவர் கூறிய கருத்துகளும் அவர் வெளியிட்ட ஆய்வு நூல்களும் இன்னும் சர்ச்சையில் இருக்கின்றன. இவருடைய செயற்பாடுகளையும் கருத்துகளையும் கண்டித்து 2008ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர். அப்போது ஜனாதிபதியாக இருந்தவர் இப்போதைய பிரதமரான மஹிந்த ராஜபக்ஷ.

இப்படியான ஒரு நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான முஸ்தீபுகளில் சம்பிக்க ரணவக்க ஈடுபடுவாராக இருந்தால், எப்பாடுபட்டேனும் தமிழ், முஸ்லிம் மக்களை வெற்றிகொள்வதில்தான் அவரது வெற்றி தங்கியிருக்கும். இந்த அரசியல் ஒருபுறம் இருந்தாலும், விழுந்துகிடக்கும் நாட்டை எப்படியாயினும் கட்டியெழுப்பியே ஆகவேண்டும். ஜே.வி.பி. உட்பட எதிரணிகள், ஒன்று பட்டாலே இது சாத்தியம். மனோ கணேசன் எம்.பி. கூறியதுபோல், கட்டியெழுப்பப்பட வேண்டியது புதிய அரசாங்கத்தை அல்ல: புதிய அரசோடு சேர்ந்த புதிய நாட்டை தான் அதற்காக சஜித் – சம்பிக்க – அநுரகுமார திசாநாயக்க போன்ற ஆளுமைமிக்க தலைமைகள் பிளவுபடாமல் கரம்கோர்ப்பதில்தான் அனைத்துமே தங்கியுள்ளது.

**– க. குணராசா –**


வீடு வாடகைக்கு

கொழும்பு 06, வெள்ளவத்தை விவேகானந்தா வீதியில் அமைந்துள்ள Skyline தொடர்மாடி குடியிருப்பில் 04 அறைகள் மற்றும் 04 குளியலறைகளுடன், 01ஆம் மாடியில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு – 0742 395 434



வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

# இலங்கையின் இரட்டை முகம்!

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் மிக மோசமான விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கும் இலங்கை அரசு - ராஜபக்ஷ நிர்வாகம் - அது தொடர்பில் தன்னை நியாயப்படுத்துவதற்கு பல நடிப்புகளைக் காட்டும். அறிக்கைகள், அறிவிப்புகளைத் தேசத்துக்கு முன்வைக்கும். ஆனால், அவற்றில் எவையும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இதுதான் இலங்கை அரசின் தந்திரம். இலங்கையின் கடந்தகால ஆட்சியாளர்களின் வரலாறும் அதுவே.

அத்தகைய தந்திரம் ஒன்று உடனடியாகக் கையும் மெய்யுமாக அம்பலமாகியிருப்பது நேற்றுமுன்தினம் நடந்தேறியுள்ளது.

தற்காலிக ஏற்பாடுகள் என்ற பெயரோடு 1979இல் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம், கடந்த 43 வருடங்களாக நடைமுறையில் உள்ளது. மனித நாகரிகத்துக்கே ஒவ்வாத - மிருகத்தனமான - மிக மோசமான - மனித மாண்புகளுக்கே முரணான - மிகக் கேவலமான ஒரு சட்டம் என்று நேரடியாக விமர்சிக்கப்படும் இந்தச் சட்டத்தின் விதிமுறைகளை வைத்துக்கொண்டுதான் சட்டத்தின் பெயரால் மிகக் கொடூரமான இனவெறி ஆட்சியைத் தொடர்கின்றது கொழும்பின் பேரினவாத அரசு.

சர்வதேச மட்டத்தில் இதற்கு எதிராக எழுந்த ஒன்றுபட்ட அழுத்தம் காரணமாக இந்தக் கேவலமான சட்டத்தை மாற்றியமைப்பதாக சர்வதேசத்துக்கு கொழும்பு ஆட்சிபீடம் வாக்குறுதி தந்து ஆண்டுகள் பல கடந்துவிட்டன.

சட்டத்தின் பெயரால் மனித நாகரிகத்துக்கே ஒவ்வாத கொடூரத்தைப் புரிந்துவரும் கொழும்பு அரசின் இந்தக் குரூரப் போக்கு, சர்வதேச ரீதியில் கடுமையான கண்டனங்களுக்கும் விமர்சனங்களுக்கும் உள்ளாகியிருக்கின்றது. அடுத்த மாதம் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் இந்தச் சட்டம் பலத்த எதிர்ப்பை கொழும்புக்கு வாங்கித்தரும் என்பதை உணர்ந்த ராஜபக்ஷ ஆட்சியாளர்கள், அந்தச் சட்டத்தை மறுசீரமைக்கின்றோம் என்ற பெயரில் ஒரு சட்டத்திருத்தத்தை கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்து, இப்போது அது வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதில் எந்தப் பெரிய மாற்றமும் இல்லை, பழைய சட்டத்தின் கேடுகெட்ட ஏற்பாடுகள் எல்லாம் திருத்தப்பட்ட சட்டத்தில் அப்படியே இருக்கின்றன என்பதை விலாவாரியாக அம்பலப்படுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

ஆக, புதிய மொந்தையில் பழைய கள். அவ்வளவுதான். இதுவரை மோதகமாக வந்த விவகாரம் இனி கொழுக்கட்டையாக வரப்போகின்றது. வடிவமும் பெயரும்தான் வேறு. உள்ளீடு ஒன்றுதான்.

இந்தச் சட்டத்தை மறுசீரமைக்கிறோம் என்ற நாடகத்தை கொழும்பு அரங்கேற்றும் இச்சமயத்தில் அதன் உண்மை முகத்தை அம்பலப்படுத்தும் ஒரு விடயமும் அரங்கேறியிருக்கின்றது.

ஈஸ்டர் தினத் தாக்குதலையொட்டி இந்தச் சட்டத்தின்கீழ் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கைதுசெய்யப்பட்டு நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றமை அரசுக்கு எதிராகப் பெரும் அழுத்தத்தை சர்வதேச மட்டத்தில் உருவாக்கியிருக்கின்றது.

அவருக்குப் பிணை வழங்கப்படும் என்று அரச தரப்பு உறுதியளித்தது. அவரது பிணை மனு புத்தளம் மேல்நீதிமன்றத்தில் எடுக்கப்படும்போது அதனை அரச தரப்பு ஆட்சேபிக்காது என்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் தரப்பால் உறுதி கூறப்பட்டது. ஆனால், நேற்றுமுன்தினம் புத்தளம் மேல்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இந்தச் சட்டத்தின் உண்மை முகத்தை அம்பலப்படுத்தினார் நீதிபதி.

அரச தரப்பு, பிணை வழங்குவதை ஆட்சேபிக்க வில்லைதான். ஆனால், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் பிணை வழங்குவதற்கு எங்கே இடமிருக்கின்றது என்று கேட்டார் நீதிபதி. அதனால் பிணை வழங்க முடியாது என்ற உத்தரவையும் அவர் வழங்கினார். அப்படி பிணை வழங்கும் திருத்தம் கூட இப்போது வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள சட்டத் திருத்தத்தில் இல்லை. அஹ்னாப் ஜஸீமுக்கு பிணை வழங்கிய அதே புத்தளம் மேல்நீதிமன்றம், பிணை வழங்குவது தமது அதிகார வரம்பிற்கு உட்பட்டதல்ல எனக் கூறி சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவிற்கான பிணைக்கோரிக்கையை நிராகரித்திருக்கின்றது.

ஆக, இப்போது வந்திருக்கும் சட்டத்திருத்தமும் பௌத்த - சிங்களப் பேரினவாத அரசின் இனவெறிப் போக்கின் கொடூரக் கருவியாகவே தொடரும் ஓர் ஏற்பாடுதான். சர்வதேசத்தை சமாளிக்க வழமையாக கூறும் அதே பொய்களைக் கூறிக்கொண்டிருக்கிறது இலங்கை. போர்த்திக்கொண்டு படுப்போமென கூறிய இலங்கை சற்று வித்தியாசமாக இப்போது படுத்துக்கொண்டு போர்த்துவோம் என்று கூறியிருக்கிறது.

ஜெனீவா மாநாடு முடிந்த பின்னர் இலங்கை அரசு தனது சுயரூபத்தை காட்டும். வழமைபோல்!

## ★ அமைச்சரவைக் கூட்ட விடயங்களை லீக் செய்வது யார்? எழுந்தது சர்ச்சை

## ★ கஞ்சா பயிரின் நன்மைகளை டயானா எம்.பிக்கு விளக்கிய ஞானசார தேரர்

## ★ பிரதமர் மஹிந்தவின் பணம் திருடப்பட்டமை எப்படி தெரியவந்தது?

## ★ ஊடகங்களிடம் அமைதி காப்பது ஏன்? - பெசில் சொன்ன இரகசியம்

## ★ சம்பிக்கவினால் டென்ஷனாகியிருக்கும் சஜித்




இந்தியாவின் 73ஆவது குடியரசு தின வைபவம் கடந்த புதன்கிழமை கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரின் வாசஸ்தலத்தில் நடைபெற்றது.

அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர்கள் பெசில் ராஜபக்ஷ, ஜீ.எல்.பீரிஸ், டலஸ், டக்ளஸ், மஹிந்த அமரவீர, நிமல் சிறிபால உட்பட்ட பல அரசியல்வாதிகள் கலந்துகொண்டனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இருவரும் அருகருகே அமர்ந்திருந்தமை பலரின் கவனத்தை ஈர்த்தது. அரசியலில் இருவரும் எதிரெதிர் முகாம்களில் இருந்தாலும் பொது நிகழ்வுகளில் ஒன்றாக அமர்ந்திருந்தமை அங்கு பலராலும் சிலாகித்துப் பேசப்பட்டது.

''சம்பந்தன் ஐயாவையும் உங்களையும் வைத்து ஒரு புகைப்படம் எடுக்கலாமா?'' என்று ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சர் டக்ளஸிடம் கேட்க, அமைச்சரோ, ''தாராளமாக எடுங்கள்'' என்றார்.

''சம்பந்தன் ஐயாவின் மாஸ்க்கை கழற்றினால் நல்லதல்லவா?'' என்று அமைச்சர் டக்ளஸ் கூற, அந்த ஊடகர் அதனை சம்பந்தன் ஐயாவின் பாதுகாப்பு அதிகாரிகளிடம் சொன்னார். பிறகு அவர்கள் ஐயாவின் முகத்திலிருந்த மாஸ்க்கை கழற்றினர். உடல்நிலை காரணமாக சம்பந்தன் ஐயா விரைவில் நிகழ்விலிருந்து வெளியேறினார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரி நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார். நிகழ்ச்சி வரவேற்புரையில் மைத்ரியின் பெயர் எங்குமே சொல்லப்படவில்லை என்பதால் மனதுக்கு சரியில்லையோ என்னவோ நிகழ்வு முடிய முன்னரே மைத்ரி வெளியேறினார். புறப்படாமல் பெசிலின் அருகே சென்று அவர் விடைபெற்று செல்வதைக் காணமுடிந்தது.

இந்திய – இலங்கை கலை, கலாசார நிகழ்வுகளுடன் நடந்த இந்த நிகழ்வில் இந்திய உணவு வகைகள் பரிமாறப்பட்டன. மதுபான விருந்து இம்முறை தவிர்க்கப்பட்டிருந்தது. நிகழ்வின் இடைவெளியில் அமைச்சர் பெசிலை சூழ்ந்துகொண்ட ஊடகர்கள் சிலர், நாட்டின் நிலைமை மற்றும் பொருளாதார நிலைமை குறித்து வினவினர்.

''மினிஸ்டர் நீங்கள் இப்போது ஊடகங்களைக் கண்டுகொள்வதில்லை. உங்களின் கருத்துகளை சொல்லலாம் அல்லவா?'' என்றார் ஊடகர் ஒருவர்.

''ஐயையோ நான் ஏதாவது சொல்ல, பிறகு நீங்கள் ஏதாவது எழுத, ஏன் இந்த வம்பு? அதனால்தான் அமைதி காக்கிறேன். மீண்டும் சந்திப்போம்'' என்றார் பெசில்.

இந்த நிகழ்வில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோர் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### சஜித் விசனம்

43ஆவது படையணி என்று சம்பிக்க ரணவக்க ஆரம்பித்திருக்கும் அமைப்பினால் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச கடும் அதிருப்தியில் இருப்பதாகத் தகவல்.

அதிலும் சஜித்தும் சம்பிக்கவும் இணைந்து செயற்படவேண்டுமென தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் விடுத்த பகிரங்க வேண்டுகோள் சஜித்துக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளதாக உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக தாம் போட்டியிடவுள்ள நிலையில், சம்பிக்கவின் வருகை அதனை குழப்புகிறதா என்பது தொடர்பில் சஜித் கட்சியின் உறுப்பினர்கள் சிலருடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

### கோட்டாவின் அறிவுரை

கடந்த வாரம் மின்வெட்டு தொடர்பில் நடந்த விசேட கூட்டமொன்றில், நாட்டில் நிலவும் மின்வெட்டு குறித்து அமைச்சர்கள் காமினி லொக்குகே, உதய கம்மன்பில ஆகியோர் விளக்கமளித்தனர். இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி கலந்துகொண்டிருந்தார்.

இவர்களின் விளக்கங்களைக் கேட்ட ஜனாதிபதி, அவர்களை கண்டிக்கும் வகையில் பேசத் தொடங்கினார்.

செய்திகளை பார்த்தால் மின்வெட்டு பிரச்சினைக்குத் தீர்வே இல்லை என்பதுபோல்தான் உணரத் தோன்றுகிறது. மக்களின் பிரச்சினைகளை தீர்க்க உடனடி நடவடிக்கைகள் எடுங்கள். மின்வெட்டினால் பிள்ளைகளுக்கு கல்வி கற்க முடியவில்லை. வியாபார நடவடிக்கைகள் சீர்குலைகின்றன. வரி செலுத்தும் மக்களுக்கு சேவை வழங்குவது உங்களின் பொறுப்பு. ஏதும் பிரச்சினைகள் இருந்தால் அரச மேல்மட்டத்தில் பேசுங்கள். அவற்றை வெளியில் பேசினால் தீர்வு வராது. என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, மின்சக்தி அமைச்சுக்குத் தேவையான நிதியை வழங்குமாறு நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவை பணித்தார்.

### டயானா எம்.பியின் ஆலோசனை

முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் 82ஆவது பிறந்த நாளையொட்டி நாரஹேன்பிட்டி அபயாராமையில் விசேட தான நிகழ்வொன்று இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட டயானா கமகே எம்.பியுடன் அங்கு வந்தவர்கள் பேச்சுக்கொடுக்கத் தொடங்கினர். நாடாளுமன்றத்தில் அடிக்கடி கஞ்சா குறித்து பேசுவது குறித்து டயானா எம்.பியிடம் பலரும் வினவினர்.

''நான் இதுபற்றிய ஆய்வொன்றை மேற்கொண்டே சில யோசனைகளை முன்வைத்தேன். இவற்றை ஏற்றுமதி செய்தால் பெருமளவு அந்நிய செலாவணி கிடைக்கும்'' என்று அனைவரிடமும் விளக்கமாகக் கூறிக்கொண்டிருந்தார் எம்.பி.

அப்போது அங்கு கருத்து வெளியிட்ட ஞானசார தேரர் எம்.பி., ''உங்களுக்குத் தெரியுமா பார்க்கின்சன் நோய் பற்றி. கஞ்சா விதைகளிலிருந்து அதற்கு மருந்து தயாரிக்கிறார்கள். உலகில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளில் அது மேலும் உறுதியாகியுள்ளது'' என்றார்.

### மஹிந்த - மைத்ரி

முன்னாள் எம்.பி. திலங்க



சுமதிபாலவின் புதல்வரின் திருமணம் கொழும்பு ஹில்ரன் ஹோட்டலில் கடந்தவாரம் நடைபெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்ரி உட்பட்ட பிரமுகர்கள் இதில் கலந்துகொண்டிருந்தனர். மைத்ரியுடன் மஹிந்த நீண்டநேரம் அரசியல் சுவாரஸ்யங்களை பேசிக்கொண்டிருந்தார். இருவரும் நீண்டநேரம் மனம்விட்டு பல விடயங்களை பேசிக்கொண்டிருந்தனர்.

கிராமத்து கல்யாணம் ஒன்றில் கலந்துகொண்டிருப்பது போலான உணர்வு தனக்கு இருப்பதாக அங்கு வந்தவர்களிடம் சொன்னாராம் மஹிந்தர். மைத்ரி மஹிந்தவுடன் பேசுவதைக் கண்ட சிலர் மீண்டும் அப்பம் சாப்பிட தயாராகிறாரோ மைத்ரி என்று நகைச்சுவையாக கூறினர்.

### திருடப்பட்ட பணம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வங்கிக் கணக்கிலிருந்து சுமார் 3 கோடி ரூபா பணம் திருடப்பட்ட விடயம் குறித்தும் அதனை மேற்கொண்ட அவரின் செயலர் குறித்தும் செய்திகள் வெளிவந்துள்ளன.

கொழும்பிலுள்ள பிரபல புடவை வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளர் பிரதமர் மஹிந்தவின் நண்பர். மஹிந்தவின் கடனட்டையில் ஒன்றரை இலட்சம் ரூபா பணம் ஆடைகள் கொள்வனவு செய்திருப்பது தொடர்பில் அவர் பிரதமரிடம் வினவியபோதே மேற்படி கடன் அட்டையை அவரது செயலர் நீண்டநாள் பயன்படுத்தியிருப்பது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தெரியவரும்போது பிரதமரின் வங்கிக் கணக்கில் வெறும் 8 இலட்ச ரூபா மட்டுமே இருந்துள்ளது. எவ்வாறாயினும் பணத்தை அடிக்கடி எடுத்திருப்பது குறித்து ஒப்புக்கொண்ட அந்தச் செயலாளர் உடனடியாக 25 இலட்சத்தை பிரதமரிடம் கையளித்துள்ளார்.

மிகுதியை விரைவில் திருப்பித் தருவதாக அவர் உறுதியளித்ததையடுத்து அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதை தவிர்த்தார் பிரதமர் என்கின்றன உள்ளக தகவல்கள்.

### அமைச்சரவை விடயங்களை லீக் செய்வது யார்?

கடந்த வார அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றபோது முக்கியமான ஒரு விடயம் பேசுபொருளானது.

அமைச்சரவையில் தாம் முன்வைத்த பத்திரம் ஒன்று குறித்து விவாதிக்கப்பட முன்னரே பத்திரிகைகளில் வெளிவந்துள்ளதாக அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன இங்கு சுட்டிக்காட்டினார்.

''இந்த விடயங்களை வெளியில் விடுவது யாரென்று எனக்குத் தெரியும். இது நீண்டநாள் நடக்கும் ஒரு விடயம். இப்படி செய்யாதீர்கள். இது அமைச்சரவை கூட்டுப்பொறுப்பை மீறும் செயலாகும்'' என்று சொன்னார் சந்திரசேன.

அமைச்சரவை ஆராயும் விடயங்கள் வெளியில் செல்வது குறித்து அமைச்சர்களான ரோஹித அபேகுணவர்தன, டலஸ் அழகப்பெரும ஆகியோரும் விசனத்துடன் கருத்து வெளியிட்டனர்.

''இப்படியான செயற்பாடு முன்னரும் நடந்தது. இப்போது நிலைமை மோசமாகியுள்ளது. அமைச்சரவை கூட்டுப்பொறுப்பை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும்'' என்று இதன்போது குறிப்பிட்டார் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ.

**- சிவா இராமசாமி -**

**(இந்த பத்தி தொடர்பான வாசகர்களின் கருத்துகளை 076 1393805 என்ற WhatsApp இலக்கத்திற்கு அனுப்பலாம்.)**

# சிங்களக் கட்சிகளின் தேசிய உணர்வும் கொழும்பு போர்ட் சிட்டியும்

**அ.நிக்ஸன்**

சீன அரசின் முதலீட்டுடன் முன்னெடுக்கப்படும் கொழும்பு போர்ட் சிட்டியின் ஒரு பகுதி விரைவில் திறக்கப் படவுள்ள நிலையில், ஜே.வி.பி. உள்ளிட்ட பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் அனைத்தும் அதனை இலங்கைத் தீவின் ஒட்டுமொத்த அபிவிருத்தியாகவே கருதுகின்றன.

ஆரம்பத்தில் எதிர்ப்பை வெளிப்படுத்திய போதும், இந்தியாவைக் கடந்து சீனாவுடன் நெருக்கத்தைப் பேணவேண்டுமென்ற ஒருமித்த கொள்கை அடிப்படையில் அதனை ஒரு தேசிய அபிவிருத்தியாகவே சிங்கள அரசியல் கட்சிகள் கருதுகின்றன என்பதை சமீபகால நகர்வுகள் காண்பிக்கின்றன.

சீனாவின் உதவியைப் பெறுவது, ஆனால், சீனாவின் பக்கம் முழுமையாகச் சாய்ந்துவிடக் கூடாதென்பதும், அதேநேரம், அமெரிக்க - இந்திய அரசுகளின் ஒத்துழைப்பும் இலங்கைக்கு அவசியம் என்ற எண்ணக்கருவும் ரணில், சஜித் மற்றும் பாட்டாளி சம்பிக்க ரணவக்க போன்ற அரசியல்வாதிகளிடம் உண்டு. இந்த எண்ணக்கரு ராஜபக்ஷ ஆட்சிக்காலத்திலேயே நிறுவப்பட்டது.





இலங்கையின் இறைமை தமிழர்களுக்கு மாத்திரமல்ல, சீனாவுக்குக்கூட சிறிதளவேனும் பங்கிடக்கூடாது என்பதிலும் பிரதான சிங்களக் கட்சிகள் நிதானமாக நகர்கின்றன.

சீன அரசு முழுமையான உரித்தாளராக இருந்தாலும், கொழும்பு போர்ட் சிட்டியில் ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகளின் முதலீட்டாளர்களும் முதலீடுகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்கிலேயே இலங்கை செயற்படுகின்றது.

ஏனெனில், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் உலகப் புகழ்பெற்ற பிரித்தானியாவைச் சேர்ந்த முதலீட்டாளரும் ரோத்ஸ்சைல்ட் குடும்ப உறுப்பினருமான நதானியேல் ரோத்ஸ்சைல்ட் (Nathaniel Rothschild) கொழும்புக்கு வந்திருந்தார். கொழும்புத் துறைமுக வர்த்தக நிதி நகரத்துக்கும் சென்று பார்வையிட்டிருக்கிறார்.

அவருடன் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பிரபல பிரித்தானிய அரசியல்வாதியும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான நிரஞ்சன் ஜோசப் டி சில்வா தேவா ஆதித்யா (Niranjan Joseph De Silva Deva Aditya) மற்றும் வர்த்தகத்துறை விற்பன்னரான ராஜன் பிரிட்டோ ஆகியோரும் வருகை தந்திருக்கின்றனர். 73 வயதான நிரஞ்சன் தேவா பிரித்தானியா, இலங்கை ஆகிய நாடுகளின் இரட்டைப் பிரஜா உரிமையுள்ளவர்.

1999ஆம் ஆண்டுமுதல் 2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தவர். தற்போது இலங்கையில் தேயிலை. றப்பர் மற்றும் தென்னந்தோட்டங்கள் போன்ற வர்த்தகச் செயற்பாடுகளை இலங்கையில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார். அதற்கேற்ப தனியார் நிறுவனம் ஒன்றை இயக்கி அதன் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் உள்ளார்.

வடக்கு, கிழக்கில் வாழும் ஈழத் தமிழர்கள் பௌத்தர்களாக ஏன் மாறக்கூடாது அல்லது மாற்றிவிடக்கூடாது என்ற சிந்தனையைத் தோற்றுவித்தவர்களில் நிரஞ்சன் தேவாவும் ஒருவர்.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் நோர்வேயின் ஏற்பாட்டோடு சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருந்த 2006ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் பலவற்றுக்கு இவருடைய உந்துதல் காரணமாக அமைந்திருந்தன. இவர் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இலங்கைக்குமான ஒரு நிழல் தூதுவராகவும் அன்று செயற்பட்டிருந்தார்.

2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஐரோப்பிய ஒன்றியத்தின் மற்றுமொரு மூத்த உறுப்பினரான றொபேட் ஈவான்சுடன் கொழும்புக்கு நிரஞ்சன் தேவா வந்திருந்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு உறுப்பினராகவும் இந்தியாவுடனான உறவுகளுக்கான தூதுக்குழு மற்றும் ஆசியான் நாடுகளுடனான உறவுகளுக்கான தூதுக்குழு ஆகியவற்றின் உறுப்பினராகவும் பதவி வகித்திருந்த நிரஞ்சன் தேவாவின் இலங்கை அரசுக்கான சேவையைப் பாராட்டி, பௌத்த மகா சங்கம் 2006ஆம் ஆண்டு விஸ்வகீர்த்தி ஸ்ரீலங்கா அபிமானி என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்திருந்தது.

ஆகவே, ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமான மூத்த சர்வதேச அரசியல்வாதியும் சர்வதேச வர்த்தகச் செயற்பாட்டாளருமான நிரஞ்சன் தேவா, பிரித்தானிய நதானியேல் ரோத்ஸ்சைல்டடை மாத்திரமல்ல, ரஷ்ய நாட்டின் தொழிலதிபர் ஆண்ட்ரி மெல்னிச்சென்கோவையும் சென்ற மார்ச் மாதம் கொழும்புக்கு அழைத்துவந்து போர்ட் சிற்றியைக் காண்பித்துள்ளார்.

ரஷ்யரான மெல்னிச்சென்கோ, சுவிஸ்லாந்து நாட்டைச் சேர்ந்த உர நிறுவனமான யூரோசெம் குழுமத்திலும், ரஷ்யாவைச் சேர்ந்த நிலக்கரி மின் நிறுவனமான சுக் நிறுவனத்திலும் பிரதான முதலீட்டாளர். கொழும்பு போர்ட் சிற்றியின் மூலோபாயத் திட்டமிடல் குறித்து இவர் கவனம் செலுத்தியிருந்தார்.

இலங்கை முதலீட்டுச் சபைத் தலைவர் சஞ்சயா மொஹட்டாலா, அதன் இயக்குநர் ஜெனரல் பசன் வனிகசேகர ஆகியோருடனும் சென்ற மார்ச் 18ஆம் திகதி இவர் கலந்துரையாடியிருக்கிறார்.

ஆகவே, கொழும்பு போர்ட் சிற்றித் திட்டத்தை ஜே.வி.பி. உள்ளிட்ட சிங்கள எதிர்க்கட்சிகளும் விரும்புகின்றன. இலங்கைத் தீவின் பொருளாதார வளர்ச்சிக்கானது என்றே அனைத்துச் சிங்களக் கட்சிகளும் கருதுகின்றன.

அதாவது சீனாவுடன் இணைந்து பொருளாதாரம். பௌத்த கலாசாரம் என்பதில் இலங்கை பயணிக்க வேண்டுமென்ற ஆழமான நம்பிக்கை 1972ஆம் ஆண்டு இலங்கை பிரித்தானியாவிடமிருந்து குடியரசாகியபோதே எழுந்தது. ஈழவிடுதலை அரசியல் போராட்டம் 1983ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டமாக மாறியபோது அதற்கு இந்தியா வழங்கிய ஆதரவினால் இலங்கையின் அந்த நம்பிக்கை மேலும் வலுப்பெற்றதெனலாம்.

இலங்கைச் சிங்கள மக்களுக்கும் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் இந்தியா தொடர்பாக இருந்த அச்சத்தை சீனா மெது மெதுவாகப் பயன்படுத்த ஆரம்பித்தது. ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி ஆட்சியமைத்திருந்தாலும் சீனாவுடனான உறவைத் தமது கட்சிக் கொள்கைளுக்கேற்ப வெவ்வேறு வடிவங்களில் பிரதிபலித்திருந்தன. அதன் நீட்சியே 2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் மெருகூட்டப்பட்டதெனலாம்.

ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை இல்லாதொழித்தால் மாத்திரமே இந்தோ-பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பைப் பலப்படுத்த முடியுமென 2009 ஆம் ஆண்டு அமெரிக்காவும் இந்தியாவும் கூட்டாக நம்பிய அந்த இறுதிச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தியது சீனா.

இந்தோ - பசுபிக் பாதுகாப்பில் ஆதிக்கத்தைச் செலுத்த யார் முந்துவது என்பதில் எதிரும் புதிருமாகப் போட்டியிட்டு வந்த அமெரிக்கா, சீனா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் புலிகளை ஒழிப்பதில் கூட்டாக உதவியளித்திருந்ததாக அப்போது பிரதமராக இருந்த அமரர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகவே கூறியதோடு நன்றியும் தெரிவித்திருந்தார்.

ஆனால், 2009ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் இலங்கையில் அதிகம் துணிவோடு கால்பதித்தது சீனா. போர் முடிந்ததும் 2010ஆம் ஆண்டு 500 மில்லியன் டொலர்களை வழங்கிய சீனா, 2011ஆம் ஆண்டு கொழும்பு போர்ட் சிட்டிக்கான பேச்சுகளை ஆரம்பித்தது.

பௌத்தகுருமாரின் மெதுவான எதிர்ப்புகளுக்கு மத்தியில் 2014ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மஹிந்த ராஜபக்ஷவும் சீன ஜனாதிபதியும் அதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தனர். அப்போது கொழும்பு போர்ட் சிற்றி (Colombo Port City) என்றுதான் இதற்குப் பெயரிடப்பட்டிருந்தது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதவிக்கு வந்த மைத்திரி - ரணில் அரசாங்கம் திட்டத்தைத் தொடர்ந்து ஆதரித்ததுடன், பௌத்த குருமாரின் எதிர்ப்புகளைச் சமாளிக்க 2016ஆம் ஆண்டு பெயரில் மட்டும் மாற்றம் செய்தது. அதன்படி கொழும்பு சர்வதேச வர்த்தக நகரம் (Colombo International Financial City - CIFC) என்று இத்திட்டத்திற்குப் பெயரிடப்பட்டது.

**தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை இல்லாதொழித்தால் மாத்திரமே இந்தோ-பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பைப் பலப்படுத்த முடியுமென 2009இல் அமெரிக்காவும் இந்தியாவும் கூட்டாக நம்பிய அந்த இறுதிச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தியது சீனா**

இதனால் கொழும்புத் துறைமுகத்துக்கு ஆபத்தில்லையென அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்ரிபால சிறிசேன உறுதியளித்திருந்தார். 2020ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று மீண்டும் ராஜபக்ஷ குடும்பம் ஓகஸ்ட் மாதம் ஆட்சியமைத்த பின்னரும், இந்தப் பெயரில் மாற்றம் செய்யப்படவில்லை.

ஆகவே, இவ்வாறான தோற்றப்பாடுகளே சீனாவின் பக்கம் இலங்கை சென்றுவிட்டது எனவும் இன்னும் சில ஆண்டுகளில் பொருளாதார மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் சீனாவின் கூட்டாளி நாடாக இலங்கை இருக்குமெனவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால், இங்கு கவனிக்கப்படவேண்டியது ஈழத்தமிழர்கள் விவகாரமே. அதாவது, மேற்குலகம், ஐரோப்பா உள்ளிட்ட புலம்பெயர் நாடுகளில் 2009ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான ஈழத்தமிழர்களின் அரசியல், பொருளாதாரச் செயற்பாடுகள் உள்ளிட்ட அரசியல் விடுதலைக்கான சர்வதேச ரீதியான அத்தனை செயற்பாடுகளையும் முற்றாகவே அழிக்கவேண்டுமென்பது சிங்கள ஆட்சியாளர்களின் பிரதான இலக்கு.

அதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் தேவை என்பதைப் புரியாதவர்கள் அல்ல சிங்கள ஆட்சியாளர்கள். ஆனால், இலங்கையை நோக்கி அமெரிக்காவும் இந்தியாவும் கீழிறங்கி வரவேண்டும் என்பதே அவர்களின் இராஜதந்திரம். இதனை இரண்டு வகையாகப் பார்க்கலாம்.

ஒன்று - இந்தியாவைக் கடந்து அனைத்து நடவடிக்கைகளுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகமும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கையிடம் வரவேண்டும் என்பதே முக்கிய நோக்கம்.

அதாவது, 2009ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னர் ஈழத்தமிழர் விவகாரம் உள்ளிட்ட இலங்கை குறித்த விடயங்களை அமெரிக்கா போன்ற வல்லாதிக்க நாடுகள் புதுடில்லியைக் கேட்டுத்தான் கையாண்டு வந்தன.

இரண்டாவது - அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளோடு சமாந்தரமான உறவுகளைப் பேணுவது.

அதாவது, ஆசியாவில் இலங்கை சிறிய நாடாக இருந்தாலும், இலங்கையை மேற்குலகமும் ஐரோப்பிய நாடுகளும் புதுடில்லியைக் கடந்து முக்கியப்படுத்த வேண்டும் என்பதில்தான் சமாந்தர உறவுக்கான இராஜதந்திரத்தை இலங்கை கையாள்கின்றது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் அமெரிக்க இராஜாங்கச் செயலாளராக இருந்த மைக் பொம்பியோ இலங்கைக்கு வந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்ததிலிருந்து, இலங்கையை அமெரிக்காவின் ஜோ பைடன் நிர்வாகமும் இந்தியாவைக் கடந்து நேரடியாகவே கையாள ஆரம்பித்துள்ளதெனலாம்.

இந்த இடத்தில்தான் கொழும்பு போர்ட் சிட்டியில் மேற்குலகமும் ஐரோப்பிய நாடுகளும் முதலீடு செய்யக்கூடிய முறையில் நிரஞ்சன் தேவாவை இலங்கை பயன்படுத்துகின்றது. நதானியேல் ரோத்ஸ்சைல்ட் கனடாவிலும் மிகப் பெரிய முதலீட்டாளர். அவ்வாறானவர்கள் கொழும்பு போர்ட் சிட்டியில் முதலீடு செய்தால் நிச்சயம் ஏனைய மேற்குலக முதலீட்டாளர்களும் காலப்போக்கில் வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

அதற்கேற்றவாறே ஆசியான் நாடுகளை உள்ளடக்கிய பிராந்திய பொருளாதாரக் கட்டமைப்பு ஒப்பந்தம் (Regional Comprehensive Economic Partnership- RCEP) ஒன்றை சீனா கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி கைச்சாத்திட்டது. அமெரிக்க நட்பு நாடுகளான அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய 15 நாடுகளை உள்ளடக்கிய இந்த ஒப்பந்தம் அடுத்த ஆண்டு செயற்படவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திடவில்லை. ஆனாலும் இரண்டு ஆண்டுகளில் இந்தியா இணைந்துகொள்ள முடியுமென சீனா கூறியுள்ளது.

இதேவேளை, சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான வர்த்தகம் இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் அமெரிக்க டொலர் அடிப்படையில் 70.1 சதவீதம் உயர்ந்து 48.16 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளதாக சென்ற திங்கட்கிழமை வெளியிடப்பட்ட சீனாவின் சுங்கத் திணைக்களத் தகவல்கள் கூறுவதாக ஆளும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆங்கிலச் செய்தித் தளமான குளோபல் ரைம்ஸ் (Global Times) செய்தி வெளியிட்டுள்ளது.

குறிப்பாக, கடந்த ஆறு மாதங்களில் இந்தியாவுக்கான சீன ஏற்றுமதி 64.1 சதவீதம் அதிகரித்துள்ளது, அதேநேரத்தில் இறக்குமதி 90.2 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும் சென்ற ஏழாம் திகதி வெளியிடப்பட்டுள்ள அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளின் மொத்த வர்த்தகம் 92.89 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியிருப்பதாக சீனாவிலுள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு COVIDஇன் தாக்கம் காரணமாக சீனாவுடனான ஒட்டுமொத்த வர்த்தகம் 2019 ஜனவரி - செப்டெம்பர் மாதத்தில் (60.5 பில்லியன் அமெரிக்க டொலர்) 13.1% குறைந்துள்ளது. இது 2019ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் (69.7 பில்லியன் அமெரிக்க டொலர்) இருந்ததாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆகவே, சீனாவுடன் இலங்கை ஏன் பொருளாதார ரீதியில் நெருக்கமாகின்றது அல்லது அடிமைப்படுகின்றதென இந்திய அரசு கேள்வி தொடுக்க முடியாது. கை நீட்டவும் முடியாது.

அத்துடன், சீனாவின் RCEP எனப்படும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட நாடுகளும் கொழும்பு போர்ட் சிட்டியில் முதலீடு செய்யக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இலங்கை முதலீட்டுச் சபை இதற்கான பேச்சுகளை ஆரம்பித்துள்ளதாக கொழும்பு உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

ஆகவே, இந்தோ - பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களில் அமெரிக்காவோடும் பொருளாதாரத்துக்குச் சீனாவோடும் உறவு என்ற இரட்டை நிலைப்பாட்டை இலங்கை கடைப்பிடிப்பதால், தற்போதைக்குப் பிரதான வல்லாதிக்க நாடுகளுக்குப் பிரச்சினை இருக்காது.

ஆனாலும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் இலங்கை, சீனாவின் முழுமையான கூட்டாளியா இல்லையா என்பதை அறிவிக்க வேண்டியதொரு நிர்ப்பந்தம் எழலாம். இந்தோ - பசுபிக் பாதுகாப்பு என்று வரும்போது நிச்சயமாக இலங்கை, அமெரிக்கா பக்கமே நிற்கவேண்டிய கட்டாயச் சூழலும் உண்டு. ஏனெனில், ஈழத்தமிழர் விவகாரம் அந்த அளவுக்கு இலங்கையைக் கட்டிப்போட்டுள்ளதெனலாம்.



# ஒமிக்ரொன் அலை வீசும்

**சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண எச்சரிக்கை**

நாட்டில் அடையாளம் காணப்படும் நோயாளர்களில் 90 வீதமானர்கள் ஒமிக்ரொன் திரிபுடையவர்களாக காணப்படுகின்றனர். ஏனைய 10 வீதத்தினர் டெல்ட்டா திரிபுடையவர்களாக காணப்படுகின்றனர். எனினும், எதிர்வரும் வாரங்களில் நூற்றுக்கு நூறு வீதம் ஒமிக்ரொன் திரிபே நாட்டில் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதனால், ஒமிக்ரொன் அலை உருவாகுவதை தடுக்க முடியாது - என பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவருடைய முழு செவ்வியும் வருமாறு;



**Q நாட்டில் கொரோனா தொற்றின் தாக்கம் எவ்வாறுள்ளது?**

கொரோனா தொற்றுக் குள்ளாகும் நோயாளர்களின் எண்ணிக்கை எதிர்பாராத வகையில் அதிகரித்துகொண்டிருக்கின்றது.

கடந்த 4 கொரோனா அலைகளை விடவும் இந்த புதிய திரிபினால் நாளுக்கு நாள் அடையாளம் காணப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துவருகின்றது.

**Q அடிமட்டத்தில் புதிய திரிபு எந்தளவு தாக்கம் செலுத்தியுள்ளது?**

அடிமட்டத்திலிருந்து பார்க்கும்போது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் ஒமிக்ரொன் திரிபு இருப்பது தெரிகின்றது. நினைத்துப் பார்க்க முடியாதளவிற்கு தொற்று பரவும் வீதம் அதிகரித்துள்ளது. அடையாளம் காணப் படுகின்ற நோயாளர்களின் எண்ணிக்கையை பார்க்கும்போது, ஒமிக்ரொன் திரிபு அடிமட்டத்தை ஆக்கிரமித்துள்ளது என்று கூறலாம்.

கடந்த கொரோனா அலைகளைவிட தொற்று பரவும் வீதமானது உயர்ந்த மட்டத்தில் (ஐலெவல்) இருக்கின்றது. குறிப்பாக, வைரஸ் உடலுக்குள் சென்று அறிகுறிகளை தோற்றுவிக்கும் காலமும் மிக மிகக் குறைவாகவுள்ளது. தற்போது, ஒன்று அல்லது இரண்டு நாட்களில் நோய் தொற்றுக்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

**Q ஒமிக்ரொன் ஒரு நபரிடமிருந்து ஏனையோருக்கு பரவும் வீதம் எவ்வாறுள்ளது?**

ஆரம்பத்தில் பரவிய வைரஸ்களின் வீதத்தைவிட ஒமிக்ரொன் திரிபானது 7 மடங்கு அதிகமாக பரவுகின்றது. அடிமட்டத்தில் வைரஸ் பரவுவதை பார்க்கும்போது, ஒருவரிடத்திலிருந்து ஐவருக்கல்ல, அதனை விட 7 மடங்கு அதிகமாக பரவுகின்றது.

**Q நாட்டில் ஆரம்பத்திலிருந்த டெல்ட்டா திரிபு பரவும் வேகம் தற்போது குறைவடைந்துள்ளதா?**

பதில் : ஒமிக்ரொன் திரிபின் இரு உப திரிபுகள் இலங்கையில் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு மாதிரிகளை பார்க்கும்போது, நாட்டில் அடையாளம் காணப்படும் நோயாளர்களில் 90 வீதமானவர்கள் ஒமிக்ரொன் திரிபுடையவர்களாக காணப்படு கின்றனர். 10 வீதமானவர்களே டெல்ட்டா தொற்றாளர்களாக காணப் படுகின்றனர். ஆனால், எதிர்வரும் வாரங்களில் நுற்றுக்கு நூறு வீதம் ஒமிக்ரொன் திரிபே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**Q ஒமிக்ரோன் திரிபு சமூக பரவலாக மாறியுள்ளதா?**

ஆம். ஒமிக்ரொன்திரிபு சமூகமயமாகிவிட்டது என்றே கூற முடியும்.

**ஒமிக்ரொன் திரிபு சமூகமயமாகிவிட்டது**

**Q நாட்டில் புதிய திரிபு பரவும் நிலையில், பி.சி.ஆர். பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளனவா?**

இல்லை. இதுவரை பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப் படவில்லை. இதுவரை 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் வரையான பி.சி.ஆர். பரிசோதனைகளே முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றிலிருந்தே தற்போது 900 வரையான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். ஆனால், அடிமட்டத்தில் தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களின் எண்ணிக்கை இதனைவிட அதிகமாகும். சரியான தகவல்கள் இல்லாதமையினாலேயே இந்தளவான எண்ணிக்கை பதிவாகின்றது.

ஒருவேளை, பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரை அதிகரித்தால், நாளொன்றுக்கு 2 ஆயிரம் முதல் 2 ஆயிரத்து 500 வரையான நோயாளர்கள் அடையாளம் காணப்படலாம். ஆனால், நாளுக்கு நாள் அதனைவிட அதிகமான நோயாளர்கள் அடையாளம் காணப்பட வாய்ப்புள்ளது.

**Q நாட்டில் ஒமிக்ரொன் ஐந்தாவது அலையாக மாறியுள்ளதா அல்லது மாறும் ஆபத்துள்ளதா?**

ஒமிக்ரொன் திரிபு ஐந்தாவது கொரோனா அலையின் ஆரம்பத்திலுள்ளது. எதிர்வரும் வாரங்களில் அலையின் வேகம் அதிகரிக்கும் சாத்தியக்கூறுகளும் காணப்படுகின்றன.

**Q இலங்கையில் எந்தெந்த மாவட்டங்கள் அதிக**

**தீர்மானங்களை எடுக்கும் ஜனாதிபதி செயலணி கலைக்கப்பட்டமை ஆபத்தானது**

**ஆபத்துள்ள மாவட்டங்களாக மாறிவருகின்றன?**

ஒமிக்ரொன் திரிபு பரவும் வேகத்துக்கமைய, இந்த இந்த பிரதேசங்கள் அல்லது மாவட்டங்கள் ஆபத்தானவை எனக் கூற முடியாது. சனத்தொகை அதிகமாகவுள்ள நகரப்பகுதிகளில் ஒமிக்ரொன் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை மிக அதிகமாகும். இதேவேளை, ஏனைய கிராமப் பகுதிகளில் ஒமிக்ரொன் பாதிப்பு குறைவாகவுள்ளதெனக் கூற முடியாது. அங்கும் வேகமாகப் பரவுகின்றது.

**Q மக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் தவறிழைக்கின்றதா அல்லது மக்கள் தவறிழைக்கின்றனரா?**

தொழில்நுட்ப வழிகாட்டல்களுக்கமைய அரசாங்கம் தீர்மானங்களை எடுப்பதாகத் தெரியவில்லை.

சுகாதார வழிகாட்டல்களை வெளியிடுகையில், பொதுக் கூட்டங்கள், எல்.பி.எல். போன்ற விளையாட்டுத் தொடர்கள் போன்று மக்கள் அதிகமாக ஒன்றுசேரும் கூட்டங்களுக்கு வாய்ப்பளிக்கும்போது, ஆபத்தான நிலைமையை சந்திக்க நேரிடும்.

எனவே, தொழில்நுட்ப வழிகாட்டல்களுக்கு அமைய அரசாங்கம் உரிய தீர்மானங்கள் எடுப்பதை காணக்கூடியதாக இல்லை. இதனால், பொதுமக்களும் தொற்றுப்பரவலை சாதாரணமாக எடுத்துக்கொண்டு, தேவைகளுக்கப்பால் நடமாடுவதற்கே முயற்சிக்கின்றனர்.

**Q மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றதா அல்லது பூஸ்டர் டோஸ் காரணமாக எண்ணிக்கைகள் குறைவடைந்துள்ளதா?**

ஒமிக்ரொன் திரிபுகளினால் மரணங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் தொற்றுப் பரவும் வேகம் அதிகமாகவுள்ளதால், தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இதனால், சுகாதாரத்துறைக்கு பாரிய நெருக்கடி ஏற்படும் பட்சத்தில் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

வைத்தியசாலைகளின் இடவசதி மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளின் படுக்கைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட ஆரம்பிக்கும்போது, மரணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு ஆரம்பிக்கும்.

**உயிரிழப்பை தவிர்க்க பூஸ்டர் டோஸே ஒரே வழி**

**Q ஆபத்து அதிகரிக்கும் நிலையில் பூஸ்டர் டோஸ் பெறுவதில் மக்கள் ஆர்வம் காட்டாதது ஆபத்தாக இருக்குமா?**

பதில் : நிச்சயமாக. மக்கள் தற்போது ஏற்றிக்கொண்டுள்ள தடுப்பூசிகளின் திறன்கள் குறைவடைந்துவருகின்றன. அவை முற்றாக குறைவடையும்போது, தடுப்பூசிகள் பெற்றுக்கொள்ளாததற்கு சமனாகவே கருத முடியும்.

எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாத ஒருவருக்கும், தடுப்பூசியின் திறன் குறைந்த ஒருவருக்கும் ஒமிக்ரொன் திரிபு மட்டுமல்ல, ஏனைய திரிபுகளும் பரவும் ஆபத்துள்ளது. இதனால், மரணங்கள் திகழ்வதற்கு வாய்ப்புள்ளதால், பூஸ்டர் டோஸை பெற்றுக்கொள்வதே ஒரே வழி. எனவே, பொதுமக்கள் பூஸ்டர் டோஸ் பெற்றுக்கொள்வதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

**Q ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளபோதிலும் பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவதில் தவறிழைக்கின்றனரே?**

ஆம். பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளை பின்பற்றுவதே இல்லை. இதற்கு அவர்கள் மாத்திரம் பொறுப்பல்ல. அரசாங்கம் உள்ளிட்ட சுகாதார அதிகாரிகளும் பொறுப்புக்கூற வேண்டும். இன்று சுகாதார வழிகாட்டல்கள் நடைமுறையில் இருக்கின்றனவா என்ற கேள்வி எழுகின்றது. இதனாலேயே நாங்கள் மீண்டுமொரு ஆபத்தான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

**Q புதிதாக வெளியிடப்பட்டுள்ள சுகாதார விதிமுறைகளின்படி, கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கும் ஒருவரோடு நெருங்கிய தொடர்புடையவர் பூஸ்டர் டோஸ் பெற்றுக்கொண்டிருந்தால் மூன்று நாட்களுக்குள் அவருக்கு அறிகுறிகள் தென்படாவிட்டால் அவர் வெளியில் செல்லலாம் எனக் கூறப்பட்டுள்ளதை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

ஆம். எங்களுக்கும் இது குறித்து பாரிய பிரச்சினை இருக்கின்றது. குறிப்பாக, ஒரு வீட்டில் அனைத்து தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட ஒருவரும் பெற்றுக்கொள்ளாத ஒருவரும் இருக்கும்போது, ஒருவருக்கு தொற்று ஏற்பட்டால் மற்றவரை வேலைக்குச் செல்லுமாறு கூறுகின்றனர்.

ஆனால், ஒரு வீடு தனிமைப்படுத்தப்பட்டால், அந்த வீட்டில் தனிமைப்படுத்தல் அறிவித்தல் ஒட்டப்படும். இவ்வாறு தனிமைப்படுத்தப் பட்டிருக்கும் வீட்டிலிருந்து ஒருவர் வெளியில் சென்றால் அப்பகுதியிலுள்ள மக்கள் அதற்கு எதிர்ப்பை வெளியிடுவர். ஆகவே, தற்போதுள்ள சுகாதார வழிகாட்டலானது கொவிட் கட்டுப்பாடு செயற்பாடுகளை பெரும் சவாலுக்குட்படுத்தும்.

**பொது முடக்கத்திற்குச் சென்றால் பட்டினியால் மக்கள் உயிரிழப்பர்**

**Q சுகாதார வழிகாட்டல்கள் தயாரிக்கும் போது உங்களிடம் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவதில்லையா?**

இல்லை. சுகாதார விதிமுறைகள் தயாரிக்கப்படுவது குறித்து எங்களுக்கு எதுவும் தெரியாது.

**Q தொற்றின் ஆபத்தை தவிர்ப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன?**

இலங்கையில் தற்போதைய நிலைமையில் பொது முடக்கமொன்றுக்குச் செல்ல முடியாது. அவ்வாறு சென்றால் மக்கள் பட்டினியால் உயிரிழப்பார்கள். ஆகவே, நாங்கள் முழுமையான முடக்கமொன்றுக்குச் செல்லாது கொவிட் தொற்றை கட்டுப்படுத்த வேண்டுமாயின், பொதுமக்கள் ஒன்றுகூடாத வகையில் சுகாதார வழிகாட்டல்களை மறுசீரமைப்புச் செய்யவேண்டும்.

அதேபோன்று, பொதுமக்களும் சுயமாக சிந்தித்து தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக சுகாதார வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும். மாறாக, பொது முடக்கத்திற்குச் சென்றால் மக்கள் பட்டினியால் இறப்பார்கள்.

**Q கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தற்போதும் கூட்டங்களை நடத்துகின்றதா?**

கொவிட் கட்டுப்பாட்டுக்கான ஜனாதிபதி செயலணி தற்போது கலைக்கப்பட்டுள்ளது. இதனால், ஜனாதிபதி செயலணியினால் ஆரம்பத்தில் நடத்தப்பட்ட எந்தவொரு கூட்டங்களும் தற்போது நடத்தப்படுவதில்லை. தொழில்நுட்பக் குழுவின் ஊடாகவே ஜனாதிபதி தற்போது தீர்மானங்களை எடுத்துவருகின்றார். ஆனால், ஆரம்பத்தைபோன்று, சுகாதார அதிகாரிகள் உள்ளிட்ட எங்களையும் இணைத்துக்கொண்டு முன்னெடுக்கப்பட்ட எந்தவொரு பேச்சுவார்த்தைகளும் தற்போது முன்னெடுக்கப்படுவதில்லை.

**Q கொவிட் தொற்று உலகளவிலும் ஒழிக்கப்படாத நிலையில், தீர்மானங்கள் எடுக்கும் செயலணி இவ்வாறு கலைக்கப்பட்டுள்ளது ஆபத்தானதல்லவா?**

நிச்சயமாக. கொவிட் கட்டுப்பாட்டுக்கான ஜனாதிபதி செயலணியை கலைத்துள்ளது என்பது மிக ஆபத்தான விடயமாகும்.

**Q பாடசாலை மாணவர்களிடையே கொரோனா தொற்று தீவிரமடைவதால் கொத்தணிகள் உருவாகும் ஆபத்துள்ளதா?**

பாடசாலைகளில் தற்போது நூற்றுக்கு 75 வீதமான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். குறிப்பாக, பாடசாலைகளில் இடவசதிகள் இன்மையால், அதிகமான மாணவர்கள் ஒரே வகுப்பில் இருக்கவேண்டியிருப்பதால், அங்கு சமூக இடைவெளிகள் உள்ளிட்ட சுகாதார வழிகாட்டல்கள் முறையாக பின்பற்றப்படாத காரணத்தால் பாடசாலை மட்டத்தில் கொரோனா தொற்று தீவிரமடைந்துவருகின்றன.




**பி.சி.ஆர். பரிசோதனை அதிகரிக்கப்பட்டால் நாளொன்றுக்கு 2,500 நோயாளர்கள் அடையாளம் காணப்படலாம்**

பாடசாலைகள் மாணவர்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவது குறைவு. எனினும், பாடசாலை நிர்வாகம் சுகாதார வழிகாட்டல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

**Q வீடுகளிலிருக்கும் சிறுவர்களுக்கும் தற்போது கொவிட் பரவுவது தீவிரமடைந்து வருகின்றதே?**

பாடசாலை மாணவர்களைவிட வீடுகளிலிருக்கும் சிறுவர்களுக்கு கொவிட் தொற்று தீவிரமாக பரவலடைகின்றது என்று கூற முடியாது. ஆனால், வீடுகளிலிருக்கும் பெற்றோரோ அவர்களுக்கு கொவிட் பரவ காரணமாக இருக்கின்றனர். எனவே, வெளியில் செல்வதாயின் பெற்றோர் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அத்தோடு, சுகாதார வழிகாட்டல்களை முறையாக பின்பற்றுவதையும் உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும்.



**நேர்காணல் : யோ.தர்மராஜ்**

# உண்மையை வெளிக்கொண்டு வந்ததால் உயிர் பறிக்கப்பட்டார் ஊடகர் சுகிர்தராஜன்



(16ஆவது ஆண்டு நினைவு தினத்துக்காக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது)

# நீதிக்காக ஒலித்த குரலுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை

**வ.சக்திவேல்**

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் சேவைக்கும், செயற்பாடுகளுக்கும் நிகர் அவரேதான். இலங்கையிலிருந்து வெளிவந்த தேசிய பத்திரிகைகளில் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டு பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவர் ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்ந்திருந்தார். அப்போது அவர் திருகோணமலையில் இடம்பெற்ற 5 மாணவர்களின் படுகொலைகள் தொடர்பில் ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொணர்ந்திருந்தார். இந்நிலையில்தான் திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு அருகில் வைத்து சுட்டுப் படுகொலைசெய்யப்பட்டிருந்தார்.

ஒரு நாட்டின் அபிவிருத்தியின் நான்கு தூண்களில் ஒரு தூணாக விளங்குவது ஊடகத்துறையாகும். இவ்வாறான துறைசார்ந்தவர்களை நசுக்குவதும், படுகொலை செய்வதும், அச்சுறுத்துவதும் ஜனநாயக மீறல் என்பதோடு, அது மனித உரிமை மீறலுமாகும். சுகிர்தராஜனின் படுகொலைக்கு எதிராக பல்வேறுபட்ட கோஷங்கள் எழுப்பப்பட்ட போதிலும் இன்றுவரை அதற்குரிய தீர்வு இல்லாமலேயே இருந்துவருகின்றது.

1969 டிசம்பர் 12ஆம் திகதி மட்டக்களப்பு - குறுமன்வெளியில் பிறந்த சுப்பிரமணியம் சுகிர்தராஜன் 2006ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி திருகோணமலை உவர்மலையில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சுகிர்தராஜனின் தந்தையார் சுப்பிரமணியம், தாயார் அருள்ஞானம்மா. இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு குருமண்வெளி சிவசக்தி வித்தியாலயத்திலும், உயர்கல்வியை மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மற்றும் மட்டக்களப்பு மத்திய கல்லூரி என்பவற்றிலும் பயின்றார்.

பாண்டிருப்பு கதிர்ப்பு கலை இலக்கிய வட்டத்தின் ஸ்தாபகத் தலைவரான இவர்,




1997இல் இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் பணியில் சேர்ந்தார்.

திருகோணமலையிலிருந்து சுடரொளி, உதயன் ஆகிய பத்திரிகைகளின் திருகோணமலை நிருபராகக் கடமையாற்றினார்.

**படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு**

2006ஆம் ஆண்டு திருமலையில் படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 16ஆவது ஞாபகார்த்த தின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை (24ஆம் திகதி) வடக்கு, கிழக்கின் பல பகுதிகளிலும் நடைபெற்றிருந்ததோடு, மட்டக்களப்பில் காந்தி பூங்கா முன்றலில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் ஞாபகார்த்த நினைவுத் தூபியில் நடைபெற்றிருந்தது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் இ.தேவஅதிரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி முதல்வர் க.சத்தியசீலன். இணையத்தள ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் பெடிகமகே மற்றும் ஏனைய அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவில் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது சுகிர்தராஜனின் உருவப்படத்திற்கு சிரேஷ்ட ஊடகவிலாளர் புத்திரசிகாமணியும், முன்னாள் ஊடகவியலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேத்திரனும் இணைந்து மலர்மாலை அணிவித்தனர். பின்னர் 16 நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தி, அகவணக்கமும் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இதன்போது கலந்து கொண்டோர், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டியும், முகநூலில் கருத்துகளை வெளியிட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள கோகுலதாசனின் விடுதலையை வலியுறுத்தியும் கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். பின்னர் நினைவுரைகளும் இடம்பெற்றன.

2006இல் உயர்தரக் கல்வியை முடித்த பின்பு, பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருந்த 5 மாணவர்களை திருகோணமலை, நிலாவெளி கடற்கரையில் சுட்டுப் படுகொலைசெய்ததை சுகிர்தராஜன் நிழற்படமெடுத்து செய்தி வெளியிட்டிருந்தார்.

மாணவர்களின் இறப்புக்கு கைக்குண்டுத் தாக்குதலே காரணம் என்று விசாரணையை திசைதிருப்ப முயற்சித்தபோது, இவர் எடுத்த நிழற்படங்கள் தலையில் சுடப்பட்டு இறந்ததை தெளிவாக எடுத்துக்காட்டின. இதனால் சர்வதேச ரீதியில் பல்வேறுபட்ட அழுத்தங்கள் ஏற்பட்டன.

சுகிர்தராஜன் யுத்தச் சூழலிலும் துணிச்சலுடன் ஊடகப் பணியாற்றியபோதே 2006 ஜனவரி 24ஆம் திகதி திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்திற்கு அருகாமையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

மட்டக்களப்பு குருமண்வெளியை பிறப்பிடமாகக்கொண்ட சுகிர்தராஜன், அம்பாறை வீரமுனையில் வசித்துவந்த நிலையில் திருகோணமையில் பணி நிமித்தம் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆண்டாண்டுக்காலம் மறைந்த ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளை சக ஊடகவியலாளர்கள் ஒழுங்குசெய்து, அதில் கலந்துகொள்பவர்களும், இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டும், நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும் எனவும் வருடாந்தம் காலத்திற்குக் காலம் கோஷங்களோடு கோரிக்கைகளை முன்வைக்கின்றபோதும் அதில் எதுவித முன்னேற்றங்களும் இல்லை என்றே கூறலாம்.

உள்ளதை உள்ளபடி தான்சார்ந்த ஊடகங்களின் வாயிலாக வெளியுலகிற்கு காண்பிப்பதற்காகத்தான் நன்கு பயிற்றப்பட்ட ஊடகவியலாளர்கள் களத்தில் நின்று செயற்படுகின்றார்கள். அது அவர்களுக்குக் கிடைக்கின்ற வேதனத்திலும் பார்க்க மக்கள் மீது கொண்டுள்ள அதீத கரிசனையும், பற்றுறுதியுமாகும் எனலாம். ஆனாலும் இவ்வாறு மழை, வெயில், புயல், வெள்ளம், என பாராது, தன்னலம் கருதாது பிறர் நலனுக்காக தினம் தினம் உழைத்துக்கொண்டிருக்கும் ஊடகவியலாளர்களின் பேனாக்களை நசுக்க முனைவதென்பதை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு நசுக்கப்பட்ட ஓர் ஊடக உறவுதான் சுப்பிரமணியம் சுகிர்தராஜன்.

எனவே, இனிமேலாவது நாட்டின் நாலாபாகமும் களத்தில் நின்று செயற்படுகின்ற ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளுக்கு குந்தகம் ஏற்படாதவாது அவர்களின் நலனோம்பு செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி படுகொலைசெய்யப்பட்ட சுகிர்தராஜனின் குடும்பத்தினருக்கும், ஊடகத்துறைக்கும், நீதியைப் பெற்றுக்கொடுக்க துறைசார்ந்தவர்கள் முன்னிற்க வேண்டும் என்பதையே அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.















# 'வெடி'மணியம்

**தொடர்ச்சி..**

*கடந்த 10 வருசமா 'எதிர்ப்பு அரசியல்' இதைத் தவிர, தமிழ்த் தேசிய சைக்கிள் கட்சியினர் எதுவுமே உருப்படியா செய்யவில்லை.*

*தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து '13 ஐ' வலியுறுத்துகிறார்கள் எண்டால் அதுக்குப்பின்னால ஏதோ ஒரு 'பூகோள அரசியல்'இருக்கு எண்டது;*

*கஜேந்திரகுமார் குறூப்புக்கு புரியாமல் இல்லை.*

*ஆனால், தங்களை இந்தியா ஒரு அஞ்சு சதத்துக்கும் மதிக்காமல் இருக்கிறது எண்ட 'வயித்தெரிச்சல்'தான் கஜேந்திரகுமார் குறூப் சந்தி சந்தியாய் நிண்டு குழறுவதற்கான முக்கிய காரணம்.*

*"தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒன்றிணைவில்" முதலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான் இருந்திருக்கவேண்டும். கஜேந்திரகுமார் மிக முக்கியமாக இருந்திருக்கவேண்டும்.*

*ஆனால்;*

*கஜேந்திரகுமாருக்கு லண்டன், நோர்வேயில் இருந்து எங்கட ஆக்கள் 'கோல்' அடிச்சு;*

*"நீங்கள் எதிர்க்கவேணும். ரீ சேட் அடிச்சு அனுப்புறம்" எண்டு சொல்லியிருக்கினம்.*

*நூறு ரூபா 'ரீ சேட்டுக்கு'ஆசைப்பட்டு கஜேந்திரனும் கஜேந்திரகுமாரும் வீதியில் இறங்கி "13 வேண்டாம். 13ஐ கேக்கிறவங்கள் எல்லாரும் துரோகிகள்" எண்டு கூவுகினம்.*

*இதில பெரிய பம்பல் என்னண்டால்;*

*13 ஐ வேண்டாம் எண்டு சொல்லுற கஜேந்திரகுமாரின் தமிழ்த் தேசிய சைக்கிள் முன்னணியினர்,*

*அந்த 13ஐ ஆதாரமாகக்கொண்ட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவார்களாம்.*

*"மாமி வேண்டாம். மாமி பெத்த மச்சாள் வேணும்" எண்டு கேக்கும் கஜேந்திரன், கஜேந்திரகுமார் குறுப்பின் விண்ணான விளக்கத்தைக் கேட்டால்...*

*கோபம் வரயில்லை. எரிச்சல் வருகுது.*

*"13ஐ நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அது எங்கள் மக்களின் உரிமைகளை முழுதாக பிரதிபலிக்கவில்லை. எங்களுக்கு அதுக்கும் மேலாக சமஷ்டி வேண்டும். அதற்கு இந்தியா உதவ வேண்டும்" எண்டு சொல்லிப்போட்டு கஜேந்திரகுமார் பேசாமல் இருந்திருந்தால்;*

*அதுதான் அவர் சொன்ன 'பூகோள அரசியல்'!*

*அதைவிட்டுப்போட்டு "13 ஐ எதிர்க்கிறம்" எண்டு ரீசேட் அடிச்சுப்போட்டுக்கொண்டு;*

*வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு 'எதிர்ப்பு ஊர்தி' விடும் கஜேந்திரகுமாரின் கோமாளித்தனத்தை என்ன வார்த்தையால ஏசலாம் எண்டு யோசிக்கிறன்.*

*கஜேந்திரகுமார் உப்பிடி பேத்தனமாக நடக்கக் காரணம் கூட இருக்கும் கஜேந்திரனும் அவரது செம்புகளும்தான்!*

*13 இக்கு எதிராக இண்டைக்கு ஆர்ப்பாட்டத்தை செய்யும் கஜேந்திரகுமாரின் 'குறளிவித்தையை' புதினம் பார்க்க நாலைஞ்சுபேர் வருவினம்.*

*அப்பிடியே நாலு போட்டோவும் "பேஸ்புக் லைவ் வீடியோவும்" விட்டால்;*

*கஜேந்திரகுமார், கஜேந்திரனின் லண்டன் நோர்வே முதலாளிமார் சந்தோஷப்படுவினம்.*

*அவைக்கு தேள்வை "நாலு போட்டோவும் இணையத்தில செய்தியும்"!*

*அந்தளவும்தான்!*

*இண்டைக்கு நல்லூரில் நடக்கப்போகும் 'குறளிவித்தை' செலவுகளுக்கு பெரிசா வெளிநாட்டில் இருந்து காசு வரயில்லை. ரீசேட்டும் எதிர்ப்பு ஊர்திக்கு டீசலுக்கு காசும் மட்டும்தான் வந்ததா ஒரு கேள்வி.*

*உண்மை பொய் ஆருக்குத் தெரியும்!*

*"ஒன்றுகூடிய ஆறு தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களை துரோகிகளாக அறிவிக்கும் உரிமையை கஜேந்திரனுக்கும் அவற்ற செம்புகளுக்கும் ஆர் குடுத்தது?" எண்டு;*

*மாவையின்ர ஊர்க்கார பொடியன் ஒருத்தன் கொதிச்சுப்போய் கேட்டான்.*

*"கஜேந்திரனைப் பொறுத்தவரை தன்னையும் தன்ர செம்புகளையும் தவிர, மற்ற எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் துரோகிகள்தான்" எண்டன் நான்.*

*"சனத்திட்ட கெதியில முறையா வாங்கப்போகினம்" எண்டான் அவன்.*

*"ஏன் அவசரம். அடுத்த தேர்தல் ஒண்டில உவையின்ர சீத்துவக்கேடுகள் எல்லாம் சந்தி சிரிக்கும்" எண்டன் நான்.*

*"அவங்களுக்கென்ன. ரண்டுபேரும் நாடாளுமன்றம் போட்டாங்கள். பாவம். கூட இருக்கிற செம்புகளுக்கு மாகாண சபைகளிலும் இடம் இல்லை. பிரதேச சபைகளிலும் இனிமேல் ஒரு சீட்டுகூட கிடைக்காது" எண்டுறான் மாவையின்ர ஊர்ப்பொடியன்.*

*எனக்கென்னவோ அவன் சொல்லுறதிலையும் ஒரு நியாயம் இருக்குமாப்போலத்தான் கிடக்கு!*

*ஏன் அவசரம்? டக்கண்டு ஒரு தேர்தல் வந்தாலும் வரும். சனம் என்ன செய்யுதெண்டு பொறுமையா இருந்து பாப்பம்.*

###

*கணாளா மாவையரையும் சம்பந்தரையும் ஏசி ஏசி வாய் உளைஞ்சுபோய் இருக்க;*

*திடீரெண்டு சம்பந்தர் ஒருசில நல்ல விடயங்களை செய்யுறமாதிரியும் கிடக்கு!*
*பேசுறமாதிரியும் கிடக்கு!*

*தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒருங்கிணைவில் தமிழரசுக் கட்சிக்குள் உள்ள சில கறுப்பாடுகளே குழப்ப வெளிக்கிடும்போது;*

*"ஆர் என்ன சொன்னாலும் நான் கையெழுத்து வைப்பன்" எண்டு சம்பந்தர், செல்வம் அடைக்கலநாதனிடமும் சித்தார்த்தனிடமும் சொன்னது வரவேற்கத்தக்கது.*

*அதைவிட ஒரு படி மேலால போய் "குழம்பிப்போக வேண்டிய" தமிழ்த் தேசிய கட்சிகளின் அண்மைய ஒற்றுமையை இழுத்துப்பிடிச்சு சாத்தியமாக்கியதில் சம்பந்தரின் பங்கு கணிசமாக இருப்பதாக சொல்லுகினம்.*

*அதைவிட இன்னும் ஒருபடி மேலால போய் கோட்டாபய அரசைப் பார்த்து "ஓவராப்போறியள்! உப்பிடியே போனால் எங்களுக்கு நீதி கிடைக்க சர்வதேசத்தை நாடுவோம்" எண்டு கொஞ்சம் காட்டமாக சொல்லியிருக்கிறார் சம்பந்தர்.*

*"அடுத்த தீபாவளிக்கு தீர்வு" எண்ட சம்பந்தரின் நகைச்சுவைகளுக்கு மேலாக அண்மையில் அவரின் பேச்சிலும் செயலிலும் ஒரு சிறிய மாற்றம் தெரிகிறது.*

*கடைசி காலத்தில தன்னை நம்பி வாக்குப்போட்ட மக்களுக்கு ஏதாவது நல்லது செய்துபோட்டுப் போவம் எண்டு சம்பந்தர் நினைத்திருக்கலாம்.*

*அப்படி அவர் நினைக்காவிட்டால்;*
*அவர் இல்லாத காலத்தில் ஒரு கணம் எனும் சனம் அவரை நினைச்சுக்கூடப் பாக்காது.*

*சம்பந்தருக்கு மட்டுமல்ல, இது மாவையருக்கும் பொருந்தும்.*

*ரண்டு நாளுக்கு முன்னம் ஆறு தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களும் ஒண்டா இருந்து பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்கள்.*

*அதில் இருந்த அரசியல்வாதிகளில் மாவையரும் சித்தரும் சிறிகாந்தாவுமே மிகவும் முதிர்ச்சியான அரசியல் அனுபவமுள்ளவர்கள்.*

*நிச்சயம் இந்த 'கூட்டு' ஒரு கூட்டணியாக மாறுவது காலத்தின் கட்டாயம்.*

*தமிழ்மக்களின் அரசியல் வடிவமான "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு" சிதைந்து போகாமல் மீண்டும் ஒரு புதியவடிவில் மலர்ந்துவிடாதா? என்ற ஆதங்கம் மக்கள் மத்தியில் உள்ளது.*

*இந்த ஆறு தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களும் இதயசுத்தியோடு மக்களுக்காக சிந்திச்சால் அது நிச்சயம் சாத்தியமாகும்!*

திகதி 28.01.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4661
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,669,770.00
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 4 8 0 2 8 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 34,353,970.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2956
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,997,400.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 42 64 65 72
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.61,004,556.80

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 1009 இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.3,891,760.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.194,227,674.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
ஆங்கில எழுத்து Z சுப்பர் இலக்கம் 22 வெற்றி இலக்கங்கள் 17 36 54 72
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 09534

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 691
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,716,680.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 03 18 30 54
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,632,917.20

ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0002
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,782,820.00
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 09 16 23 59
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,505,727.08

வாசனா சம்பத Vasana Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் :1690
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,315,220.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 49 54 80 88
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,408,283.50

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416

# ஒவ்வொரு முயற்சியின் தோல்வியிலும் அதற்கான வெற்றி இருக்கிறது

## சமூக செயற்பாட்டாளர் இராமகிருஸ்ணன் ஸ்ரீதரன்









மாத்தளை என்.ஆர்.எஸ்.மின்னியல் பொறியியல் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரபல்யமான சமூக செயற்பாட்டாளருமான இராமகிருஸ்ணன் ஸ்ரீதரன். தனது சமூக செயற்பாட்டின் காரணமாக இத்தாலியிலும் மாத்தளையிலும் மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவர்.

ஏழு முகக் காளியம்மன் கோவிலின் அறங்காவலர் சபையின் உதவிச் செயலாளர், மாத்தளை உதவும் உள்ளங்கள் அமைப்பின் செயலாளர், றொட்டரிக் கழகத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் 2019, 2020 மற்றும் 2021களில் தலைவராகவும் உதவி ஆளுநராகவும் செயற்பட்டவர். சிந்தாக்கட்டி கோயில் அறங்காவலர் சபையின் ஆலோசகர். மாத்தளை மகாத்மா காந்தி சபையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்.

நல்ல பண்பும் பலமும் நிறைந்த சமூக செயற்பாட்டாளர் இராமகிருஸ்ணன் ஸ்ரீதரன் ஞாயிறு 'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய செவ்வி.

**உங்களைப் பற்றி கூறுங்களேன்?**

எனது பெயர் இராமகிருஸ்ணன் ஸ்ரீதரன். நான் 1964.01.08ஆம் திகதி மாத்தளையில் பிறந்தேன். எங்கள் குடும்பத்தில் 6 பேர். தந்தை நாகரட்ணம் இராமகிருஸ்ணன். தாய் ஜெயலக்ஷ்மி.

அப்பா மகாவலி அபிவிருத்தி அதிகார சபையில் தொழில் புரிந்து வந்தார். அப்பா காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை போன்ற தூர இடங்களில் வேலைசெய்து வந்தார். அப்போது தாத்தா பாட்டி எல்லோரும் எங்களுடன் தான் இருந்தார்கள். வீட்டில் 10 பேர். அப்பாவின் சம்பளத்தில் தான் எல்லோரும் சாப்பிட வேண்டும். இக்கால கட்டம் நாங்கள் மிகவும் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கியிருந்தோம். கல்வியைத் தொடர்வது மிகக் கஷ்டமாக இருந்தது. ரொம்ப சிரமத்திற்கு மத்தியில் தான் நான் கல்வியைத் தொடர்ந்தேன்.

**அப்படியானால் நீங்கள் எங்கு கல்வி கற்றீர்கள்?**

நான் ஆரம்பக் கல்வியினை மாத்தளை இந்து தேசிய கல்லூரியில் கற்றேன். 1970 களில் இருந்து 1977 வரையிலும் க.பொ.த. உயர்தரம் வரையில் கற்றேன். அதேவேளை, விளையாட்டுத்துறையிலும் ஈடுபட்டு வந்தேன். பாடசாலையில் ஹொக்கி விளையாடுவதற்கான தேர்வு இடம்பெற்றது. அதன்போது நானும் என் நண்பர் சுபைர் ஆகிய இருவரும் தெரிவுசெய்யப்பட்டோம். அதிலும் மாவட்ட மட்டத்தில் விளையாடுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. முதல் தடவையிலேயே மாவட்ட மட்டத்தில் ஹொக்கி விளையாடுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டோம்.

அது மட்டுமல்ல, நான் பாடசாலையின் வொலிபோல் கெப்டனாகவும் இருந்தேன். அகில இலங்கை ரீதியில் 17 வயதுக்குட்பட்ட நீளம் பாய்தல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டேன். ஏனைய ஓட்டப்போட்டிகளில் பாடசாலை மட்டங்களில் கலந்துகொண்டுள்ளேன். கொழும்பில் பல நிறுவனங்களின் சார்பாக ஹொக்கி விளையாடியுள்ளேன்.

அப்பாவின் தம்பி திலகநாதன். மாத்தளை புனித தோமஸ் கல்லூரியில் கல்வி பயின்றவர். தேசிய மட்டத்தில் ஹொக்கி விளையாடுவதில் புகழ்பெற்றவர். அவர் அதில் விளையாடுவது எனக்கும் பெருமையாக இருந்தது. அந்நேரத்தில் எனக்கும் ஹொக்கி விளையாட வேண்டும் என்ற ஆசை இருந்தது. அந்த வகையில், ஹொக்கி விளையாட்டில் ஈடுபாடு காட்டி நிறைய வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டேன்.

குறிப்பாக மாத்தளையைப் பொறுத்தவரையிலும் எனது தந்தை ஒரு பிரபல்யமான கிரிக்கெட் விளையாட்டு வீரர். மாத்தளை புனித தோமஸ் கல்லூரியின் பெரிய கிரிக்கெட் விளையாட்டு வீரர். அவர் அப்பாடசாலையின் ஆரம்ப பந்து வீச்சாளர். தற்போது தந்தைக்கு 90 வயது ஆகும். அதன் காரணமாகத்தான் படிப்போடு கூடுதலாக விளையாட்டுகளிலும் அதிக ஆர்வம் காட்டினேன்.

என்னுடைய தந்தை விளையாட்டுத்துறைக்கு ஓர் உந்து சக்தியாக திகழ்ந்தார்.

க.பொ.த. உயர்தரக் கல்வி கற்ற பின்பு கண்டி அருப்பொல தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி கற்றேன். அவ்வாறு கற்றுக்கொண்டிருக்கும்போதே இன்னுமொரு தனியார் கல்வி நிறுவனமொன்றில் மின்பொறியியல் துறையிலும் நான்கு வருட கல்வி கற்று நிறைவு செய்தேன். இது தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள பெரும் வாய்ப்பாக அமைந்தது.

**நீங்கள் எப்பொழுது தொழில்துறையில் இணைந்து கொண்டீர்கள்?**

மின்சார சபையில் தொழிலுக்காக விண்ணப்பம் செய்தேன். 1982களுக்கு பின்னர் வாழைச்சேனையில் முதலாவதாக இலங்கை மின்சார சபையின் அத்தியட்சகராக கடமையாற்றினேன். சுமார் ஒன்பது மாத காலங்கள் வரையில் அங்கு தொழில்புரிய சந்தர்ப்பம் கிடைத்தது. அதற்குப் பின்னர் அதனை விட்டுவிலகினேன்.

தாஜ் சமுத்திரா ஹோட்டலின் நிர்மாணப் பணிகள் நடந்துகொண்டிருந்தன. அக்கால கட்டத்தில் அங்கு சென்று தொழில்சார் மின் பொறியியல்துறையில் இணைந்து ஒன்றரை வருடங்கள் கடமையாற்றினேன். அதன்பிறகு அருகிலுள்ள கலதாரி ஹோட்டலின் நிர்மாணப் பணி நடைபெற்றுக்கொண்டிருந்தது. அது அமெரிக்கன் கம்பனியாகும். அதில் இணைந்து மூன்றரை வருடம் மின் பொறியியலாளராக கடமையாற்றினேன். இக்கால கட்டத்தில் தான் 1983ஆம் ஆண்டு ஜுலைக்கலவரம் நடைபெற்றது. இது வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு சம்பவம்.

**இக்கலவரத்தின்போது உங்கள் குடும்பத்திற்கு பாதிப்புகள் ஏற்படவில்லையா?**

நான் கொழும்பில் வேலைசெய்தேன். மாத்தளையில் எங்கள் வீடு முற்றாக எரியூட்டப்பட்டது. எடுப்பதற்கென ஒன்றும் இல்லை. எங்கள் அம்மா அப்பா குடும்பத்தினர்கள் பக்கத்திலுள்ள முஸ்லிம் சகோதரர்களுடைய வீட்டில் இருந்தார்கள். எந்தப் பொருட்களையும் எடுக்கக் கிடைக்கவில்லை. பின்னர் யாழ்ப்பாணத்துக்கு அம்மாவும் அப்பாவும் அகதிகளாக சென்றுவிட்டார்கள். நான் பிறந்து வளர்ந்த இடத்தை விட்டுப் போகக்கூடாது என்ற வேட்கையுடன் நானும் என் தாத்தாவும் பாட்டியும் இங்கேயே இருந்தோம். நாங்கள் போகாத காரணத்தினால் பின்னர் அம்மாவும் அப்பாவும் எங்களுடன் வந்து சேர்ந்துவிட்டார்கள். இது எமது வாழ்க்கையில் கறைபடிந்த நாட்களாகும்.

நான் கடைசியாக கலதாரி ஹோட்டலின் நிர்மாணப் பணி பொறியியலாளராக கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அந்த நிறுவனம் தன்னுடைய கட்டிட நிர்மாணப் பணிகளை முடித்துவிட்டு வெளியேறும் தருணத்தில் அதன் முழுப்பொறுப்பையும் என்னிடம் தான் ஒப்படைத்து விட்டுச்சென்றார்கள். நான் ஆறு மாதங்கள் அதனைப் பராமரித்து வந்தேன். ஹோட்டல் பொறியியலாளர் அதனை பாரம் எடுக்கும் வரையிலும் நான் தான் ஒரு பொறுப்பாளராக இருந்து வந்தேன். அதற்குப் பின்னர்தான் நான் வெளிநாடு சென்றேன்.

**நீங்கள் இத்தாலி நாட்டுக்கு செல்லக் காரணம்?**

இக்கால கட்டத்தில் பொதுவாக கணிசமானளவு இளைஞர்கள் மத்தியில் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற மோகம் இருந்தது. அந்த ஆசையும் ஆர்வமும் எனக்கும் இருந்தது. 1991களில் இத்தாலிக்குச் சென்றேன். அங்கு 19 வருட காலம் இத்தாலியில் தொழில் புரிந்தேன். அங்கு தொழில்புரிந்தது மட்டுமல்ல. நிறைய பொதுச்சேவைகளும் செய்தேன்.

அங்குசென்ற ஆரம்பத்தில் மொழி முக்கியமாக இருந்தது. இத்தாலி மொழி முக்கியமான காரணத்தினால் ஆரம்பத்தில் எந்தத் தொழிலையாவது சரி செய்வதற்கென தயாராக இருந்தேன். முதலில் பெரிய ஹோட்டல் ஒன்றில் சாதாரண நிலையில் வேலைசெய்தேன். இதில் முக்கியமான விசயம் என்னவென்றால் பலர் மொழி அறிவின்மை காரணமாக காலம் பூராகவும் ஒரே தொழிலைச் செய்துகொண்டிருந்தார்கள்.

என்னுடைய ஒரே இலட்சியமாக இருந்தது, நாம் இத்தாலி மொழி அறிவினைப் படித்துக்கொள்ள வேண்டும் என்று. மேலும், மொழி தெரிந்தால் இந்த நாட்டில் நல்ல சிறப்பான தொழிலைச் செய்யலாம் என்ற சிந்தனை எனக்கு ஏற்பட்டது. மொழியை எப்படியாவது கற்கவேண்டும் என்ற அடிப்படையில் கற்றேன். குறிப்பாக இரண்டு வருடகால எல்லைக்குள் கற்று முடித்தேன்.

அதன்பிறகு நிறைய தொழில் வாய்ப்புகள் காலடிக்கு வந்தன. அந்நாட்டில் பொறியியலாளராக கடமையாற்றிய ஒருவர் என்னுடன் நண்பராகப் பழகினார். துறைமுகத்தில் வேலைசெய்வதற்கு தொழில்வாய்ப்பை பெற்றுத்தந்தார். அங்கு மின்சாரப் பொறியியலாளராகத் தான் நான் சென்றேன். ஆரம்பத்தில் என்னுடைய நிறத்தைக் கண்டு அவர்களுக்கு அச்சம் இருந்தது. அதில் பெரும் கோடிக்கணக்கான மின்சார இயந்திர பொறியியல் உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ள இடத்தில் வேலைப்பார்க்க வேண்டியிருந்து. பெரும் நிபுணத்துவம் வாய்ந்த பலரும் அங்கு வருவார்கள். அந்தத் தொழிலை நேர்மையாகவும் திறன்படவும் செய்தேன். இத்தாலி மக்கள் மிக இரக்கமுடைய பண்பைக் கொண்டவர்கள். என்னுடைய தொழிலை சீராகச்செய்து கொள்ள நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்தது.

அத்தொழிலோடு இன்னுமொரு வேலையும் எனக்கு கிடைத்தது. அதனையும் செய்தேன். அவர்களுடைய மொழியினை என்னால் அச்சந்தர்ப்பத்தில் திறன்பட பேசக்கூடியதாக இருந்தது. ஆதலால் எனக்கு எல்லா இடங்களில் முதல் மரியாதை தந்தார்கள். அதன் காரணமாக பெரிய இடங்களில் பெரிய ஆட்களைச் சந்திக்கக்கூடிய தொடர்புகளும் கிட்டின.

இவ்வாறு மூன்று வருடங்கள் செல்லும்போது இத்தாலியில் மொழிபெயர்ப்புக்காக பல இடங்களிலிருந்து அழைப்புகள் வந்தன. பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள், வைத்தியசாலைகள், நீதிமன்றங்கள் முதலிய இடங்களுக்குச் சென்று மொழிபெயர்ப்புச் செய்யவேண்டி ஏற்பட்டது. நான் இருக்கும் நகரான ஜெனுவா என்ற இடத்தில் உள்ள பொலிஸ் நீதிமன்றம் போன்ற இடங்களுக்கு என்னை அழைத்துச் செல்வார்கள்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழி பேசுபவர்களின் விளக்கங்களைக் கேட்டு அதனை இத்தாலி மொழியில் மொழிபெயர்த்துச் சொல்வேன். உண்மையிலேயே இன்னுமொரு மொழி தெரிந்தால் அதுவே பெரும் பலமாகும். அதனை இத்தாலியில் கற்று பிரத்தியேகமான உழைப்பில் ஈடுபட்டு வந்தேன். நூற்றுக்கு 10 அல்லது 15 விகிதமானவர்கள் ஆங்கில மொழி பேசுபவர்கள் உள்ளனர். மற்றைய எல்லோரும் இத்தாலி மொழி பேசுபவர்களே உள்ளனர். ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள் இத்தாலி மொழியினை பேச ஆரம்பித்தவுடன் அதன் விளக்கம் குறைவாகத் தான் இருக்கும்.

ஒரு மணித்தியாலத்திற்கு இவ்வளவு பணம் என்ற அடிப்படையில் எனக்கு சம்பளம் வழங்கினார்கள். எனக்கு நிறைய விருதுகள் கிடைத்தன. அங்குள்ள நீதவான் நான் ஆற்றிய பணிக்காக விருது வழங்கி கௌரவித்தார். இத்தாலி மொழியை சரியாக உச்சரித்து மொழிபெயர்ப்புச் செய்தேன் என்ற காரணத்திற்காக விருது வழங்கி என்னை கௌரவித்தார்கள்.

உண்மையிலேயே அந்த மொழியில் ஒரு வித்தியாசம் இருக்கிறது. ஒரு சடப்பொருளில் கூட ஆண் பால், பெண் பால் இருக்கிறது. அந்த மொழியினை சரியாக உச்சரிக்கா விட்டால் அதன் அர்த்தம் மாறி நிற்கும். நான் இத்தாலி மொழியினை சரியான முறையில் சீராகப் பேசி வருவது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. கொரிய தல் சேராம் என்ற பத்திரிகையில் இரண்டாம் மொழியான இத்தாலி மொழியினைத் திறன்படப் பேசுவதில் திறமையாளர் என்று என்னைப் பற்றி முழுமையான தகவல்களுடன் அறிமுகம் செய்திருந்தார்கள். அந்நாட்டில் இப்பத்திரிகையானது முன்னணிப் பத்திரிகையாகும். அங்கிருந்து வரும்போது ஒரு வளவாளராகவும் இருந்தேன். வளவாளர்களுக்குரிய பயிற்சிகள் அதிகமும் பெற்றுள்ளேன்.

**நீங்கள் சமூகப் பங்களிப்புகளை ஆற்றி வந்துள்ளீர்கள். இது குறித்துக் கூறுவீர்களா?**

நிச்சயமாக, நான் ஆரம்பத்தில் தொழில் செய்யும் போது இருந்தே நான் படித்த இந்துக் கல்லூரிக்கு உதவி செய்து வந்துள்ளேன். கலதாரி ஹோட்டல் போன்ற இடங்களில் தொழில் செய்தேன். அப்போது நல்ல சம்பளம் கிடைத்தது. மாத்தளை இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் உப தலைவராகவும் பழைய மாணவர் சங்கத்தின் 3 வருடம் செயலாளராகவும் இருக்கும்போது பாடசாலையின் பிரதான முன் நுழைவாயில் விளையாட்டு மைதானம் மற்றும் தேசிய மட்டத்தில் விருதுகள் வாங்கும் அளவுக்கு நிர்வாகத்தில் உள்ளவர்களும் ஆசிரியர்களும் எனக்கு உதவி செய்துள்ளார்கள். தற்போதும் அவர்கள் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் முன்னேற்றகரமான செயற்பாடுகளைச் செய்வதில் ஆர்வம் ஊட்டி வருகின்றேன்.

அன்று தொட்டு இன்று வரைக்கும் நான் மாத்தளை இந்துக் கல்லூரிக்கு உதவி செய்து வருகின்றேன். என்னுடைய ஆசை இது. அப்பா படித்த பாடசாலை, நீங்கள் இப்பாடசாலைக்கு தொடர்ந்து உதவிசெய்ய வேண்டும் என்ற வாய்மொழியை வழங்கியுள்ளேன் என் பிள்ளைகளுக்கு. எனது இரு பிள்ளைகளும் கட்டாயம் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.







தொடர்ச்சி 09 ஆம் பக்கம்

# மிரட்டுகிறது தி.மு.க. முரண்டு பிடிக்கிறது அ.தி.மு.க.





அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 10 வருட ஆட்சியை அகற்றுவதற்கு ஸ்டாலின் கையில் எடுத்த ஆயுதங்களில் கமிஷன் - கலெக்‌ஷன் – கரெப்ஷன் என்ற சொற்தொடரும் அடக்கம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிபீடம் ஏறினால் ஊழல் செய்த அமைச்சர்கள் சிறைக்குச் செல்வார்கள் என ஸ்டாலின் பிரசாரம் செய்தார்.

கடந்த பத்தாண்டுகால அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின் போது, முதல்வர் உள்ளிட்ட அன்றைய ஆட்சியாளர்களுக்கு எதிராக ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுகளை திராவிட முன்னேற்றக் கழகம் கிளப்பியது. உள்ளாட்சித்துறை பிளீச்சிங் பவுடர் வாங்கியது முதல் நெடுஞ்சாலைத்துறை டெண்டர் விட்டது வரை பல்லாயிரம் கோடி ரூபா அளவுக்கான ஊழல் புகார்கள் அடுக்கப்பட்டன.

ஊழல் அமைச்சர்கள் பதவி விலக வேண்டுமென்று கோரி மாநிலம் முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டங்களை நடத்தியது. 2020 டிசம்பரில், ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தைச் சந்தித்து முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி உட்பட 8 அமைச்சர்கள் மீது 97 பக்கங்கள் கொண்ட புகார் மனுவை ஸ்டாலின் அளித்தார்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எதிரான ஊழல் புகார்களை கூட்டணிக் கட்சிகளான பாரதீய ஜனதாக் கட்சியும் பாட்டாளி மக்கள் கட்சியும் முன்வைத்து அதிர்ச்சியளித்தன. ஊழல் இல்லாத இந்தியா எனக் கூறும் பாரதீய ஜனதா தலைவர்கள் ஊழல் கட்சியுடன் கூட்டணி வைக்கும் அரசியலைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடன், முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு பொலிஸ் ஜூலையில் நடவடிக்கையைத் தொடங்கியது. முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் வீடு உட்பட 20 இடங்களில் சோதனை நடைபெற்றது. அந்த நடவடிக்கை, அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியது.







அடுத்ததாக, ஓகஸ்ட் மாதம் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியின் வீடு உள்ளிட்ட 60 இடங்களில் இலஞ்ச ஒழிப்பு பொலிஸார், 12 மணி நேரம் சோதனை நடத்தினர். அடுத்து, செப்டெம்பர் மாதம் கே.சி.வீரமணி, ஒக்டோபர் மாதம் சி.விஜயபாஸ்கர், டிசம்பர் மாதம் தங்கமணி, ஜனவரி மாதம் கே.பி.அன்பழகன் என மாதம் ஒருவர் வீதம் இலஞ்ச ஒழிப்பு பொலிஸாரின் சோதனை நடைபெற்றது. எம்.ஆர்.விஜயபாஸ்கர் மற்றும் எஸ்.பி.வேலுமணி இடங்களில் சோதனை நடந்தபோது இருந்த பரபரப்பும் முக்கியத்துவமும் தற்போது கே.பி.அன்பழகன் வீட்டில் நடந்த சோதனையின்போது இல்லை.

சோதனைகள், விசாரணைகள் தொடங்கப்பட்டு ஆறு மாதங்கள் ஆகியும் இவர்கள் கைது செய்யப்படவில்லை. வேலுமணி வீட்டில் சோதனை நடைபெற இருக்கும் தகவல் அவருக்கு முன்பே தெரிந்து விட்டது. அதனால் அடுத்த சோதனைகள் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டன. முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி விரட்டிப் பிடிக்கப்பட்டார். அவர் இப்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஆட்சியாளர்களின் ஊழலுக்குத் துணைபுரிந்த அதிகாரிகள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதது ஏன் என்ற கேள்வியும் இப்போது முக்கியமாக எழுந்திருக்கிறது.

இலஞ்ச ஒழிப்புத்துறையின் ரெய்டு நடவடிக்கை குறித்து அறப்போர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ஜெயராம் வெங்கடேசன், “ஓ.பன்னீர்செல்வம், எஸ்.பி.வேலுமணி உள்ளிட்ட அமைச்சர்கள் மீது 14 புகார்களை ஆதாரங்களுடன் இலஞ்ச ஒழிப்புத்துறையிடம் நாங்கள் அளித்தோம். அவற்றின் மீது முந்தைய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது முன்னாள் அமைச்சர்கள் 6 பேர் மீது எஃப்.ஐ.ஆர் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது” என்று கூறினார். அவரிடம், “மாதம் ஓர் அமைச்சர் என்று ரெய்டு போவதையும், அதிகாரிகள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததையும் எப்படிப் பார்க்கிறீர்கள்?” என்று கேட்டபோது, “அனைத்துப் புகார்கள்மீதும் ஒரே நேரத்தில் நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு அதிகாரிகள், ஊழியர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், சட்ட வல்லுநர்கள், ஆடிட்டர்கள் ஆகியோரைக் கொண்ட கட்டமைப்பு இலஞ்ச ஒழிப்புத்துறையிடம் போதுமான அளவு இல்லை. அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுப்பதற்கான சுதந்திரம் இலஞ்ச ஒழிப்புத்துறைக்கு இருப்பதாகத் தெரியவில்லை. மேலும், கடந்த ஆட்சியில் ஊழல் செய்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், குரூப் ஏ மற்றும் குரூப் பி அதிகாரிகளை தற்போதைய அரசு பாதுகாக்கிறது என்றுதான் பார்க்கிறோம்” என்றார் அவர்.

ஊழல் வழக்கில் யாரையும் உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்ற அவசியம் கிடையாது. 1996இல் ஜெயலலிதா மீதும் பல அமைச்சர்கள் மீதும் வழக்குகள் போடப்பட்டன. ஆனால், யாரையும் உடனே கைது செய்யவில்லை. ஜெயலலிதாவைக் கைது செய்ததுகூட நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில்தான். நினைத்தவுடன் ஒருவர் மீது நடவடிக்கை எடுத்துவிட முடியாது. சட்ட நடைமுறைகள் இப்படித்தான் இருக்கின்றன. அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்களுக்கு நிச்சயம் தண்டனை பெற்றுத்தருவோம். ஊழல் அதிகாரிகள் மீதான நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், அதற்கும் சில சட்ட நடைமுறைகள் உள்ளன என திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் மீதான ஊழல் புகார்களை விசாரிப்பதற்கான லோக் ஆயுக்தாவைத் தமிழகத்தில் உரிய முறையில் ஏற்படுத்தி, அதன் கீழ் இலஞ்ச ஒழிப்புத்துறையைக் கொண்டுவந்துவிட்டால், ஊழல் புகார்களையெல்லாம் அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். ஆனால், 2014க்குள் ஏற்படுத்தியிருக்க வேண்டிய லோக் ஆயுக்தாவை, 2018இல்தான் தமிழகத்தில் கொண்டுவந்தார்கள். அதன்பிறகு, அது என்ன ஆனது என்றே தெரியவில்லை. “லோக் ஆயுக்தாவைச் செயல்பட வைப்போம்” என்பது தி.மு.கவின் முக்கியமான தேர்தல் வாக்குறுதி. 75 சதவிகிதமான தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டோம் என்று பெருமைப்படும் முதல்வர் ஸ்டாலின், லோக் ஆயுக்தாவை எப்போது செயல்பட வைப்பார் என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

முன்னாள் அமைச்சர்களின் வீடுகள், அலுவலகங்கள், அவர்களது உறவினர்கள், நண்பர்களின் இடங்களிலும் சோதனைகள் நடைபெற்றன.
சோதனையின் பின்னர் வழக்கம்போல ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக இலஞ்ச ஒழிப்புத்துறையினர் அறிக்கைகள் வெளியிட்டனர். குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர்கள் சட்டப்படி குற்றச் சாட்டுகளைச் சந்திப்போம் என சிரித்தவாறு பேட்டியளித்தனர்.

வழக்கை எப்படி இழுத்தடிக்கலாம், எப்படித் தாமதப்படுத்தலாம் என்பதை முன்னாள் அமைச்சர்கள் அறிவார்கள். நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரும் அப்பீல் செய்யும் வாய்ப்பு உள்ளது.
ஆகையால், இது இப்போதைக்கு முடியும் விவகாரமல்ல.

**அபி**

# 8ஆம் பக்கத் தொடர்ச்சி...

**அதேவேளை, நீங்கள் இத்தாலியில் ஆற்றிய சமூகப் பணிகளில் அங்கு ஒரு கிரிக்கெட் மைதானம் உருவாவதற்காக நீங்கள் ஆற்றிய பணிகளில் மிகப் பிரபல்யமாகப் பேசப்பட்ட விசயம் ஒன்று இருக்கிறது. அது பற்றி கூறுவீர்களா?**

உண்மையிலேயே இத்தாலி நாட்டில் இருக்கும் போது எனக்கு நிறைய தொடர்புகள் இருந்தன. அங்குள்ள மேயர் மூலமாக அந்நாட்டு அமைச்சரைச் சந்திக்க கிடைத்தது. இங்கு ஒரு அமைச்சரை சந்திப்பது மிகவும் கஷ்டம். ஆனால் அந்நாடுகளில் அமைச்சர்மார்கள், அரசியல் பிரதிநிதிகளை மிக இலகுவாக சந்திக்கலாம். அமைச்சர்களை தனியான ஒரு ரெஸ்ட்ரூரன்களில் இருந்தாலும் சந்திக்கலாம். அவர்கள் எப்பொழுதும் சாதாரண நிலையிலேயே இருப்பார்கள். நீண்ட நேரம் பேசி கலந்துரையாடலாம். ஒருவர் நம்மை அறிமுகப்படுத்தி விட்டால் எம்மோடு அவர்கள் எத்தனை மணித்தியாலம் இருந்தாலும் சந்தித்துத் கலந்துரையாடுவார்கள்.

மேயரைச் சந்திப்பதற்கு முதலில் அந்நாட்டு பொறியியலாளர் அறிகம் செய்து வைத்தார். அந்த மேயர் என்னை விளையாட்டுத் துறை அமைச்சருக்கு அறிமுகம் செய்து வைத்தார். உங்கள் நாட்டில் எத்தனையோ நபர்கள் வருகின்றார்கள். ஏன் நீங்கள் மாத்திரம் இப்படியான சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றீர்கள் என்று அவர் என்னிடம் கேட்டார். நான் வாழ்ந்த நாடு என்னுடைய நாட்டைப் பற்றி பெருமையாகப் பேசுவதற்கு நான் என்றைக்கும் தயங்கியது கிடையாது.



எங்கள் நாட்டில் உள்ள எல்லா விளையாட்டுகளும் இங்கே இருக்க வேண்டும். வெளிநாட்டுக்கு சென்றவர்கள் தங்களுடைய தாய்நாட்டு விளையாட்டுகளை தாம் வாழும் நாடுகளிலும் விளையாடுவதை அவதானித்திருக்கின்றேன். இங்கு கிரிக்கெட்டும் இல்லை. ஹொக்கியும் இல்லை.

இந்த நாட்டில் இலங்கையர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் குடியிலும் வேறுவிதமான போதைப்பொருள் பாவனையிலும் சென்று விடுவார்கள். அவர்களைப் பாதுகாப்பதற்கான ஒரு வழி இந்த விளையாட்டுத் துறைதான். இங்குள்ளவர்களுக்கு ஒரு மணித்தியாலம் விடுமுறை கிடைக்குமானால், அவர்கள் ஓடுவது மதுபானசாலையைத் தேடித்தான்.

அவர்களுக்கு கிரிக்கெட் என்றால் என்னவென்று தெரியாது. எவ்வளவு தெளிவாகக் கூறினாலும் தெரியாது என்ற மனோ நிலையில் உள்ளவர்களுக்கு தெளிவுபடுத்திக் கூறினேன். அதற்கு அவர் என்னிடம் நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள் எனக் கேட்டார். கிரிக்கெட் விளையாடுவதற்கான ஒரு இடத்தை ஒதுக்கித் தாருங்கள் என்று கேட்டேன். இத்தாலி நாட்டவர்கள் கால்பந்து பிரியர்கள். அந்த நாட்டு மைதானத்தில் ஒரு சிறு கோடு கூட அடிக்க விட மாட்டார்கள். இப்படியான நேரத்தில் அங்குள்ள மைதானங்களில் ஒன்றினை கிரிக்கெட்டு விளையாடுவதற்காக ஒதுக்கித் தந்தார் மேயர்.

அதற்கான விரிப்பு, அது தொடர்பான உபகரணங்கள் எங்களிடம் இல்லை. லண்டன் மற்றும் இலங்கையிலிருந்து தான் கொண்டு வர வேண்டும். என்னுடைய சொந்த செலவில் அதற்குரிய விரிப்பு உள்ளிட்ட உபகரணங்களை பெற்றுக் கொண்டோம்.



முறைப்படி விளையாட்டு மைதானத்தை அமைத்தோம். அதனை பார்வையிட மேயரையும் அழைத்திருந்தோம். மேயர், விளையாட்டுத்துறை அமைச்சருக்கு அறிவித்தார். விளையாட்டுத்துறை அமைச்சர் 500 கிலோ மீற்றர் தூரத்திலுள்ளவர். அவர் உடனே வந்தார். அவர் வந்து எப்படி விளையாடுவீர்கள். எந்த மாதிரி விளையாடுவீர்கள் எனக் கேட்டறிந்து கொண்டார். இந்த மைதானத்தைப் பார்வையிட்டு மிகவும் சந்தோஷம் அடைந்தார். இதை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின், அதற்கு உதவி செய்வேன் என்று கூறினார். அது மட்டுமல்ல, விளையாடுவதற்கான உடைகள் தைத்து தருவதற்கான ஏற்பாடுகளையும் செய்து தந்தார். அது கிட்டத்தட்ட இந்த உடையின் ஒரு விலை ஒரு இலட்சம் ஆகும்.

அங்கு ஐ.சி.சி இல் பதிவு செய்ய வேண்டும் என்ற சட்டம் இருந்தது. அதனையும் பதிவு செய்தேன். இதன் திறப்பு விழா வெகு விமர்சையாக இடம்பெற்றது. இந்த திறப்பு விழாவுக்கு அங்குள்ள தொலைக்காட்சி ஊடக நிறுவனங்களில் இருந்து வருகை தந்திருந்தார்கள். பத்திரிகையாளர்களும் வருதை தந்திருந்தார்கள். அதுமட்டுமல்ல, அந்த நகரைச் சுற்றி ஊர்வலமாகச் செல்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து தந்தார்கள். வாகனங்களையும் இடைநிறுத்தி ஊர்வலமாகச் செல்வதற்கு உதவி செய்தார்கள். அன்று நாங்கள் ஊர்வலமாக செல்லும்போது



எங்கள் நாட்டின் சிங்கக் கொடியை தூக்கிச் சென்றோம். அது இலங்கையருக்கான அடையாளமாக இருந்தது. அந்த விழா நடைபெற்ற அன்று மூன்று கொடிகளும் ஏற்றப்பட்டன. அதில் இலங்கைக் கொடியும் ஏற்றி பறக்க விடப்பட்டது. அது மிகவும் பெருமையாக இருந்தது. அதனை என்னுடைய சாதனையாகவும் சமூகப் பங்களிப்பாகவும் நான் கருதுகின்றேன்.

**நீங்கள் இளந் தலைமுறையினருக்கு என்ன ஆலோசனை சொல்ல விரும்புகின்றீர்கள்?**

இளைஞர்களுக்கு சொல்வது எந்நாளும் ஓடுங்கள். உடற்பயிற்சிகள் செய்யுங்கள். உட்கார்ந்து சோம்பேறிகளாக இருக்காதீர்கள். இன்றைக்கும் அதனை நான் செய்து கொண்டிருக்கின்றேன். தற்போதுள்ள இளைஞர்கள் சோர்ந்து போய்விட்டார்கள். அவர்கள் உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதில்லை. அவர்கள் உடல் ஆரோக்கியத்தை வளர்த்துக் கொள்வதற்கு முயற்சிகளில் ஈடுபடுவது மிகவும் குறைவு. உடற்பயிற்சிகளில் ஈடுபட்டால் மட்டும் தான் எல்லாக் காரியங்களிலும் மனதை தைரியப்படுத்தி வெற்றி இலக்கை அடையலாம்.

தொடர்ந்து ஏதாவது விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுதல் வேண்டும். நான் இன்று வரை செய்துகொண்டுதான் இருக்கின்றேன். தோல்விகள் வரலாம். அந்த ஒவ்வொரு தோல்விகளுக்கும் அதற்கென வெற்றி இருக்கிறது. நீங்கள் ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்து வாசித்தால் ஏதாவது ஒரு இடத்தில் நன்மை இருக்கும். ஒரு நூலை முழுமையாக வாசித்துச் செல்லும்போது ஒரு தாளில் நமது சிந்தனையைத் தூண்டக்கூடிய ஒரு நல்ல செய்தி புலப்படும். தற்போதுள்ள இளைஞர்கள் பின்தங்கிய நிலையில் இருப்பதைக் காண்கின்றேன். நாங்கள் உங்கள் முன்னால் இருக்கின்றோம். நீங்கள் எங்களைப் போல் எங்களைப் பார்த்து முன்னால் வரவேண்டும்.

**நேர்காணல்: இக்பால் அலி**



# அழிவடையும் மீன் வளமும் இந்திய இழுவைப்படகு மீன்பிடியும்



**ஜோசப் நயன்**

இலங்கையின் உள்நாட்டு பொருளாதாரத்தில் முக்கிய வகிபாகமாக இருப்பதுடன் குறிப்பிட்ட அளவு அந்நிய செலாவணியை பெற்றுத்தரும் தொழிலாக இருப்பது மீன்பிடியாகும். இலங்கையின் வடக்கே பருத்தித்துறை தொடக்கம் தெற்கே காலி, மாத்தறை வரையான கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளை மையப்படுத்திய பொருளாதார நிலைமையே காணப்படுகின்றது.

இலங்கையின் கரையோரப்பகுதிகளை பொருத்த வரையில் மீன்பிடி, கருவாடு உற்பத்தி மற்றும் சுற்றுலாத்துறையை முக்கியப்படுத்தினாலும் கரையோரப் பகுதிகளில் மீன்பிடியை நம்பி வாழ்வாதாரத்தை கொண்டுநடத்தும் குடும்பங்களே அதிகம்.

அதிலும் குறிப்பாக, வடமாகாணத்தில் உள்ள மன்னார் மாவட்டத்தில் சுமார் 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீன்பிடி அற்ற அதை சார்ந்த உப உற்பத்திகள் ஊடாகவே அன்றாட வாழ்க்கையை கொண்டு நடத்துகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம், சிலாவத்துறை, அச்சங்குளம், வங்காளை, தலைமன்னார், பேசாலை, தேவன்பிட்டி விடத்தல்தீவு, பள்ளிமுனை உட்பட பல கிராமங்கள் மீன் பிடித்தொழிலை மையமாகக் கொண்ட கிராமங்கள் ஆகும்.

இங்குள்ள பெரும்பாலான மீனவர்கள் கண்ணாடியிளை படகுகள் மற்றும் வள்ளங்களை பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் சில பகுதிகளில் தூண்டல்கள், சுழியோடல் மற்றும் கட்டுவலை, கரவலை மூலம் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் வழிச்சல் வலை, சுருக்கு வலை, லைலா வலை போன்ற முறைகளையும் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தை சூழவுள்ள கடற்பரப்பின் தன்மை, கடற்பரப்பின் தட்பவெப்ப நிலை மற்றும் முருகை கற்பாறைகளின் பரவல், கடலடிதள மேடைகள் அதிகமாக காணப்படுவதனால் மன்னார் கடற்பரப்பில் மீன்கள் அதிகமாக காணப்படுவதுடன் மீன் உற்பத்தித் திறனும் அதிகமாக காணப்படுகின்றது.

> **இலங்கை கடல் எல்லையில் அத்துமீறிய மீன் பிடியில் ஈடுபட்டதாக கைது செய்யப்படும் பெரும்பாலான மீனவர்கள், நாட்கூலிக்காக இழுவைப் படகுகளில் ஏற்றப்படும் அப்பாவிகளே. இவர்களுக்கு பின்னால் உள்ள முதலாளிகளின் முகங்கள் பெரும்பாலும் மறைவாகவே உள்ளன.**

இவ்வாறான நிலையில், யுத்தம் நிறைவடைந்த பிற்பாடு வடக்கு கடல் எல்லைப் பகுதிகளில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை மற்றும் இழுவைப் படகின் மூலமான கடற்றொழில் நடவடிக்கை காரணமாக மன்னார் மாவட்ட கடல் வளம் மற்றும் மீன் வளம் முற்றாக நாசமடைவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது.

கடற்பரப்புகளில் உள்ள இயற்கை பல்வகைமையை அழிக்கும் விதமாக பாரிய மடிகளை பயன்படுத்தி தடை செய்யப்பட்ட "அடிமட்ட வலைப்பாச்சலின்" ஊடாக கடலின் அடிப்பகுதியில் உள்ள அனைத்து வளங்களையும் அள்ளிச் செல்வதுடன் அளவு வித்தியாசம் இன்றி அனைத்து அளவிலான மீன்களையும் அள்ளிச் செல்கின்றது. இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள், இவ்வாறான பாரிய இயந்திரங்களை பயன்படுத்தி கடல் அடிமட்டத்தில் பாரிய சங்கிலிகளால் பொருத்தப்பட்டிருக்கும் மடி வலைகளால் மீன்கள் அள்ளப்படும் சமயத்தில், கடலின் அடிப்பகுதியில் மீன்கள் இனப்பெருக்கம் செய்யும் முறுகை கற்பாறைகள், மீன்கள் மறைந்து வாழும் வாழிடங்கள், இயற்கை தாவரங்கள், சேறுகள் மற்றும் பல வகையான பாசிகள் என எல்லாம் அள்ளிச் செல்லப்படுகின்றன.

இலங்கை மீனவர்களின் மூலம் நாள் ஒன்றுக்கு பிடிக்கப்படும் மீனின் அளவை விட இந்திய இழுவைப் படகு ஐந்து மடங்கு அதிகளவான மீன்களை அள்ளிச் செல்வதுடன் கடல் வளங்களையும் அழித்துச் செல்கின்றது.

பொதுவாக, மீனின் இனப்பெருக்கமும் வளர்ச்சியும் கடலடித்தள மேடைப் பகுதி என சொல்லப்படும் CONTINENTAL SHELF ஆழ்கடல்/களப்பு ஆகிய கடலுக்கு இடைப்பட்ட பகுதியிலேயே நடைபெறுகின்றது. இவ்வாறான கடலடித்தள மேடைப்பகுதி பெரும்பாலும் யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறை மற்றும் மன்னாருக்கும் முல்லைத்தீவுக்கும் இடைப்பட்ட பகுதிகளிலேயே அதிகளவாக காணப்படுகின்றன. இதன் நீளம் அண்ணளவாக 480 கிலோ மீற்றராகவும் அகலம் 60 கிலோ மீற்றர் வரையும் உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே, இந்திய மீனவர்களின் வருகை அதிகளவில் மன்னார் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கடல் பகுதிகளிலும் அதேநேரம் யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறை பகுதியிலும் குறிப்பிட்ட அளவு காணப்படுகின்றது.

இவ்வாறான இந்திய மீனவர்களின் அத்துமீறிய மற்றும் ஆபத்தான மீன்பிடி நடவடிக்கை காரணமாக வடபகுதி மீன்வளம் முற்று முழுவதும் சூறையாடப்படுவதுடன் கடல் வளங்களும் அழிக்கப்படுகின்றன. அது மாத்திரமன்றி, கடல் நீர் மற்றும் இயற்கை சூழலும் மாசடைகின்றது.

குறிப்பாக, இழுவைப்படகின் மூலம் சர்வ சாதாரணமாக அள்ளிச் செல்லப்படும் கடல் அணிமனி என கூறப்படும் விலங்கி புறவன்கூடு அதாவது முறுகை கற்பாறைகள் மீண்டும் உருவாக பல ஆயிரம் ஆண்டுகள் தேவைப்படுகின்றன.

ஸ்பெயின், நோர்வே உட்பட பல நாடுகள் இவ்வாறான இழுவைப் படகு மூலமான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணமாக தற்போது அந்த நாட்டில் உள்ள மீன் வளங்கள் பாரிய அளவில் அழிந்துள்ளன. தற்போது அந்த நாடுகள் தங்கள் நாட்டில் மீன்பிடி நடவடிக்கை மேற்கொள்ள முடியாமையினால் கடல் எல்லைகளை தாண்டி சில ஆபிரிக்க நாடுகளின் கடல்பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். குறித்த நாடுகளின் மீன் வளம் பழைய நிலைக்கு திரும்ப சுமார் 100 வருடங்களுக்கு மேலான காலப்பகுதி தேவை என நிபுணர்கள் கணித்துள்ளனர்.

இதேபோன்ற ஒரு பின்னணியிலேயே இந்திய இழுவைப் படகுகளின் வருகையும் எமது நாட்டுக்குள் நோக்கப்பட வேண்டும்.

இந்திய கரையோரப்பகுதிகளில் குறிப்பாக தமிழ்நாட்டைச் சூழவுள்ள தனுஸ்கோடி பாம்பன், இராமேஸ்வரம், தங்கச்சி மடம் போன்ற பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் 30 வருடங்களுக்கு மேலாக அப்பகுதிகளை சூழவுள்ள கடல் பகுதிகளில் இவ்வாறான இழுவைப் படகுகளை பயன்படுத்தி "அடிமட்ட மடி வலைகள்" ஊடாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நிலையிலேயே அப்பகுதிகளில் தற்போது மீன் வளம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் மீன்களின் இனப் பெருக்கமும் சடுதியாக குறைந்துள்ளது.

அதனை மையப்படுத்தியே தற்போது

> **இலங்கை மீனவர்களின் மூலம் நாள் ஒன்றுக்கு பிடிக்கப்படும் மீனின் அளவை விட இந்திய இழுவைப் படகு ஐந்து மடங்கு அதிகளவான மீன்களை அள்ளிச் செல்வதுடன் கடல் வளங்களையும் அழித்துச் செல்கின்றது.**

பெரும்பாலான தமிழக மீனவர்கள் மன்னார் கடற்பரப்பை நோக்கி தங்கள் பார்வையை திருப்பியுள்ளனர். இலங்கை கடற்படையின் தீவிர கண்காணிப்பு மற்றும் தாக்குதல், தொடர் ரோந்து நடவடிக்கை இவை எல்லாவற்றையும் தாண்டி துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றாலும் இந்திய மீனவர்களின் வருகை நின்றபாடில்லை.

இவ்வாறான இந்திய மீனவர்களின் வருகையின் பின்னணியில் வெறுமனே வருமானம் மட்டுமே நோக்காக கொள்ளப்பட்டால் இலங்கை கடற்படையின் ரோந்து நடவடிக்கையே அவர்களை திருப்பி அனுப்பி விடும். ஆனாலும் இதன் பின்னால் உள்ள பல பண முதலைகளின் இலாபத்திற்காக வருமானம் இன்றி, போதிய கல்வி இன்றி, வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் பல அப்பாவி தமிழக மீனவர்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர் என்பதே உண்மை.

இலங்கை கடல் எல்லையில் அத்துமீறிய மீன் பிடியில் ஈடுபட்டதாக கைது செய்யப்படும் பெரும்பாலான மீனவர்கள், நாட்கூலிக்காக இழுவைப் படகுகளில் ஏற்றப்படும் அப்பாவிகளே. இவர்களுக்கு பின்னால் உள்ள முதலாளிகளின் முகங்கள் பெரும்பாலும் மறைவாகவே உள்ளன.

இந்நிலையில், இலங்கை மீனவர்கள் தங்கள் தொழிலை தக்க வைப்பதுடன் மீன் வளங்களை பாதுகாக்க வேண்டியநிலை காணப்படுகின்றது. வெறுமனே போராட்டங்கள் ஊடாக இந்திய மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த முனைவது சாத்தியமற்றதே. மாறாக, இரு நாட்டு மீனவர்களும் சர்வதேச கடல் எல்லை சார்ந்த பகுதிகளின் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் இலங்கை மீனவர்களும் ஆழ்கடல் மீன்பிடி போன்ற மீன்பிடி நடவடிக்கைகளுக்கு தம்மை தயார்படுத்துவது சிறந்ததாகும். இதை விடுத்து, இரு நாடுகளின் இராஜதந்திர பிரச்சினை என அரசியல்மயப்படுத்தாது இரு தரப்புகளும் நடைமுறைப்படுத்தக்கூடிய காத்திரமான முடிவுகளை பேச்சுவார்த்தைகள் மூலமும் கலந்துரையாடல் மூலமும் எடுக்கும்போதே எமது வளம் பாதுகாக்கப்படும் என்பதுடன் தமிழகத்துடனான இணக்கமான சூழல் ஏற்படும். அதை விடுத்து போராட்டங்களும் காட்டமான செயற்பாடுகளும் இடர்பாடுகளையே ஏற்படுத்தும் என்பதே நிதர்சனம்.



# அதிக உடற்பருமன் கொண்டவர்களை தாக்கும் கல்லீரல் கொழுப்பு நோய்



தெளிவுபடுத்துகிறார் வைத்தியர் திருமதி றிப்ஹா ஜெமீல்

**கல்லீரல் கொழுப்பு நோய் பற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

இதயம், சிறுநீரகம், மூளை போன்று மிக முக்கியமான ஓர் உள்ளுறுப்புதான் கல்லீரலாகும். இது உணவுகளை சமிபாடடைவதற்கும், உணவிலுள்ள நச்சுத் தன்மையை நீக்குவதற்கும், உடலின் ஆற்றலை சேமிக்கவும் உதவுகிறது. மனித உடலில் மிகப்பெரிய சுரப்பியாக இருப்பது கல்லீரலாகும். சுமார் கிலோ எடை கொண்ட மிகவும் மென்மையான செம்பழுப்பு நிறத்துடன் காணப்படும். கல்லீரல் வயிற்றின் மேல் பகுதியில் வலது பக்கத்தில் அமைந்துள்ளது. நாம் உண்ணும் கொழுப்புச் சத்துள்ள உணவுப்பொருட்கள் சமிபாடடைவதற்கு பித்தநீர் மிகவும் அவசியமாகும். இந்த பித்தநீரை உற்பத்தி செய்வது கல்லீரலாகும்.

சத்துள்ள உணவுகள் சமிபாடடையாமல் ஆங்காங்கே படிந்து இரத்தத்தின்மூலம் எல்லா உறுப்புகளுக்கும் சென்றடைந்து விடும். இதிலுள்ள கொழுப்புகள் இதயத்திற்கு செல்லும் இரத்தக் குழாய்களில் படிந்து அடைப்பை ஏற்படுத்திவிடுகிறது. இதனைக் கரைக்க கல்லீரலில் சுரக்கும் பித்தநீர் உதவுகின்றது. இதன்மூலம் மாரடைப்பு ஏற்படுவதைத் தவிர்க்க கல்லீரல் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

கல்லீரலில் அதிக கொழுப்பு இரண்டு வகையில் சேர்கின்றது. இவை மது அருந்துவதன் மூலம் கொழுப்பு கல்லீரல் (Alcoholic fatty liver) என்றும், மது அருந்தா வகை கொழுப்பு கல்லீரல் (Non Alcoholic fatty liver) (NAFLD) என்றும் சேர்கின்றது.

**நீங்கள் குறிப்பிட்ட இரண்டு வகையினைப் பற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

அதீதமாக மது பாவிக்கும் அனைவருக்கும் ஈரலில் கொழுப்பு வருவது நிச்சயம். தொடர்ந்து அதிகமாக மது அருந்துபவர்களில் மட்டுமன்றி குறிப்பிட்ட குறுகிய காலத்திற்கு அதீதமாக மது அருந்துபவர்களிலும் ஈரலில் கொழுப்பு ஏற்படக்கூடும்.

மது பாவனையைத் தவிர, எடை அதிகமாக உள்ளவர்களிடம் இது ஏற்படுகிறது. குறிப்பாக, தற்காலத்திலுள்ள துரித உணவு முறை மற்றொரு முக்கிய காரணமாகும். இந்த உணவு முறையில் கொழுப்பு அதிகமாக இருப்பதே முக்கிய காரணமாகும். இதனால் எடை அதிகரிப்பதற்கும், ஈரலில் கொழுப்புப் படிவதற்கும் பிரதான காரணமாகும். அதிலும் முக்கியமாக ட்ரான்ஸ் கொழுப்பு (Trans fats – trans fatty acids) அதிக பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, இரும்புச்சத்து அதிகமாகும்போதும் இது நேரலாம்.

**ட்ரான்ஸ் கொழுப்பு என்பது என்ன?**

தாவரக் கொழுப்புகளை (எண்ணெய்கள்) திடமானதாக ஆக்குவதற்காக ஹைட்ரஜனை உணவு தயாரிப்பாளர்கள் சேர்க்கும்போதே ட்ரான்ஸ் கொழுப்பு (Trans fats) உருவாகிறது.

**எதற்காக இதைப் பயன்படுத்துகிறார்கள்?**

விலை குறைவாக இருப்பதும், இதைக் கொண்டு'செய்யப்படும் உணவுகள் சுவையாகவும் அச்சுவை வாயில் நீண்ட நேரம் நீடிக்கும் என்பதனாலும் இதை பயன்படுத்துகின்றார்கள்.

**அப்படியானால் நாம் அத்தகைய உணவுகளை உண்ணவே கூடாதா?**

மிகக் குறைந்தளவில் உண்ணலாம். ஆனால், நாம் ஒரு நாளில் உள்ளெடுக்கும் கலோரியின் அளவு 2000 எனில் அதில் 20 மட்டுமே ட்ரான்ஸ் கொழுப்பாக இருக்க வேண்டும்.

**கல்லீரலில் கொழுப்பு ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?**

அதிக உடற்பருமன், இன்சுலின் எதிர்ப்பு, ஹைபர்கிளைசீமியா, அதிகளவு கொழுப்புகள், வளர்சிதை மாற்ற நோய்க்குறிகள், மது அருந்துதல், துரித உணவுமுறைகள் போன்றவற்றால் ஏற்படுகின்றது.

**ஈரலில் கொழுப்பு உள்ளது என்பதை நாம் எவ்வாறு அறிந்துகொள்வது?**

கல்லீரலில் கொழுப்பு இருப்பதைக் கண்டறிய ஆய்வுகூட பரிசோதனைகளைச் செய்து பார்ப்பதன் மூலம் கண்டறிந்து கொள்ளலாம்.

முழுமையான இரத்தப் பரிசோதனை, கல்லீரல் செயற்பாடு பரிசோதனைகள், ஹெபடைடிஸ் A, ஹெபடைடிஸ் சி பரிசோதனைகள், ஸ்கேனிங், ஹீமோகுளோபின் பரிசோதனை, கொலஸ்ட்ரோல், அல்ட்ராசவுண்ட், CT ஸ்கேனிங் அல்லது மேக்னடிக் ரெசோனன்ஸ் இமேஜிங் (MRI), எலாஸ்டோகிராபி, கல்லீரல் திசுப் பரிசோதனை என வெவ்வேறான பரிசோதனைகள் மூலம் இதனை இணங்கானலாம். முதலில் liver function test, Ultrasound scans of the abdomen எடுப்பதன் மூலம் மிகத் துல்லியமாக அறிந்துகொள்ளலாம்.

**இதனால் ஏற்படும் பாதிப்புகள் என்ன?**

இதனை ஆரம்பத்தில் இனங்கண்டு அதற்கான சிகிச்சையை அளிக்காதபோது நாளடைவில் கல்லீரல் வீக்கம் (Hepatomegaly), கல்லீரல் அழற்சி (Hepatitis) மற்றும் கல்லீரல் சேதம் (cirrhosis) போன்றவற்றிற்கு இட்டுச்சென்று இறுதியில் இறப்புக்கு வழிவகுக்கும். குறிப்பாக சொல்லப்போனால் இது ஓர் அமைதியான கொள்ளை நோய் எனலாம்.

**கல்லீரல் கொழுப்பு எவ்வாறானவர்களுக்கு ஏற்படும்?**

எல்லா வயதினரிடையேயும் எல்லா பாலினரிடமும் ஏற்படலாம். விசேடமாக சில நோய் நிலைமைகள் உள்ளவர்களிடம் ஏற்பட அதிக சாத்தியக்கூறுகள் உள்ளன. அதாவது, ஹைபர்கிளைசீமியா (hyperglycemia), அதிக இரத்த கொழுப்பு (dyslipidemea), தைரொய்ட், பிடியூட்டரி சுரப்பி, பாலிசிஸ்டிக் கர்ப்பப்பை நோய், வளர்சிதை மாற்றங்கள், உள நோய் போன்றவர்களுக்கு ஏற்படலாம்.

**இதன் அறிகுறிகள் என்ன?**

சோர்வு, பசியின்மை, தோல் அரிப்பு, கண் மற்றும் சருமம் மஞ்சள் நிறமாதல், திடீர் எடைக்குறைவு, எளிதில் காயம் ஏற்படுதல், உடல் வீக்கம், அடிவயிற்றின் மேல் வலது பக்கத்தில் வலி அல்லது அசௌகரியம் ஏற்படும், அதிக வியர்வை, வலது தோள்பட்டை வலி, மன அழுத்தம் போன்ற அறிகுறிகள் தென்படும்.

**நீங்கள் குறிப்பிட்ட அறிகுறிகளில் ஏதாவது தென்பட்டால் உடனடியாக வைத்தியரின் உதவியை நாடவேண்டுமா அல்லது தாமதித்து நாடமுடியுமா?**

வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது மிகவும் சிறந்தது. கல்லீரல் கொழுப்பு பல படிகளைக் கொண்டு பெயரிடப்படும். அதன் படிகளை வைத்தே அதன் தீவிரத்தன்மையும் கருத்திற்கொள்ளப்படும். ஆயினும் ஆரம்ப நிலையிலே அதனைக் குணப்படுத்திக் கொள்வது சாலச்சிறந்தது.


**கல்லீரலில் கொழுப்பு உள்ளவர்கள் செய்யவேண்டியது என்ன?**


ஆரம்பத்திலேயே முறையான சிகிச்சையைப் பெறவேண்டும். மூலிகை மருத்துவத்தில் அதிகமான மருந்துப் பொருட்கள் இதனை குணப்படுத்த இருக்கின்றன. ஈரலைப் பாதிக்கும் மருந்துகள் அதிகளவு எடுப்பதை தவிர்த்தல். அதிக இனிப்புப் பண்டங்களை எடுப்பதை தவிர்த்தல். நச்சுத்தன்மையான பதார்த்தங்கள் உடலில் செல்வதை தவிர்த்தல். பார உலோகங்கள் உடலில் செல்வதை தடுத்தல். தினமும் உடற்பயிற்சி செய்வது நன்று. அதிக கொழுப்பு உணவுகளை தவிர்க்க வேண்டும். சாப்பிட்டு முடிந்ததும் சிறிதளவு சுடுநீர் அருந்துவது நன்று. விலங்குகளின் ஈரலை உணவில் சேர்க்கக்கூடாது.

**இந்த நோய்பற்றி நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

ஈரல் வயிற்று உறுப்புகளில் மட்டுமன்றி நமது சருமத்திலும் கொழுப்பு இருக்கிறது. இந்தக் கொழுப்பு அதிகமாயிருப்பதற்கு கொழுப்பு உணவுகள் மட்டும் காரணமல்ல. நாம் பிரதானமாக உண்ணும் அரிசி மற்றும் கோதுமை போன்ற உணவுகளை அதிகளவில் உண்பதும் ஒரு காரணமாகும். அதாவது, சோறு, இடியப்பம், பிட்டு போன்ற எல்லா மாச்சத்து உணவுகளை அதிகமாக உண்கிறோம். எனவே, நாம் எடையைக் குறைக்க வேண்டுமாயின் மாச்சத்துள்ள உணவுகளின் அளவைக் குறைக்கவேண்டும்.






வெறும் வயிற்றில் அதிக சக்கரை உணவை எடுக்கக்கூடாது. இரசாயன குளிர்பானங்களை அருந்தக்கூடாது.

கல்லீரல் நோயாளிகள் அசைவ உணவுகளை சாப்பிடக்கூடாது. சோடா, உப்பு கலந்த உணவுகள், எளிதில் அஜீரணமாகாத உணவுகள், வேர்க்கடலை மற்றும் கிழங்கு வகைகளை தவிர்க்க வேண்டும். கல்லீரல் அழற்சி உள்ளவர்களுக்கு சைவ உணவே சிறந்தது. இரவு தூங்கமுன் சுடுநீர் அருந்துதல், மிளகும் எலுமிச்சை சாறும் சேர்த்த நீரை அதிகமாக எடுத்துக்கொள்ளல், பூண்டு, கறுவாப்பட்டை தினசரி சமையலில் சேர்த்துக்கொள்ளல். குறிப்பாக, வீட்டில் தயாரித்த உணவுகளை எடுப்பது மிகவும் நல்லது. உணவில் காய்கறிகள் மற்றும் கீரை வகைகள் போன்றவற்றை அதிகம் சேர்க்கவேண்டும். தினமும் ஏதாவது பழங்களை உண்ணவேண்டும்.

உடற்பருமன் உள்ளவர்கள் எடையைக் குறைக்க முயற்சிசெய்ய வேண்டும். உண்ணும் உணவின் கலோரி அளவைக் குறைப்பதும், உடற்பயிற்சியை அதிகரிப்பதும் நல்லது.

மறைந்து நின்று மனித மனதையும் மனிதனையும் கொல்லும் ஒரு நோயே கல்லீரல் கொழுப்பு நோயாகும். நாம் சம்பாதிப்பது பசியைப் போக்க மாத்திரமல்ல, எம் உடலையும் ஆரோக்கியத்தையும் பேணிப்பாதுகாப்பதற்கேயாகும். அந்தப் பணத்தைக்கொண்டு விஷத்தை வாங்கி உண்ணாமல் முடிந்தளவு ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை பேணுவதோடு மது போன்ற போதைப்பொருள் பாவனையிலிருந்தும் நம் ஒவ்வொருவரும் பாதுகாப்பாக இருப்பதோடு, எமது சந்ததியினரையும் பாதுகாக்க முயற்சிக்க வேண்டும். இதுவே எமது ஆரோக்கிய வாழ்க்கை முறையாகும்.

**நேர்காணல்;**
**பைஷல் இஸ்மாயில்**



நேர்காணல்:
ஏ. அகீல் சிஹாப்



# “இந்த வருடத்துக்குள் 25 விளையாட்டு ஊடகவியலாளர்களுக்கு வீடு வழங்கப்படும்”

**தொழில்சார் விளையாட்டு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் ராமகிருஷ்ணன்**

**ஒருசில மூத்த விளையாட்டு ஊடகவியலாளர்கள், தான் இந்த இடத்தில் இருக்கவேண்டும், தன்னைவிட யாரும் இந்த இடத்திற்கு வரக்கூடாது என்ற ஒரு நோக்கத்தோடு பயணிப்பதன் காரணமாகத்தான் இளம் ஊடகவியலாளர்களுக்கான வாய்ப்புகள் இல்லை என நினைத்து வளர்ந்துவரும் ஊடகவியலாளர்கள் விளையாட்டு ஊடகத்துறைக்குள் வருவதில்லை. ஒரு நாட்டில் நல்லிணக்கம், சமாதானம், புரிந்துணர்வு ஆகியவற்றை கட்டியெழுப்ப முடியுமாக இருந்தால், அது விளையாட்டு ஊடகத்துறையின் ஊடாகத்தான் முடியுமாக இருக்கின்றது என்கிறார் தொழில்சார் விளையாட்டு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் ராமகிருஷ்ணன். 'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்தார்.**

**உங்களை பற்றிய அறிமுகம்>**

எனது பெயர் கருப்பையா ராமகிருஷ்ணன். 2008ஆம் ஆண்டு அரச சார்பற்ற நிறுவனமொன்றில் ஊடக இணைப்பாளராக பணியாற்றினேன். அந்த நேரத்தில் நான் செய்கின்ற தொழிலுக்கும், ஊடகத்துறைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாமல் இருந்தது. அந்த நேரத்தில் என்னுடைய முக்கியமான வேலை என்னவென்று சொன்னால், அந்த காலகட்டத்தில் இலங்கையில் யுத்தம் நிலவிக்கொண்டிருக்கும் நிலையில் தொலைக்காட்சிகளில் அனைத்து மொழிகளிலும் ஒளிபரப்பாகும் செய்திகள் அனைத்தையும் பார்த்து ஒவ்வொரு ஊடகங்களும் எப்படி செய்தி அறிக்கையிடுகின்றன என்பதை அவதானித்து அதை அறிக்கையிட்டுக் கொடுப்பதுதான் என்னுடைய முக்கியமான பணியாக இருந்தது.

அதன்பின்னர் தனியார் தொலைக்காட்சியில் சுதந்திர ஊடகவியலாளராக பணியாற்றினேன். என்னுடைய ஆரம்பம் ஒரு தொலைக்காட்சி ஊடகவியலாளராகத்தான் ஆரம்பமானது. அதன்பின்னர் சி.எஸ்.என். தொலைக்காட்சியில் விளையாட்டு செய்திப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த நேரத்தில்தான் எனக்கு விளையாட்டுத் துறையில் ஆர்வம் கூடியது. இந்த இடத்தில் விளையாட்டுத்துறையின் அத்தனை இடங்களிலும் பணியாற்றக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்த நிலையில் இடைநடுவில் குறித்த தொலைக்காட்சி நிறுவனம் மூடப்பட்டது.

அதன்பின்னர் கெப்பிட்டல் மகாராஜா நிறுவனத்தில் ஒரு ஊடகவியலாளராக இணைந்தேன். அந்த நேரத்தில் நான் விடுத்த கோரிக்கை, விளையாட்டு ஊடகவியலாளராக நான் பணியாற்ற வேண்டும் என்று. ஆனால், அந்த இடத்திலேயே எனக்கு அதற்கான சந்தர்ப்பம் கிடைக்காததன் காரணமாக நான் அங்கிருந்து வெளியேற வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. அதன்பின்னர் விளையாட்டுத்துறைக்கு இலத்திரனியல் ஊடகத்துறையில் சரியான அடித்தளம் கிடைக்காது என்பதை உணர்ந்து கடந்த 2016ஆம் ஆண்டு அச்சு ஊடகத்துறையில் முதல் முதலாக காலடி எடுத்துவைத்தேன்.



ஆங்கில மொழியிலான ஊடகம் ஒன்றில் தான் பணியாற்றக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. பத்திரிகையில் எழுதுகின்ற அளவுக்கு ஆங்கிலம் சவாலாக இருந்தாலும் என்னுடைய பணியை நான் நிறைவேற்ற வேண்டும் என்கின்ற நோக்கத்தில் தொடர்ந்தும் இந்த இடத்தில் பணியாற்றினேன். இந்த இடத்தில் எனக்கு கிடைத்த ஒரு வாய்ப்பு என்று சொன்னால், இலத்திரனியல் ஊடகத்தில் இல்லாத ஒரு வாய்ப்பு அச்சு ஊடகத்தில் கிடைத்தது.

அதாவது, விளையாட்டு நிகழ்வுகளுக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாமல் நேரடியாக சென்று கள ஆய்வு மேற்கொள்ளலாம். தொலைக்காட்சியில் வெறும் செக்கன் கணக்குகளில்தான் விளையாட்டுச் செய்தியை ஒளிபரப்பலாம். ஆனால், அச்சு ஊடகத்தில் வேண்டிய அளவுக்கு முழுப் பக்கத்தில் கூட செய்தியை எழுதக்கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இதிலிருந்துதான் என்னுடைய முழுமையான விளையாட்டு ஊடகப் பயணம் ஆரம்பமானது.

**இலங்கை தொழில்சார் விளையாட்டு ஊடகவியல்லாளர்கள் சங்கம் எப்போது ஆரம்பிக்கப் பட்டது. இதன் முக்கிய நோக்கம் என்ன?**

1975ஆம் ஆண்டுகளிலேயே ஆரம்பமானது. அந்த காலகட்டத்தில் விளையாட்டுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் குறைவாக இருந்தது. ஒரு ஊடக நிறுவனத்தில் விளையாட்டுக்கென்று தனியாக ஓர் ஊடகவியலாளர் இருக்க மாட்டார். ஆனால், அந்த நேரத்தில் இதற்கான ஒரு தேவைப்பாடு இருந்து ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், 20 ஆண்டுகளாக செயற்பாடு இல்லாமல் இருந்து பின்னர் 1990ஆம் ஆண்டு மீண்டும் செயற்பட ஆரம்பித்தது. இதற்கு பெரியதொரு காரணம் இருக்கிறது.

1990ஆம் ஆண்டு தெற்காசிய விளையாட்டுப் போட்டி நடைபெறவிருந்த வேளையில், வெளிநாடுகளில் இந்த விளையாட்டு ஊடகவியலாளர்கள் அமைப்பு சிறப்பாக செயற்பட்டுவருவது அறியப்பட்ட பின்புதான் இலங்கையில் 1990ஆம் ஆண்டு விளையாட்டு அமைச்சின் அனுமதியுடன் தொழில்சார் விளையாட்டு ஊடகவியலாளர்கள் சங்கம் முறையாக ஆரம்பிக்கப் பட்டது. ஆனால், இந்த அமைப்பு தொடர்ந்து இயங்காமைக்கான காரணம், ஒருசிலர் இதனை தங்களுடைய தனிப்பட்ட தேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்திவிட்டு அப்படியே விட்டுச் சென்றனர். இந்த அமைப்பு இன்று வரையில் உரிய முறையில் பயணிக்க காரணமாக அமைந்தது, 2017ஆம் ஆண்டு துர்க்மேனிஸ்தானில் நடைபெற்ற ஆசிய உள்ளக விளையாட்டுப் போட்டிகள்தான்.

இலங்கையில் விளையாட்டு ஊடகவியலாளர்களுக்கு ஓர் அமைப்பு காணப்படுவதுபோன்று உலகத்திலேயே விளையாட்டு ஊடகவியலாளர்களுக்கென ஓர் அமைப்பு காணப்பட்டது. இந்த அமைப்பில் உறுப்பினராக இருக்கின்ற ஒவ்வொரு நாடுகளுக்கும் இந்த அமைப்பானது 2017ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய உள்ளக விளையாட்டுப் போட்டிகளுக்கு அழைப்பு விடுத்தது. அந்த நேரத்தில் நான் அங்கு சென்றிருந்த போதுதான் இப்படி ஓர் அமைப்பு இலங்கையில் இருக்கிறது, இந்த அமைப்பு ஒருசிலரின் தேவைகளுக்காக மாத்திரம் பயன்படுகிறது என்பது மிகத் தெளிவாகத் தெரிந்தது.

நான் நாடு திரும்பியதன் பின்னர் முதல் வேலையாக அப்போதைய விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவிடம் சென்று இந்த விடயம் தொடர்பில் தெரிவித்தேன். ஒருசிலரின் தேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டுவரும் இந்த அமைப்பு இளம் ஊடகவியலாளர்களுக்கும் பயன்படவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே விளையாட்டுத்துறை அமைச்சரிடம் சென்று இது தொடர்பில் நான் கருத்து தெரிவித்தேன். இதனை நாம் மீள ஆரம்பித்து சரியான முறையில் செயற்படுவோம் என்று கூறி பொதுக் கூட்டத்தை கூட்டினார்.

அந்தநேரத்தில் சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர் சம்பிக்க பெர்னாண்டோ அமைப்பின் தலைவராகவும், மௌபிம பத்திரிகையின் விளையாட்டு ஆசிரியர் சிறிநாம ராஜபக்ஷ செயலாளராகவும் தெரிவானார்கள். அந்தநேரத்தில் எனக்கு தேசிய அமைப்பாளர் பதவியை தந்திருந்தார்கள். எனக்குக் கிடைத்த அமைப்பாளர் பதவியில் அனைவருக்கும் அழைப்பு விடுத்தேன், இந்த அமைப்பில் வந்து இணையுமாறு. ஏராளமான விளையாட்டு ஊடகவியலாளர்கள் இந்த அமைப்பில் வந்து இணைந்துகொண்டார்கள்.

ஒருசில புதிய திட்டங்களையும் கொண்டு வந்தோம். நான் ஆரம்பத்தில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் வேலை செய்ததன் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்களின் தொடர்பும் அதிகளவில் இருந்தது. அந்த தொடர்புகளைப் பயன்படுத்தி இலங்கையிலிருந்து இளம் ஊடகவியலாளர்களுக்கு நிறைய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தேன். வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சிகளை மேற்கொள்ளக்கூடிய அளவிலேயே வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

அந்தநேரத்தில் அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு சென்று கூட இளம் ஊடகவியலாளர்கள் பயிற்சிகளில் பங்கேற்றிருந்தார்கள். இப்படி ஒரு தேசிய அமைப்பாளராக இருந்துகொண்டு பல விடயங்களை செயற்படுத்துகின்றபோது அமைப்பில் இருப்பவர்களுக்கு என்மீது அதிக நம்பிக்கை பிறந்தது. முழுக்க முழுக்க விளையாட்டு ஊடகவியலாளர்களுக்கான நலன்புரி அமைப்பாகவே இது இன்று செயற்பட்டு வருகிறது.

**நீங்கள் எப்போது உறுப்பினராக இணைந்தீர்கள். தற்போது எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர்?**

2017ஆம் ஆண்டு இந்த அமைப்பு மீண்டும் உருவாக்கப்பட்டபோது நான் நேரடியாக தேசிய அமைப்பாளராக நியமனம் பெற்றேன். தற்போது கிட்டத்தட்ட 100 உறுப்பினர்கள் உள்ளனர்.

**எப்போது இந்த அமைப்பின் தலைவராக தெரிவானீர்கள்?**

2020ஆம் ஆண்டு பெப்ரவரியில் பொதுக்கூட்டம் நடைபெறும்போது தலைவர் பதவிக்கு களத்தில் நின்றேன். நான் ஆரம்பத்தில் தேசிய அமைப்பாளராக இருந்து செய்த செயற்பாடுகளை வைத்து ஏராளமான உறுப்பினர்களின் வரவேற்புடன் தலைவராக தெரிவானேன்.




**ஒரு சிறுபான்மை இனத்தவரான உங்களால் எப்படி இந்த அமைப்பின் தலைவராக வர முடிந்தது?**

ஆரம்பத்தில் நான் ஆங்கில அச்சு ஊடகம் ஒன்றில் வேலை செய்தது ஒரு காரணமாக அமைந்தது. இருந்தாலும் நான் தமிழ் ஊடகத்தில் பணியாற்றியிருந்தாலும் இந்த அமைப்புக்கு தலைவராக வந்திருப்பேன். காரணம், என்னிடத்திலே பொதுமக்கள் தொடர்பு மிக அதிகமாக இருந்தது. ஆரம்பத்தில் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து ஒரு தலைவர் செயற்படுத்தும் திட்டங்களையும் தாண்டி மிக அதிக அளவிலான திட்டங்களை செய்ததன் காரணமாக உறுப்பினர்கள் மத்தியில் நல்லதொரு புரிந்துணர்வு ஏற்பட்டு என்னை தலைவராக தேர்ந்தெடுத்தார்கள்.

**நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் என்ன?**

2020ஆம் ஆண்டு பெப்ரவரியில் நான் தலைவராக பதவிற்று அடுத்த மார்ச் மாதம் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக இலங்கை முழுமையாக முடக்கப்படுகிறது. இதனால் எதிர்பார்த்து வந்த நிறைய விடயங்களை செய்யமுடியாத நிலை ஏற்பட்டது.

**நீங்கள் தலைவராக பதவியேற்றதிலிருந்து இன்று வரையில் இந்த அமைப்பின் ஊடாக விளையாட்டு ஊடகவியல்லாளர்களுக்கு உங்களால் என்ன செய்யமுடியுமாக இருந்தது?**

பதவியேற்ற ஆரம்பத்திலேயே கொரோனா வைரஸ் பிரச்சினையை எதிர்கொண்டதால் விளையாட்டு ஊடகவியலாளர்கள் என்றில்லாமல் பொதுவாக அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் கொரோனா வைரஸ் பாதுகாப்பு அங்கிகளை வழங்குகின்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம். அந்த வேலைகளை வெற்றிகரமாக முடித்து விட்டு அடுத்ததாக, தனியாக விளையாட்டு ஊடகத்துறைக்கு என்ற ஒரு பட்டப்படிப்பை உருவாக்க வேண்டும், அந்த பட்டத்தை படித்துவிட்டு ஒரு தொழில்சார் விளையாட்டு ஊடகவியலாளர் உருவாக வேண்டும் என்ற எண்ணக்கருவில் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் இது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

இந்த விடயம் தற்போது விளையாட்டு ஆணைக்குழுவில் அனுமதிக்காக இருக்கிறது. இந்த வருடத்திற்குள் இதற்கான முழுமையான அனுமதி கிடைத்துவிடும் என எதிர்பார்க்கிறேன். கொரோனா காலப்பகுதியிலேயே தொழில் இல்லாமல் இருந்த சுதந்திர விளையாட்டு ஊடகவியலாளர்களுக்கு மாதம் 10 ஆயிரம் ரூபா வழங்கியிருந்தோம்.

**விளையாட்டு ஊடகத் துறைக்குள் தமிழ் பேசுகின்ற ஊடகவியல்லாளர்களின் எண்ணிக்கை அரிதாகவே காணப்படுகிறது. விளையாட்டு ஊடகவியல்லாளர்கள் சங்கத்தின் தலைவர் என்ற ரீதியில் உங்கள் கருத்து என்ன?**

தமிழ் பேசுகின்ற ஊடகவியலாளர்களை எடுத்துக்கொண்டால், இலத்திரனியல் ஊடகத்தில் நுழைகின்றபோது அவர்கள் ஒரு வீடியோ ஜொக்கி அல்லது ரேடியோ ஜொக்கியாக வருவதற்குத்தான் முயற்சிக்கிறார்கள். அதே அச்சு ஊடகத்துறைக்கு வந்தால் புலனாய்வு செய்திகளை அறிக்கையிடத்தான் ஆர்வம் காட்டுகிறார்கள். யாருமே விளையாட்டுத் துறையை தேர்ந்தெடுப்பது கிடையாது. விளையாட்டுத்துறையில் இருக்கின்ற வாய்ப்புகளை அவர்கள் விளங்கிக்கொள்வதில்லை. விளையாட்டுத்துறைக்குள் தடம் பதித்துவிட்டால் அதில் கிடைக்கின்ற அனுபவங்களும், பயிற்சிகளும் மிகப் பெறுமதியானதாக இருக்கும். ஒரு ஒலிம்பிக்கிற்கு அல்லது பொதுநலவாய, ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு நேரடியாக அறிக்கையிட செல்லும் வாய்ப்பு கிடைக்கும் போது அது வேறெந்த துறைகளிலும் கிடைக்காத அனுபத்தையும், வெளிநாட்டு தொடர்புகளையும் ஏற்படுத்தும்.

**இளம் விளையாட்டு ஊடகவியலாளர்களின் வரவு மிக அரிதாகவே காணப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன?**

இந்தக் கேள்விக்கு நான் வெளிப்படையாக சொல்கின்றேன், எங்களது நாட்டில் இருக்கின்ற ஒருசில மூத்த விளையாட்டு ஊடகவியலாளர்கள்தான் இந்த இடத்தில் இருக்கவேண்டும், தன்னைவிட யாரும் இந்த இடத்திற்கு வரக்கூடாது என்ற ஒரு நோக்கத்தோடு அவர்கள் பயணிப்பதன் காரணமாகத்தான் இளம் ஊடகவியலாளர்களுக்கான வாய்ப்புகள் இல்லை என நினைத்து வளர்ந்துவரும் ஊடகவியலாளர்கள் இந்தத் துறைக்குள் வருவதில்லை.

**பெரும்பான்மை ஊடகங்களில் விளையாட்டிற்கும், விளையாட்டு ஊடகவியலாளர்களுக்கும் கொடுக்கும் முக்கியத்துவம், தமிழ் ஊடகத்துறையில் குறைவாகவே காணப்படுவதன் காரணம் என்ன?**

யோசிக்காமல் விடை கூறலாம். எங்களுடைய சிறுபான்மை இனத்தவர்கள் விளையாட்டுத்துறையில் அதிக ஆர்வம் காட்டாததன் காரணமாகத்தான் தமிழ்பேசும் விளையாட்டு ஊடகங்களும் விளையாட்டுத் துறைக்கு ஆர்வம் கொடுப்பதில்லை. ஆனால், என்னைப் பொறுத்தவரையில் இது மாற வேண்டும். அனைத்து இனத்தவர்களும் விளையாட்டுத்துறைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஒரு விடயத்தை கூற விரும்புகிறேன், ஒரு நாட்டில் நல்லிணக்கத்தை, சமாதானத்தை கட்டியெழுப்ப முடியுமாக இருந்தால், அது விளையாட்டு ஊடகத்துறையின் ஊடாகத்தான் முடியுமாக இருக்கின்றது. விளையாட்டினூடாக சமாதானத்தையும், புரிந்துணர்வையும் நிச்சயமாக உருவாக்க முடியும்.

**விளையாட்டுத்துறை அமைச்சினால் வெளியிடப்படுகின்ற ஊடக அறிக்கைகள் அனைத்தும் சிங்கள மொழியினால் மாத்திரமே வெளியிடப்படுகின்றன. ஏன் இந்த இடத்தில் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகிறது. இது தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுசெல்ல முடியுமா?**

ஆரம்ப காலங்களில் தமிழ் மொழியிலும் வந்தவண்ணம்தான் இருந்தது. ஆனால், இடையில் இல்லாமல்போனது. காரணம், எங்களுடைய தமிழ் பேசுகின்ற ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் விளையாட்டுத்துறைக்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் மிகக்குறைவாக இருப்பது.



Professionals Sports Journalists' Associations of Sri Lanka - Malinga Farewell

சிங்கள மொழியில் வெளியாகின்ற ஊடக அறிக்கைகள் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றபோது ஒரு தாமதம் ஒன்று ஏற்படுகிறது. அறிக்கைகளை உடனடியாக வழங்கவேண்டும் என்பதால் சிங்கள மொழியில் மாத்திரம் வெளியிடப்பட்டு வருகிறது. கேட்பதற்கும் யாரும் இல்லாததால் தொடர்ச்சியாக சிங்கள மொழியில் மாத்திரம் வெளியிடப்பட்டு வருகிறது. இருந்தாலும் அமைச்சரிடத்தில் இந்த விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

**உங்களது பதவிக்காலம் இன்னும் சில மாதங்களில் நிறைவுக்குவரும் நிலையில் ஒருசில விடயங்களை உங்களால் செய்ய முடியாமல் போயிருக்கலாம். மீண்டுமொரு முறை தலைவராக செயற்படும் சந்தர்ப்பம் கிடைத்தால், உங்கள் எதிர்கால திட்டங்கள் என்ன?**

விளையாட்டு ஊடகவியலாளர்களுக்கு அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கத்தின் பங்களிப்புடன் வீடு வழங்குகின்ற திட்டத்தை கொண்டுவந்துள்ளேன். இது சம்பந்தமான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த வருடத்துக்குள் முதல் 25 பேருக்காவது வீடுகளை வழங்கும் நடவடிக்கைகளை எடுத்துவருகிறேன். அதேபோன்று விளையாட்டு ஊடகவியலாளர்களுக்கான தனியான ஒரு கல்வித்திட்டம். விளையாட்டு ஊடகவியலாளர்களுக்கென தனியாக ஓர் அரச விருது வழங்கும் நிகழ்வை நடத்த ஏற்பாடு செய்திருந்தேன், ஆனால், கொரோனா பிரச்சினை காரணமாக அது பிற்போடப்பட்டு வருகிறது. விரைவில் அதனை நடத்த எதிர்பார்க்கிறேன்.

**வளர்ந்துவரும் ஊடகவியலாளர்களுக்கு, விளையாட்டு ஊடகவியலாளர்கள் சங்கம் சார்பாக தெரிவிக்கும் விடயம் என்ன?**

விளையாட்டு ஊடகத்துறையில் ஆர்வம் இருப்பவர்கள் எங்களை தொடர்புகொள்ளலாம். உங்களுக்கு விளையாட்டு ஊடகத்துறையில் வேலை வாய்ப்புக்கான வழியை உருவாக்கிக் கொடுப்பதுதான் எங்களுடைய அமைப்பின் பிரதான நோக்கமாக இருக்கிறது. எதிர்காலத்திலே விளையாட்டு ஊடகத்துறைக்கென தனியான ஒரு கற்கைநெறி ஆரம்பிக்கின்றபோது இன்னும் இதில் காணப்படுகின்ற முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அதன்பின்னர் விளையாட்டு ஊடகத்துறைக்கு கொடுக்கப்படுகின்ற மதிப்பும், மரியாதையும் வித்தியாசமான பெறுமதிமிக்கதாக அமையும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.



காரைக்கவி



# சீத்துவக்கேடு 172

மத்தியானம் சாப்பிட்ட பிறகு ஆச்சியும் அப்புவும் செத்தையில செருகி இருந்த குறைச் சுருட்டுகளை எடுத்து பூவரசம் பழுத்தலிலை சுத்தி எடுத்து பத்தி புக்கு புக்கு எண்டு புகை விட்டுக்கொண்டே முத்தத்தில நிண்ட வேம்புக்கு கீழை தலைக்கு கீழை ஒரு கையை வைச்சுக்கொண்டு ஒருபாட்டம் நித்திரை கொண்டுபோட்டு கைகால் முகத்தை கழுவி வீபூதி பூசிக்கொண்டு வந்து தலைவாசல் குந்தில குந்திச்சினம்.

குந்தின பிறகு ஆச்சி, ''உவர் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில வேற மூண்டு இடங்களில் வேடுவர் ஆடின ஆட்டங்கள், ஆய்ச்சியர் எண்டு சொல்லுற இடையர்கள் ஆடின ஆட்டம், மலைவாழ் சனங்கள் உவையை குன்றக் குரவையர் எண்டு சொல்லுறது அவை ஆடின ஆட்டங்களையும் வலு விரிவாச் சொல்லுறார்'' எண்டா.

ஆச்சி உப்பிடிச் சொல்லவும் அப்பு, ''அட மோனை உந்தக் கூத்துகள் மட்டும் எண்டில்லை. வள்ளிக்கூத்து, துணங்கைக் கூத்து, குரவைக்கூத்து எண்டு வேற விதமான கூத்துகளும் அந்தக் காலத்தில இருந்திருக்கு'' எண்டார் .

எனக்கெண்டா உந்த விசயங்கள் புதினமா இருக்க, அப்புவிட்டைக் கொஞ்சம் விபரமா சொல்லச் சொல்லிக் கேட்டன்.



பொம்மலாட்டம்

உடன அப்பு, தொண்டையைச் செருமிக்கொண்டே தன்ரை குடும்பியை ஒருக்கா அவிட்டுக் கட்டிப் போட்டு, ''வள்ளிக் கூத்து எண்டது எங்கட முருகன்ரை வள்ளியின்ரை கதையை கூத்தா ஆடுறதுதான். உந்தக் கூத்தை நூற்றுக்கணக்கான வருசங்களா எங்கட ஆக்கள் ஆடி வருகினம்'' எண்ட அப்பு, உதைப் பற்றி “வாடா வள்ளியின் வளம் பல தரூஉம்” (பெரும் : 370) எண்டு பெரும்பாணாற்றுப்படை சொல்லுது எண்டார்.

உதமாதிரி துணங்கைக் கூத்து எண்டிறது சங்க காலத்தில இளம் பெண்டுகள் கொஞ்சப்பேர் சேர்ந்து நிண்டுகொண்டு ஒருத்தற்றை கையை ஒருத்தர் பிடிச்சுக்கொண்டு ஆடுறது.

பொதுவா கோயில்லை பூசை நடக்கேக்கை இப்பிடியான கூத்துகளை உவை ஆடினவை எண்டு விஷயம் தெரிஞ்ச ஆக்கள் சொல்லுகினம் எண்டவர், உப்பிடி ஒரு கூத்து இருந்தது எண்டதை “எல்வளை மகளிர் துணங்கை” (குறுந் : 364 : 5-6) எண்ட குறுந்தொகைப் பாட்டடி சொல்லுது எண்டார்.

குரவைக் கூத்து எண்டிறது ஒரு சரியான பழைய கூத்து. இந்தக் கூத்து பின்னணி இசைக்கு ஏத்த மாதிரி கன கலைஞர்கள் சேர்ந்தாடும் வகையில் அமைக்கப்பட்டிருக்கு எண்ட அப்பு,

உந்தக் கூத்தைப் பற்றி. ‘மன்று தொறு நின்ற குரவை’ (மதுரைக் காஞ்சி : 615) எண்ட மதுரைக்காஞ்சிப் பாடல் அடியும், ‘வேங்கை முன்றில் குரவை’ (நற் : 276) எண்ட நற்றிணைப் பாடல் அடியும் சொல்லுது எண்டார்.

உடன ஆச்சி உவர் இளங்கோவடிகள் ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை எண்டு ரெண்டு விதமான குரவைக் கூத்துகளைப் பற்றி சொல்லுறார் எண்டா.

பிறகு நான் முந்திச் சொன்ன மாதிரி உந்த வெறியாடலும் உந்தக் கூத்துகளோடை அந்தக் காலத்தில ஆக்கள் நிறைய ஆடினவை எண்டா.

மலைப்பாங்கான இடங்களிலதான் உந்த வெறியாட்டு நிறைய ஆடுறவை. உப்பிடி ஆடுறவரை வேலன் எண்டுவினம். அவர் முருகன் அருள் பெற்றவர் எண்டு ஆக்கள் சொல்லுறவை.

அவனுக்கு நோயளை இல்லாமல் பண்ணுற அதிலும் பெண்டுகளுக்கு வாற நோயளை இல்லாமல் பண்ணுற ஆற்றல் இருந்ததாக ஒரு ஐதீகம் இருந்தது எண்டா ஆச்சி.

பேந்தும் உவர் இளங்கோவடிகள் தனிய கூத்துகள் மட்டும் எண்டில்லை, உந்த கூத்து நடக்கிற களரியள் எண்ட மேடையள் எப்பிடி இருக்க வேணும். ஆடுற ஆக்களுக்கு சோடினை எப்பிடி செய்ய வேணும் எண்டெல்லாம் சொல்லுறார் எண்ட ஆச்சி,

சிலப்பதிகாரத்தை படிச்சு விளங்கினம் எண்டால் நாங்கள் தமிழர் உந்தக் கலையளிலை மற்ற இனங்களை விட எவ்வளவு உச்சம் பெற்றனாங்கள் எண்ட விஷயம் விளங்கும் எண்டா.

எங்கட உங்க வெள்ளைக்காரனை விட்டா பெரிய ஆக்கள் கிடைக்காது எண்டு திரியிற உப்பத்தே பெடி பெட்டையளுக்கு எங்களிட்டை பெருமைப்பட என்ன இருந்தது எண்டு கேக்கிறவைக்கு உந்த சிலப்பதிகாரத்தை ஆக்கள் படிச்சு விளங்கப்படுத்திக் காட்ட வேணும் எண்டா.

ஆச்சி உப்பிடிச் சொல்லவும் அப்பு, உப்பிடி சங்க காலத்தில இயற்றமிழைப் புலவர்கள் வளர்க்க இசைத் தமிழை பாணர்களும் வளர்க்க நாடகத் தமிழாகிய கூத்தையும் நாடகத்தையும் கூத்தர் எண்டவை வளர்த்து எடுத்தவை எண்டார்.

பேந்தும் உதில இயல் இசை ஆகிய இரண்டும் கேக்கிறவைக்கு மட்டுந்தான் சந்தோஷத்தை தரும். ஆனால் கூத்து உந்த கேள்வி இன்பத்தோடு காட்சி இன்பத்தையும் தரும் எண்டதால அந்தக் காலத்தில ஆக்கள் கூடக் கூத்துகளைப் பாத்தவை அதால கூத்தர்களின்ரை எண்ணிக்கை பெருகினதோட அவைக்கு நல்ல வரும்படியும் வந்தது எண்டார்.

பிறகு உந்தக் கூத்துகள் காலப்போக்கில பொம்மலாட்டம், ஒயிலாட்டம், பாவைக் கூத்து, கரகம், கழியாட்டம், தேவராட்டம், கணியான் கூத்து, அலிக்கூத்து, பொய்க்கால் குதிரை, காவடியாட்டம் எண்டு இப்ப உள்ள மாதிரி நிறைய மாறி வந்திட்டுது எண்டார்.

(தொடரும் )

# இவ்வார இராசி பலன்கள்



வித்வ கலாபூஷணம்
ஜோதிட திலகம் சிவஸ்ரீ
வெங்கட சுப்ரமணிய
குருக்கள்

**மேஷ ராசி அன்பர்களே!**

வார முற்பகுதி புதிய முயற்சிகளுக்கு உகந்ததாக இருக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு சிறிய அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும் என்றாலும் உடனே சரியாகிவிடும். குடும்பம் தொடர்பான வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு வாய்ப்புள்ளது. கணவன் - மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர்கள் உங்கள் பணிகளில் உதவிக்கரமாக இருப்பார்கள். ஒருசிலருக்கு அவர்கள் விரும்பியபடி இட மாறுதல் கிடைக்கும். வியாபாரத்தில் இலாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். பெண்களுக்கு உற்சாகமும் மகிழ்ச்சியும் தரும் வாரமாக இருக்கும். புகுந்தவீட்டு உறவினர்களுடன் ஏற்பட்ட மனவருத்தங்கள் நீங்கும்.

**ரிஷப ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்புண்டு. உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். திருமண வயதிலுள்ள பெண் அல்லது பிள்ளைக்கு திருமண முயற்சிகளை மேற்கொள்ளலாம். பழைய கடன்களைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும். உறவினர், நண்பர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்வீர்கள். சிலருக்கு திடீர்ப் பயணங்களும் அதனால் ஆதாயம் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் ஏற்படும். அலுவலகத்தில் திருப்திகரமான போக்கே காணப்படும். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், தகுந்தவர்களிடம் ஆலோசனை கேட்டுச்செய்யவும். பெண்களுக்கு குடும்பத்தை நிர்வகிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**மிதுன ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலை நல்லபடி இருக்கும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது. கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். எதிர்பாராத பயணங்களும் அதனால் உடல் அசதியும் மனச்சோர்வும் உண்டாகும். உங்களைப் பற்றி தவறாகப் புரிந்துகொண்ட நண்பர்கள், தங்கள் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்பார்கள். அவர்களால் ஆதாயமும் உண்டாகும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் சக பணியாளர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். வியாபாரத்தின் காரணமாக சிலர் தொலைதூர பயணங்களை மேற்கொள்ள நேரும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். சக வியாபாரிகளிடையே இணக்கமான சூழ்நிலை உண்டாகும். பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கும். ஆனாலும் சலித்துக்கொள்ளாமல் செய்து பாராட்டு பெறுவீர்கள்.

**கடக ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலைமை திருப்தி தருவதாக இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணங்களை மேற்கொள்ள வேண்டிவரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவைப்படும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படுகிறது. நீண்டநாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. நிர்வாகத்தினரின் பாராட்டுகள் உற்சாகம் தரும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும். சிலர் வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள். பெண்களுக்கு புகுந்தவீட்டு உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். உங்கள் முயற்சிக்கு கணவரின் ஆதரவு கிடைக்கும்.

**சிம்ம ராசி அன்பர்களே!**

வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். திடீர் செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படக்கூடும். மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் உங்களின் செயற்பாடுகளால் உயர் அதிகாரிகளின் பாராட்டுதல்களையும் அதனால் பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்ற சலுகைகளை எதிர்பார்க்கலாம். வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டிவரும். பங்குதாரர்களும் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். பெண்களுக்கு மனதில் அவ்வப்போது இலேசான சோர்வு ஏற்படும். கணவரிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**கன்னி ராசி அன்பர்களே!**

பணவரவுக்கு குறைவிருக்காது. செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் சுபச் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சற்று இழுபறியான நிலையே காணப்படும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். ஆனால், சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவி செய்வது ஆறுதலாக இருக்கும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்தான். செலவுகளைச் சமாளிக்கத் தேவையான பணம் இருப்பதால் பிரச்சினை எதுவும் ஏற்படாது.

**துலா ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். அநாவசிய செலவுகள் எதுவும் இருக்காது. உடல் ஆரோக்கியத்தில் மட்டும் கவனம் தேவை. பணியின் காரணமாக சிலருக்கு வெளியூர்ப் பயணம் செல்ல நேரும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. எந்தக் காரணத்தை முன்னிட்டும் கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச்செல்வது நல்லது. வேலைக்கு முயற்சிப்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். பங்குதாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள். பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். பிள்ளைகளால் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

**விருச்சிக ராசி அன்பர்களே!**

எதிர்பார்த்ததைவிடவும் வருமானம் கூடுதலாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே ஒற்றுமை வலுப்படும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சிலருக்கு உறவினர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் புகழ் பெற்ற புனிதத் தலங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லவும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக மிகவும் உழைக்கவேண்டி இருக்கும். வங்கிக் கடனுதவி கிடைக்கும். பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். சகோதரர் மூலம் பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்புள்ளது.

**தனுசு ராசி அன்பர்களே!**

குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. புதிய முயற்சிகளில் யோசித்து இறங்குவது நல்லது. உடல்நலம் சீராகும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் மறைந்து அந்நியோன்யம் ஏற்படும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும் என்றாலும் அதனால் பாதிப்பு இருக்காது. வெளியூர்ப் பயணத்தின்போது எச்சரிக்கையாக இருக்கவும். அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையே காணப்படும். புதிய வேலைக்கு விண்ணப்பித்திருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் கிடைக்காது. புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம் இது.

**மகர ராசி அன்பர்களே!**

வார முற்பகுதியில் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். நெருங்கிய உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்வதன் மூலம் தேவையற்ற பிரச்னைகளைத் தவிர்த்துவிடலாம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். நீண்டநாட்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களிடம் உங்கள் பணிகளை ஒப்படைக்க வேண்டாம். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் இப்போது வேண்டாம். சக வியாபாரிகளின் பேச்சைக் கேட்டு புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும். பெண்களுக்கு அதிக பொறுப்புகளால் மனதில் சோர்வும் உடல் அசதியும் உண்டாகும்.

**கும்ப ராசி அன்பர்களே!**

வார முற்பகுதியில் நீங்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்துசேரும். வாரப் பிற்பகுதியில் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். பண வரவு அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். குடும்ப விஷயத்தில் மற்றவர்கள் தலையிடுவதை அனுமதிக்காதீர்கள். சிலருக்கு நீண்டநாட்களாக நிறைவேற்றாமல் விடுபட்ட குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் உண்டாகும். வேலைக்குச் செல்லும் அன்பர்கள் வேறு வேலைக்கு முயற்சிசெய்வது பாதிப்பையே ஏற்படுத்தும். அலுவலகப் பணிகளிலும் கவனமாக இருப்பது அவசியம். வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அனுகூலமாக முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும். பெண்களுக்கு செலவுகள் கூடும்.

**மீன ராசி அன்பர்களே!**

அதிர்ஷ்டம் தரும் வாரமாக இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்புண்டு. சிலருக்கு வெளியூர்ப் பயணமும் அதனால் ஆதாயமும் ஏற்படும். திருமண வயதிலுள்ள மகன் அல்லது மகளின் திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் உறவினர்களிடம் கௌரவம் அதிகரிக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சற்று இழுபறியான நிலையே காணப்படும். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். ஒரு சிலருக்கு பதவி உயர்வு அல்லது ஊதிய உயர்வு கிடைப்பதற்கு சாத்தியமுண்டு. வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்குக் கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். பெண்கள் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்து கொள்ளவும்.

# பழகிப் போச்சு




## அத்தியாயம் - ௫

அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த மரகதத்தின் கன்னத்தை சூரிய ஒளிக்கீற்று செல்லமாய் கிள்ளிவிட அவளின் இமைகள் தூக்கத்திற்கு விடை கொடுத்து திரை விலக்கியது. திறந்த விழிகளுக்கள் ஒளி பட்டு கண் கூசிட தனது கை விரல்களால் கண்ணை கசக்கியபடி எழுந்து உட்கார்ந்தவள் நன்கு பொழுது விடிந்திருப்பதை உணர்ந்துகொண்டாள்.

அந்த ஓலை குடிசையின் மேல் கூரையின் ஆங்காங்கே இத்துப்போன கிடுகுகளில் இருந்த துவாரங்களின் வழியாக ஊடுருவும் காலை நேரத்து சூரியனின் கதிர்களே அவ்வாறு அவளை தினமும் அலாரமாய் எழுப்பிவிடும். அது அவளுக்கு பழகிவிட்ட ஒன்று.

அது ஒரு ஐந்தாறு ஏக்கர் பரப்பளவினைக் கொண்டிருந்த தோட்டமாகும். அதற்குள் மாமரம், பலாமரம், கொய்யாமரம் போன்ற பல மரங்களுடன் சேர்ந்ததாக சில தென்னை மரங்களும் இருந்தன.

அந்த சிறு தோட்டத்தில் காவலுக்காய் ஒரு பக்கமாக அமைக்கப்பட்டிருந்ததுதான் மரகதத்தின் குடிசை.

அதனோடு சேர்த்து வளர்க்கப்பட்ட சில கோழிகளும் ஒன்றிரண்டு ஆடுகளும் சாப்பாடு போட்டு பராமரிப்பது அவளுக்கு பொழுதை போக்குவதற்கான உறவுகளாக இருந்தன.

"மரகதம் அக்கா, இவைகளை எல்லாம் அப்பா உங்ககிட்டே கொடுத்திட்டு வரச்சொன்னார்" என்றபடி கையிலிருந்த பலசரக்கு பார்சலை மரகதத்திடம் நீட்டியது வேறு யாருமில்லை, அந்தத் தோட்டத்துச் சொந்தக்காரரின் இரண்டாவது மகன்தான்.

அப்போதுதான் அவளுக்கு அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதே நினைவுக்கு வந்தது.

ஏனென்றால், வழமையாய் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் அந்தத் தோட்டத்தின் முதலாளி இப்படிதான் அரிசி ரெண்டு கிலோ, சின்ன செமன் ஒன்னு, கொஞ்சம் கருவாடு, ஒரு கிலோ சீனி, சில சரக்குப் பொருட்கள் என்று அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய பொட்டலத்துடன் குடும்பத்தோடு வந்து தோட்டத்தைச் சுற்றி பார்த்துவிட்டு அங்கு கொஞ்சம் களைப்பாறி விட்டு மரகதத்துடனும் கொஞ்சநேரம் பேசி விட்டுப் போவதுதான் வழக்கம்.

மற்றபடி காய்கறிகள், தேங்காய், விறகு போன்றன அந்தத் தோட்டத்திலிருந்து எடுத்துக்கொள்ள முடியும்.

இன்று அவர்களுக்கு கட்டாயமாக வேறு எங்காவது போகவேண்டியதாக இருக்கவேண்டும். அதனால்தான் தனது மகனிடம் அப்பொருட்களைக் கொடுத்து அனுப்பியிருக்கிறார் என்பதும் அவளுக்கு நன்றாகவே தெரியும்.

இவ்வாறுதான் சிலவேளைகளில் இப்படி நடப்பதும் வழமையான ஒன்றுதான். அவசரமான பயணங்களின்போதும் வேறு ஏதாவது விசேடங்கள் வீட்டில் இருக்கின்ற நேரமும் இப்படியாக யாரிடமாவது பொருட்களைக் கொடுத்து அனுப்பிவிட்டு தகவல் சொல்லிவிடுவார்.

அவளைப் பொறுத்தவரையில் அங்கு அதிகம் பளுவான வேலைகளையெல்லாம் அவர் கொடுப்பதில்லை. சும்மா இருக்க வேண்டியதுதான். மற்றபடி புற்கள் வெட்டுவது, பசளையிடுவது, நீர் ஊற்றுவது போன்றவற்றிற்கெல்லாம் தனியாக வேலையாட்கள் இருக்கின்றனர். அவைகளை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

அவளின் மன திருப்திக்காகத்தான் கோழிகளுக்கும் ஆடுகளுக்கும் சாப்பாடு வைத்துக்கொண்டிருக்கிறாள்.

"என்னப்பா... விசேஷம் இண்டைக்கு வேறு எங்காவது போகப் போறீங்களா.. இல்லாட்டி ஏதாவது வைபவங்களா..?" என்றாள் மரகதம் வந்திருந்த முதலாளியின் இரண்டாவது மகனிடம்.

"ஆமாம் அக்கா. இண்டைக்கு சித்தப்பா வீட்டில சின்ன விசேஷம் ஒன்னு இருக்கு. அதுதான் நாங்கள் எல்லோரும் அங்கேதான் போகப் போகிறோம்" என்று பதிலுக்கு சொன்னவன்,

"சரி அக்கா நேரமாகுது. எல்லோரும் புறப்பட்டுக்கிட்டு இருப்பாங்க. நான் போயிட்டு வாறேன். நாளைக்கு போயா தினம் என்கிறதால காலையில நாங்கள் எல்லோரும் வருவோம் என்று அப்பா உங்ககிட்டே சொல்லச் சொன்னார்" என்றபடி விடைபெற்றுப் போனான்.

அவன் போனதும் அவள் கோழிகளுக்கு போடுவதற்காக வைத்திருந்த சாப்பாட்டை அதற்கான பழைய தட்டில் எடுத்துக்கொண்டு கோழி கூடு இருக்கும் பக்கமாய் சென்றாள்.

மரகதம் தனது வீட்டில் மூத்தவள். இரண்டாவது தங்கை. இரண்டு தம்பிகள். ஓரளவு வசதிகள் இருந்தாலும் அவளும் அவளது தங்கையும் மிகவும் அழகானவர்கள்.

இதனால் அப்போது அவர்களுக்குப் பின்னால் சுத்தாத இளைஞர்களே இல்லையென்று சொல்லலாம். ஆனாலும் அவர்கள் அப்படி யாரிடமும் மனதை பறிகொடுக்கவில்லை.

அதனை அறிந்துகொண்ட அவளின் அப்பாவின் நண்பர் குடும்பத்துடன் வீட்டுக்கு வந்திருந்தபோது இவர்களை பிடித்துவிட்டதால் தங்களுடைய இரண்டு மகன்களுக்கும் மூத்தவனுக்கு மரகதத்தையும் இளையவனுக்கு அவள் தங்கையையும் திருமணம் முடித்துக்கொடுக்க சம்மதம் கேட்டபோது,

"அட... இப்படியொரு நல்ல சம்பந்தம் கிடைக்கும்போது யாரும் வேண்டாம் என்று சொல்லுவாங்களா. அதுவும் என்னுடைய இரண்டு மகள்களும் ஒரேயிடத்தில் வாழக் கிடைப்பதென்றால் அது எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பாக்கியமாக இல்லையா இருக்கும். அதுவும் போதாக்குறைக்கு நீ வேறு என்னுடைய உயிர் நண்பன் அல்லவா. இப்படி ஒரு வரம் கெடைக்குமென்றால் அதை எப்படி என்னால மறுக்க முடியும்...?" என்று முழு மனதுடனேயே திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தார் மரகதத்தின் அப்பா.

இதன் காரணமாக இரண்டு குடும்பங்களும் தங்களுக்குள் எந்தவிதமான மறுப்புகளுமின்றி முழு சம்மதத்துடனேயே முடிவெடுத்ததால் திருமண வேலைகள் சூடுபிடித்தன.

அக்கா, தங்கை இருவருக்கும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இருவரும் அதிக பாசமாய் வாழ்ந்து வந்ததால் தங்களுக்கு பிரியாத வரமாய் இந்தத் திருமணம் கிடைத்ததாகவே நினைத்து மனம் மகிழ்ந்திருந்தனர்.

ஒருவாறு திருமணமும் முடிந்தாயிற்று. அக்கா, தங்கை இருவரும் தங்களின் புகுந்த வீட்டுக்குள் ஒன்றாகவே மிகவும் மகிழ்ச்சியுடனும் காலடியெடுத்து வைத்தனர்.

அவர்களின் வாழ்க்கை வண்டி மிகவும் சந்தோஷமாகவும் நிம்மதியாகவுமே ஓடிக்கொண்டிருந்தது. அவர்களுடைய கணவர்மார்களும் சகோதரர்கள் என்பதால் அவர்களுக்குள்ளும் ஒத்துப்போயின.

அதுபோலவே அவர்கள் இருவரும் இணைந்து ஒன்றாக வியாபாரம் ஒன்றினை மேற்கொண்டனர். அதுவும் அவர்களுக்கு கைகொடுத்தது. அவர்களின் வசதிவாய்ப்புகள் உயர்ந்துகொண்டு போயின.

இதற்கிடையில் மரகதத்தின் தங்கைக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் கிடைத்துவிட்டன. ஆனாலும் மரகதத்திற்கு பிள்ளையெதுவும் கிடைக்கவில்லை. இதனால் தங்கையின் பிள்ளைகளே இவர்களின் பிள்ளைகளாக இருந்தனர். அவர்களுக்கள் எந்த பேதங்களும் இருக்கவேயில்லை.

இதன் காரணமாக அவர்கள் வாங்கும் நிலம், இடம், தோட்டங்கள் போன்ற சொத்துகளை எல்லாம் யாரின் பெயருக்கு எழுதுவது என்று வரும்போதெல்லாம், "எங்களுக்குத்தான் பிள்ளைகள் ஒன்றும் இல்லையே. அதனாலே அவைகளையெல்லாம் உங்கட பெயருக்கு எழுதி வையுங்கள். எங்களுக்கும் அவுங்கதானே பிள்ளைங்க..." என்று சொல்லிவிடுவதால் அனைத்தும் அவளின் தங்கை குடும்பத்தின் பெயர்களிலேயே எழுதப்பட்டன.

தொடரும்...

ஸாலிஹ் அஸீம்

---

சொல்ல மறந்த கதை - 29

(1823-1898)

(மலைநாட்டில் எங்கள் சனம்)

சிலோனு சீமையில
நடுப்பகுதி
மலைப்பகுதி
கடுங்காத்தும்
கடுங்குளிரும்
காலமெல்லாம் வீசும்
பகுதியது....

முள்ளுக்காடும்
காட்டுப்பன்றி
கூட்டங்களும்...
வெஷப்பாம்பு
சீவாத்துகளும்..
கொளவிக்கூடுகளும்
கொண்ட பகுதியது....

அட்டைகளும்
உன்னிகளும்
இஷ்டம் போல
மேஞ்சிவரும் இயற்கை
காடு அது...

மக்கள் வாசமறியாத
மலைக்காடு
கல்லுக்காடு...

கோட்டானும் குருவிகளும்
கூடுகட்டி வாழுங்காடு....
மந்திகளும்.
மானினமும் துள்ளி துள்ளி
ஓடும் காடு..

ஆண்டுக்கு ஒருமுற தான்
ஆதவனும் அந்த பக்கம்
வந்து ஏதும்
போவானோ...
பசுமைய பாத்தாக்கா
அப்படிதா தோணுறது...

காட்டெல்லாம்
கண்ணுவச்சி
காசாக்க வேணுமின்னு...
அப்பாவி மக்களயும்
மண்ணுக்கு பணயம்
வக்க
வெள்ளக்கார தொர
மாரு...
கபடமனசு வச்சா...

எட்டி உதைச்சாலும்...
கேக்க ஒரு நாதியில்ல...
மண்ணுக்குள்ள
புதைஞ்சிவிட
பூமிக்கூட சொந்தமில்ல...

பஞ்சத்துக்கு ஊருவந்து
பிஞ்சிப்போன கூட்டமது...

கறுத்த தேகோனாலும்
தங்கமான மனசு
கொண்ட
தங்கமான கூட்டமது...

சொல்லும்
வேளையெல்லாம்
தட்டாம செய்யிவாய்ங்க...
சட்ட திட்டமெல்லாம்
கடுகளவும் அறியாத
சனம்
இவிங்க...
ஒரு வேள சோறு
போட்ட
சாகும் வர நன்றி
மறக்காம
நல்லது நெனைக்கும்
சனம்...

பாசத்துக்கு கட்டப்பட்ட..
பசையுல்ல ரத்தமது..
நேசத்துக்கு அடிபணியும்
நல்ல நெஞ்சம் கொண்ட
கூட்டமது...

தேவை எல்லாம்
சுருக்கிக்கிட்டு..
கிடைக்கும் சுகம் அதில
முழு திருப்தி காணும்
சனம்...

பணத்தாச இல்லாத
பள்ளிக்கூடமறியாத
பாமர கூட்டமிது...

உழைப்புக்கே
இலக்கணமாய்
இருக்கும் வர
உழைத்துவிட்டு
ஓடாக போகும் சனம்...

பொய்யில்லா மனசோட
கடும் வெயிலில்
கடுங்காத்தில்
கபடமத்து வேள செய்யும்
களவில்லா கூட்டமிது...

இத்தன அம்சங்களும்
இருந்ததினாலயானோ..
அங்கிருந்து வந்த சனம்
அடிமாடா ஆகுனிச்சி...

அக்கக்கா பிரிஞ்ச
சனம் அங்கங்க
போயிருச்சி..
போனவிங்க கதை
எல்லாம்
காவிய கததானே....

அடுத்த வாரம்
இன்னும் கத
கண்ணீரில்
கரைந்திடுமே....

தொடரும்...

எம். ராமதாஸ்
இறம்பொடை.

---

# ஊர் வாய்




உருண்டு புரண்டு படுத்தாலும் அவனுக்கு தூக்கம் வர மறுத்தது. அந்தளவுக்கு அவனை தூங்க விடாமல் தடுத்துக்கொண்டிருந்தது வேறு ஒன்றுமில்லை அவளுடைய நினைவுகள்தான்.

அவள் சொல்வதில் ஓரளவுக்கு நியாயம் இருந்தாலும் எவ்வளவோ கஷ்டப்பட்டு, தியாகங்கள் செய்து வளர்த்து ஆளாக்கிவிட்ட தன்னை பெற்றவரை ஒரேயடியாக அவள் சொல்வதைபோல் இலேசாக தூக்கி எறிவது நியாயமில்லை. அதற்கு அவனின் மனச்சாட்சியும் இடம்கொடுக்கவில்லை.

சுயநலத்திற்காக அவள் சொல்வதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அவளுக்கு வேண்டுமானால் அது ஒருவகையில் நியாயமப்படலாம். ஆனால், ஒரு நாணயம்போல் இரண்டு பக்கங்கலாய் இருக்கும் நியாயங்களையும் மனச்சாட்சி உள்ள அவனால் எப்படியும் தட்டிக்கழிக்க முடியவில்லை. இதனால்தான் ஒரு முடிவினை எடுத்துக்கொள்ள முடியாமல் யோசித்துக்கொண்டிருந்தான். ஆனாலும் அவளா? பெற்றவர்களா? என்பதில் ஒரு முடிவுக்கு வரவேண்டிய கட்டாயத்தில் அவன் இருந்தான். அதற்கான காலக்கெடு மறுநாள் இரவுவரைக்கும் அவள் கொடுத்திருந்தாள்.

"முகத்தை உம்..... மென்று வைச்சிருக்கே.. உனக்கென்ன பிரச்சினை?" என்று அவளை பார்த்து கேலியாகத்தான் சொன்னான்.

அதைக் கேட்டவள் இன்னும் கடுப்பாகி, "கிண்டல்ல மட்டும் கொறைச்சலில்லை. ச்சே...! நீங்களெல்லாம் ஒரு ஆம்புளையா? பொம்பளைய பார்த்தா கொஞ்ச வேண்டியதும் தேவை முடிஞ்சதும் எட்டி உதைக்க வேண்டியதும். பச்சை சுயநலவாதிங்க" என்று கொதித்தாள். அதனைக் கேட்டதும் அவனின் மனம் கண்ணாடித் துண்டுகளாய் சிதறியது. அப்படியவள் சொல்வாள் என்று அவன் நினைத்திருக்கவில்லை

"உனக்கென்ன பைத்தியம் ஏதாவது பிடிச்சிருக்கா....? ஆம்புளைங்களைப் பத்தி உனக்கு என்ன தெரியும். நெறைய பொம்புளைங்க உன்னை மாதிரி மனச்சாட்சியில்லாமல் இப்புடி கதைக்கிறவங்கதான்" என்று கோபத்திலும் அதிர்ச்சியிலும் சொன்னான்.

"என்னை காதலிக்கேக்க என்ன பாடு பட்டீங்க. என்ன பாடு படுத்தினீங்கனு கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. கெஞ்சுறதும், அழையுறதும், அணைக்கிறதும், வர்ணிக்கிறதும், வளியிறதும், மொக்க போட்டு நெளியிறதும். நானும் அந்த வலையில விழுந்து காதலிக்கத் தொடங்கினதுக்கப்புறம் எல்லாம் மறந்துப் போச்சிது."

"இப்படியே நீ பொடிவச்சி பேசினால் எப்படி அது எனக்கு வெளங்கும். நான் உன்மேல வைச்சியிருக்கிறது உண்மையான பாசம். அதை கொச்சைப்படுத்தாதே. கேவலப் படுத்தாதே" என்று வேதனையோடு கூறினான்.

"எங்கட வீட்ல எனக்கு கல்யாணம் பேசுறாங்க. அதனால இதுக்கு மேலையும் பொறுத்துக்கிட்டிருக்க என்னால முடியாது. ஒவ்வொரு முறையும் கல்யாணம் பேசுகின்றபோதும் ஒவ்வொரு வகையான பொய்யைச் சொல்லி சமாளிச்சிருக்கேன். அது உங்களுக்கு நன்றாகவே தெரியும். இந்த முறை அப்புடி எதுவுமே சொல்லவும் முடியாது. எனவே, கட்டாயமாய் எனக்கு நாளைக்கு பின்னேறத்திற்குள்ளேளே ஒரு முடிவு வேணும்" என்று அவள் உறுதியாய் கேட்டாள்.

அதனைக் கேட்டவன்,

"அதுதான் ஏற்கனவே சொன்னேனே. உன்னை கல்யாணம் பண்ணுறது எங்களின்ற வீட்டுல யாருக்கும் பிடிக்கலனு. அதனாலதான் சொன்னேன். கொஞ்ச நாளைக்கு பொறுத்துக்கோனு. ஆனால் நீயோ... இதையெல்லாம் தெரிந்தும் வீண்வார்த்தைகளை அள்ளி வீசுறே. கேவலமாய் என்னைப் பேசுறே" என்றான். அதற்கவள், "அதெல்லாம் எனக்குத் தெரியாது. இத்தனை காலமாய் உங்களுக்காக பொறுத்திட்டேன். உங்களின்ற வீட்ல சம்பாதிக்கும் வரைக்கும் காத்திருந்தேனா, என்னுடைய ஆயுளும் முடிஞ்சிடும். ஆசையும் அழிஞ்சிடும். அதுவரைக்கும் என்னால பொறுத்துக்கொள்ள முடியாது. நாளைக்கு பின்னேரம் எனக்கு ஒரு பதிலை கட்டாயமாய் சொல்லுங்க. அந்தப் பதிலை வச்சித்தான் என்னுடைய எதிர்காலத்த முடிவு பண்ண முடியும்" என்றவள், அவன் பதிலைக்கூட சற்றும் எதிர்பார்க்காமல் விடுவிடுவென அவ்விடத்தினை விட்டு நடக்கத்தொடங்கினாள்.


அவனுக்கென்றால் இதற்கு எப்படி முடிவெடுப்பதென்றே தெரியவில்லை. அதைபற்றி யோசிக்க யோசிக்க அவனுக்கு வேண்டாம் என்றாகிவிட்டது. இத்தனை காலமாய் ஏழ்மையின் வருடலில் கூட அவன் முகம் இப்படி சுளிக்காது. தனது பசியாற்றி படிக்க வைத்து இந்த இடத்திற்கு உயர்த்திட எவ்வளவோ பாடுபட்ட பெத்தவங்களையும் மத்தவங்களையும் மறந்து நன்றி கெட்டு தன்னை ஆளாக்கிய அவர்களுடைய தியாகப் பக்கங்களை கிழித்தெறிவதா? தன் குடும்பமும் வேண்டாம். வேறு யாருமே வேண்டாம். எனக்கு நீ மட்டும் போதும். உன்னை நம்பி உனக்கு பின்னால் வருகிறேன் என்பதா..." என்று குழம்பினான்.

தியாக பாசமா....? இடையிலே புகுந்த காதலின் நேசமா...? அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. முடிவெடுக்கத் தெரியவில்லை. இருந்தாலும் கடமைகள் காத்துக்கிடக்கின்றனவே. எனவே, தனது வீட்டவரிடம் புன்னகித்து விடைபெற்றுச் சென்றாலும் மன அழுத்தத்துடனேயே வேலைக்கும் போனான்.

"என்னடா மச்சான், வானம் இடிஞ்சி தலையில விழுந்த மாதிரி எதையோ பற்றி நிறையவே யோசிச்சிட்டிருக்கே. என்னடா ஆச்சு மச்சான் உனக்கு? என்ன பிரச்சினையென்று சொல்லு மச்சான். நாம்மளால முடிந்தால் தீர்த்துவைக்கிறோம். இல்லேனா தீர்க்கக்கூடிய வழியைச் சொல்கிறோம். அதை விட்டுவிட்டு கப்பல் கவிழ்ந்த மாதிரி உட்கார்ந்திட்டிருந்தால் ஒரு பிரச்சினையும் தீரப் போரதில்லை" என்றான் நண்பன். அதனைக் கேட்டவன் நண்பனிடம் தனது தனது நிலையைக் கூறினான். அதனைக் கேட்ட நண்பன், "இங்கப் பாருடா மச்சான். நீயாகவேத்தான் அவளை தொரத்தி தொரத்தி காதலிச்சே. அப்படி காதலிக்க இல்லேனா அவளோட பாட்டுல அவ இருந்திருப்பா. உன்னை எந்த கரைச்சலும் பண்ணியிருக்க மாட்டாள். அவளோட மனசுல ஆசை விதையை தூவி காதல் செடி வளர்த்து பாச பூ பூத்ததும் கல்யாண காய் காய்க்க வேணும்னு அவள் நெனைக்கிறது எந்தவகையிலும் பிழை இல்லையே மச்சான். ஆறு வருசமா உனக்காக அவள் பொறுத்துக்கொண்டிருக்கிறாள் மச்சான். இன்னும் அவளை பொறுத்துக்க சொல்றது நியாயமில்லை. நமக்குனு மனச்சாட்சி வேணுமில்லையாடா மச்சான். உன்னை நம்பிக்கிட்டிருக்கின்றவளை கைவிட்டுட்டேனா அந்தப் பாவம் உன்னை சும்மா'விடாது. அது உன்னோடக் குடும்பத்தையும் பாதிக்கும்டா மச்சான். பெத்தவங்கத்தானே அவுங்க மத்தவங்க மாதிரியில்லை. கொஞ்ச நாள் போனதுக்கப்புறம் எல்லாவற்றையும் மறந்து உன்னைத் தேடி வந்திடுவாங்க. உனக்கு ஒரு பிள்ளைக் கெடைச்சிதுனா எல்லாமே சரியாகிடும். உன்னைத் தேடி அவுங்களே வந்திடுவாங்க. அதனால அதைப்பற்றி கவலைப்படாமல் அவளைக் கல்யாணம் பன்னிக்கோ. அதுக்கப்புறம் எல்லாமே சரியாகிடும். நீ ஒன்னுக்கும் கவலைப்படாதே" என்றான். தனது நண்பன் சொன்னது சரியென்றே பட்டது. ஒரு பொம்பளையை ஏமாத்தி விட்டானே என்கின்ற ஊரவரின் பழிச் சொல்லையும் வாங்கிக் கட்டுவானே. ஆமாம். உண்மைத்தான் அவளை ஏமாற்றினால் என்றைக்காவது ஒருநாள் ஒரு பொம்பளையை ஏமாத்திவிட்டானே படுபாவி என்று ஊர் பேசியே தீரும். இதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அதனால் அவளை எப்படியும் கரம் பிடிப்பதுதான் மிகவும் சரி என்கின்ற தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்தான். அதன்படி திருமணமும் செய்துகொண்டான். சில நாட்கள் நகர்ந்தன

இவனென்ன மனுஷன். இவனை பெத்தவங்க எவ்வளவு கஷ்டப்பட்டு வளர்த்தாங்கனு நமக்குத் தெரியும். அதையெல்லாம் இலேசாய் மறந்திட்டு நேற்று வந்தவளை பெரிசா நெனைச்சிட்டானே பாவி என்ற ஊர் மக்களின் வார்த்தைகள் அவனது காதுக்குள் நுழைய, ஐயய்யோ... என்று மீண்டும் அவனது மனம் குழம்பினாலும் ஊர் வாயை எப்படியும் நம்மால் திருப்திப்படுத்த முடியாது என்ற ஆறுதலை தனக்குள் சொல்லிக்கொண்டு நடக்கத் தொடங்கினான் காரியாலயத்தை நோக்கி.

முற்றும்



# கண் இமைகள் ஏன் துடிக்கின்றன?

நீங்கள் அதிகப்படியான மன அழுத்தத்துக்கு ஆளாகியிருந்தால் அடிக்கடி கண்கள் துடிக்கும். மன அழுத்தத்தைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபடுவது நல்லது. தூக்கமின்மை மற்றும் நாள் முழுவதும் கணினியில் உட்கார்ந்து வேலை செய்வதும் இதற்கு ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

உடலுக்குத் தேவையானளவு தண்ணீர் குடிக்காமல் இருந்தாலோ கண்கள் வறட்சியடையும். உங்கள் கண் வறட்சி அடைந்திருப்பதற்கான அறிகுறியை வெளிப்படுத்தும் முறைகளில் ஒன்றுதான் உங்கள் கண் துடிப்பது.

சோடா, ஒல்கஹோல் ஆகியவற்றை முற்றிலும் தவிர்த்துவிடுதல் வேண்டும். காபி, ஒல்கஹோல் ஆகியவற்றை அதிகமாக எடுத்துக்கொண்டாலும் கண்கள் அடிக்கடி துடிக்கும்.

விற்றமின் சி மற்றும் விற்றமின் பி12 குறைபாடு இருந்தால் உடலில் தசைகள் சுருங்க ஆரம்பிக்கும். அப்போது கண் தசைகளும் சுருங்கும். அதனாலும் கண்கள் அடிக்கடி துடிக்க ஆரம்பிக்கும்.

கண்களின் இமைப்பகுதி, வெளிப்புற நரம்பு மண்டலம், உடலில் செல்லும் மின்னோட்டம், மின்னணுக்கள் ஆகியவை ஒன்றோடொன்று இணைந்துள்ளன. இந்த இணைப்பில் மிக நுண்ணிய மாற்றங்கள் ஏற்படுவது சகஜம். இரத்தோட்டம் எப்படிச் சீராகச் செல்லுமோ அதுபோல் உடலுக்குத் தேவையான மின்னோட்டமும் அனைத்து உறுப்புகளுக்கும் சீராகச் சென்றுகொண்டிருக்கும்.

இதில் வெளிப்புற நரம்பு மண்டலத்தில் செல்லும் நரம்புகளுக்குச் செல்லவேண்டிய மின்னணுக்களில் (Electrons) மிக நுண்ணிய மாற்றம் ஏற்படும்போது, கண் இமைகள் துடிக்கும். சில சமயங்களில், ஐந்து நிமிடங்களோ, பத்து நிமிடங்களோ கண் இமைகள் துடித்துவிட்டு நின்றுவிடும். சிலருக்கு இடை இடையே கண் தொடர்ந்து துடித்துக்கொண்டேயிருக்கும். இதற்கு பயப்படத் தேவையில்லை.

எப்படி மின்சாரத்தில் வோல்டேஜ் குறைந்து உயர்கிறதோ, அதுபோல் நரம்புகளுக்கும் மின்னணுக்களுக்கும் இடையில் நடக்கும் செயற்பாட்டில் மிக நுண்ணிய மாற்றம் ஏற்படும்போது, கண் இமைகள் துடிக்கின்றன. நாம் கூர்ந்து கவனித்தால், சில சமயங்களில் தொடை, முதுகு, தலை போன்ற இடங்களில்கூட சில தசைகள் துடிப்பதை உணரலாம்.

### என்ன காரணம்

மன நிலையில் ஏற்படும் மாற்றங்கள், அதிக மன அழுத்தம், தூக்கமின்மையால் ஏற்படும் சோர்வு, முக்கிய சதை மற்றும் தோல் பகுதியில் ஏற்படும் உயிர் வேதி மாற்றங்கள் (Biochemical changes) ஊட்டச்சத்துக் குறைபாடு, தொடர்ந்து கணினி மற்றும் ஸ்மார்ட்போன் என அதிக கதிர்வீச்சுகள்கொண்ட பொருட்களைப் பார்ப்பது, கண்களில் ஈரப்பதம் குறைவது, சிலருக்குக் கண்களில் நீர் வழிவது, எரிச்சல், வீக்கம், அலர்ஜி போன்ற காரணங்களால் கண் இமைகள் துடிக்கக்கூடும்.

### தீர்வு

கண்களை எப்போதும் ஈரப்பதத்துடன் வைத்துக்கொள்ளவே நாம் கண்களைச் சிமிட்டுகிறோம். கண் சிமிட்டுதல், இதயம் துடித்தல் போன்றவை நம் உடலில் நடக்கும் இயல்பான செயற்பாடுகள்.

இதற்கு எந்த சிகிச்சையும் தேவையில்லை. இவற்றைக் கட்டுப்படுத்தவும் கூடாது. ஏனெனில், இது சிகிச்சை செய்யக்கூடிய நோய் அல்ல. கை வைத்தியமோ, மாத்திரை மருந்துகளை உட்கொள்வதோ கூடாது. ஒரு நாளைக்கு கண் இமைகள் 10 முறை துடித்தால்கூட நோர்மல்தான். அதுவே விட்டுவிட்டு 25 முறைக்கு மேல் துடித்துக்கொண்டிருந்தால் -அதாவது, நடைமுறை வாழ்க்கைக்கு இடையூறாக துடித்துக்கொண்டே இருந்தால் என்ன பிரச்சினை என மருத்துவரிடம் சென்று ஆலோசனை கேட்கலாம்.

கண்களுக்கும், நரம்பு மண்டலத்துக்கும் என்ன பிரச்சினை என மருத்துவர் பரிசோதனை செய்து சிகிச்சையை அளிப்பார்.

# நினைவாற்றலை அதிகரிக்கும் புடலங்காய்



புடலங்காயை நாம் ஒரு மூலிகை என்பதை அறியாமலே பயன்படுத்தி வருகிறோம். இதிலுள்ள விதைகளை நீக்கி சதைப்பகுதியை மட்டும் பயன்படுத்த வேண்டும். புடலங்காயை பச்சைப்பயிறு சேர்த்து கூட்டாக செய்து தொடர்ந்து 12 நாட்கள் சாப்பிட்டு இடைவெளி விட்டு ஒரு மண்டலம் வரை சாப்பிட்டுவர மூல நோயின் தாக்கம் குறைந்து மூலம் கருகி விழுந்துவிடும்.

எடையை கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்புபவர்கள் புடலங்காயை அடிக்கடி உணவில் சேர்த்து வரவேண்டும். இதனால் உடலிலுள்ள தேவையற்ற உப்புநீரை வியர்வை, சிறுநீர் மூலம் வெளியேற்றும்.

அதிக உடல் சூட்டால் மஞ்சள்காமாலை நோய் ஏற்பட்டால் அவர்கள் புடலங்கொடியின் இலைகளை கைப்பிடி அளவு எடுத்து அதனுடன் அதே அளவு கொத்தமல்லி சேர்த்து 300 மி.லீ. தண்ணீரில் கொதிக்கவைத்து அந்தத் தண்ணீரை வடிகட்டி மூன்று வேளை குடித்துவந்தால் மஞ்சள்காமாலை கட்டுப்படும்.

இதயக்கோளாறு உள்ளவர்கள் புடலை இலையின் சாறு எடுத்து நாள்தோறும் 2 தேக்கரண்டி வீதம் வெறும் வயிற்றில் 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் இதயநோய்கள் அனைத்தும் நீங்கும்.

புடலையின் வேரை கைப்பிடியளவு எடுத்து மைய அரைத்து சில துளியளவு வெந்நீரில் விட்டு குடித்து வந்தால் மலம் இளகி வயிற்றிலுள்ள பூச்சிகள் வெளியேறும்.

புடலங்காயை பொறியல் செய்து சாப்பிட நரம்புகளுக்கு புத்துணர்வு கிடைக்கும். நினைவாற்றல் அதிகரிக்கும். நீரிழிவு உள்ளவர்கள் புடலங்காயை எந்த வகையிலாவது சேர்த்துவர அனைத்து வகையான சத்துகளும் அவர்களுக்கு கிடைக்கும்.

கடும் காய்ச்சல் உள்ளவர்கள் வெட்டிய புடலங்காய் 250 கிராம் எடுத்து 300 மி.லீ. தண்ணீரில் கொதிக்கவைத்து வடிகட்டி 200 மி.லீ. குடித்தால் ஒரேநாளில் காய்ச்சல் இயற்கையாக நீங்கும்.

# கோலிபிளவர் முட்டை பொடிமாஸ்

கோலிபிளவரில் ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள் உள்ளதால் இது இரத்தத்திலுள்ள கெட்ட கொழுப்பை கரைக்கும். இதை சமைப்பதற்கு அதிகநேரம் எடுத்துக்கொண்டால், இதன் ஊட்டச்சத்து நீங்கி விடும்.





### தேவையான பொருட்கள்

கோலிபிளவர் - 1 பூ சிறியது
முட்டை - 2
மிளகாய்த்தூள் - 2 டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு

### தாளிக்க

எண்ணெய் - தேவையான அளவு
பெருஞ்சீரகம் - சிறிது
கறிவேப்பிலை - சிறிது

### செய்முறை

கோலிபிளவரை சிறிதாக நறுக்கி 5 நிமிடம் வேக வைத்து எடுத்துக்கொள்ளவும். ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி தாளிக்க கொடுத்தவற்றை ஒவ்வொன்றாக போட்டு தாளித்த பின்னர் அவித்து வைத்த கோலிபிளவரை போட்டு வதக்கவும்.

வதங்கியதும் அதில் மிளாகாய்ப் பொடி, உப்பு போட்டு நன்கு வதக்க வேண்டும்.

பின்பு அதில் முட்டையை உடைத்து ஊற்றி நன்கு கிளறவேண்டும்.

முட்டை நன்றாக வெந்து உதிரி யாக வரும்போது அடுப்பிலிருந்து இறக்கி பரிமாறவும்.

இப்போது சுவையான கோலிபிளவர் முட்டை பொடிமாஸ் தயார்.

# காரிகைகளம்

# கர்ப்பப்பை நீர்க்கட்டிகள்

பெண்களுக்கு தாய்மை உணர்வை கொடுப்பது கர்ப்பப்பை. ஆனால், இப்பொழுது இருக்கும் உணவு முறை மற்றும் வாழ்க்கை முறையினால் பெரும்பாலான பெண்களுக்கு கர்ப்பப்பையில் கட்டிகள் உருவாகுகின்றன. மாதவிடாய் சுழற்சி சரியான முறையில் நிகழாமல் இருப்பதால், சினை முட்டைகள் வெளிவர முடியவில்லை. ஆதலால் கர்ப்பப்பை கட்டிகள் தோன்றுகின்றன. நாம் இந்தத் தொகுப்பில் கர்ப்பப்பை கட்டிகள் தோன்றுவதற்கான அறிகுறிகளை தெரிந்துகொள்ளலாம் வாங்க.

### கர்ப்பப்பை கட்டி அறிகுறிகள்:

இந்தக் கட்டிகளில் முக்கியமாக ஐந்து வகை கட்டிகள் உள்ளன. அவை


- ★ நார்த்திசு கட்டிகள்
- ★ அடினோமைசிஸ் கட்டிகள்
- ★ பாலிப்ஸ் கட்டிகள்
- ★ கர்ப்பப்பை புற்றுநோய் கட்டிகள்
- ★ கர்ப்பப்பை வாய் புற்றுநோய் கட்டிகள்

**அதிக உதிரப்போக்கு:** நார்த்திசு கட்டிகள் பெரும்பாலான பெண்களுக்கு வருகிறது. பெண்களுக்கு மாதவிடாய் சமயத்தில் வழக்கத்தைவிட அதிக உதிரப்போக்கு அல்லது அதிக நாட்கள் உதிரப்போக்கு ஏற்படுவது போன்றவை ஏற்படலாம்.

திருமணமான பெண்களுக்கு உடலுறவு கொள் ளும்போது இரத்தக் கசிவு ஏற்படலாம். மாதவிடாய் முடிந்த 40 – 50 வயது பெண்மணிகளுக்கு மீண்டும் உதிரப்போக்கு ஏற்பட்டால் அது கர்ப்பப்பையில் கட்டிகள் இருப்பதற்கான அறிகுறிகளேயாகும்.

**வலி:** இந்தக் கட்டிகள் இருந்தால் வயிற்றின் அடிப்பகுதியில், முதுகில், இடுப்பில் வலி ஏற்படும். சில பெண்களுக்கு உடலுறவு கொள்ளும்போது வலி ஏற்படும்.

**கர்ப்பத்தடை:** கர்ப்பப்பையில் கட்டிகள் இருப்பதால் பெண்களுக்கு கர்ப்பம் தரிப்பதில் தாமதம் ஏற்படலாம் அல்லது சிலருக்கு கர்ப்பம் தரிக்க முடியாமல் கூட போகலாம். கர்ப்பம் தரித்த பெண்களுக்கு கரு கலைப்பு நிகழலாம், குறை மாத பிரசவம், குழந்தை சரியான வளர்ச்சியடையாமல் இருப்பது போன்ற அறிகுறிகள் தென்படும்.



**இரத்த சோகை, சிறுநீர்ப் பிரச்சினை:** மாதவிடாய் நேரத்தில் அதிக உதிரபோக்கு ஏற்படுவதால் இரத்தசோகை ஏற்படும். சிறுநீர் சம்பந்தமான பிரச்சினைகள் அதாவது சிறுநீர் கழிப்பதில் சிரமம், சிறுநீர் வெளிப்படும்போது இரத்தம் வெளிவருவது போன்றவை கர்ப்பப்பையில் கட்டிகள் இருப்பதற்கான அறிகுறிகளாகும்.

**உடல் எடை குறைதல்:** மலச்சிக்கல், வழக்கத்தை விட அதிக உடல் எடை இழப்பு, பசியின்மை போன்றவை ஏற்படும். இதுபோன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகுவது நல்லது.

# மருந்தாகும் வாழைத்தண்டு



விற்றமின் ஏ மற்றும் சி நிறைந்த வாழைத்தண்டு, தோல் நோய்களுக்கு மிகச்சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது.

இருமல், காது நோய், கர்ப்பப்பை நோய்கள், மஞ்சள் காமாலை, விஷக்கடிகளால் ஏற்படும் வலி மற்றும் இதர நோய்களுக்கு வாழைத்தண்டு மிகச் சிறந்த மருந்தாகத் திகழ்கிறது.

வாழைத்தண்டை இடித்து, சாறு பிழிந்து, அத்துடன் முள்ளங்கி சாறு அரைபாகம் சேர்த்து காலை, மாலை இருவேளையும் 100 மி.லீ. குடித்துவர கல்லடைப்பு நீங்கும். நீர் எரிச்சல், நீரில் இரத்தம் கலந்து போவதைக் குணப்படுத்தும்.

வயிற்றில் நீர்க்கட்டி இருந்தால் வெறும் வயிற்றில் வாழைத்தண்டு சாறு குடித்து வந்தால் நாளடைவில் குணமாகும். கோடைக்காலத்தில் வாழைத்தண்டு அதிகம் சேர்த்துக்கொள்வதன் மூலம் உடல் வெப்பம் குறையும்.

வாழைத்தண்டு சூப் (வாழைத்தண்டு சிறு துண்டுகள், இஞ்சி, எலுமிச்சைச் சாறு, சின்ன வெங்காயம், மிளகு, சீரகம்) 200 மி.லீ. வாரத்தில் மூன்று நாள் சாப்பிட்டால் இரத்தத்திலுள்ள கொழுப்புச் சத்து குறையும்.

இது நீரிழிவு நோயாளிகளுக்கு ஒரு சிறந்த மருந்தாகவும் உணவாகவும் உள்ளது. வாழைத்தண்டுடன் வாழைப்பூ சேர்த்து உட்கொண்டால் மாதவிடாய் கோளாறுகளால் உண்டாகும் அதிகப்படியான இரத்தப் போக்கு, வயிற்று வலி நீங்கும்.

இரண்டு அவுன்ஸ் வாழைத்தண்டு சாற்றை நாள்தோறும் குடித்து வந்தால் வறட்டு இருமல் நீங்கும். வாழைத்தண்டை உலர்த்தி, பொடி செய்து அத்துடன் தேன் கலந்து சாப்பிட்டு வர மஞ்சள் காமாலை நோய் குணமாகும்.

வாழைத்தண்டை சுட்டு அதன் சாம்பலை தேங்காயெண்ணெயில் குழப்பி தடவி வர தீப்புண்கள் ஆறும். வாழைச்சாற்றுடன் திரிபலா சூரணம் சேர்த்து அருந்த மலச்சிக்கல் நீங்கி அதனால் ஏற்பட்ட மூலநோய் மற்றும் ஆசனக் கடுப்பு நீங்கும்.



## ரசிகர்களை திணறடிக்கும் ஐஸ்வர்யா தத்தா!

சினிமா நடிகையான ஐஸ்வர்யா தத்தா, சின்னத்திரையில் பிக்பொஸ் நிகழ்ச்சி மூலம் நுழைந்தார். யாஷிகாவுடன் நெருங்கிய தோழியாக இருந்த அவர், பிக்பொஸ் நிகழ்ச்சி முடிந்த பின் பார்டி, க்ளப் என சில நாட்கள் வைரல் நாயகியாக வலம் வந்தார். அத்தோடு சமூகவலைத்தளத்திலும் ஆக்டிவாக புகைப்படங்களை வெளியிட்டு வருகிறார். இந்நிலையில், நீண்டநாட்களுக்குப் பிறகு ஹாட்டான உடையில் போஸ் கொடுத்துள்ள ஐஸ்வர்யா தத்தா, தனது அழகினால் ரசிகர்களை திக்குமுக்காட செய்துள்ளார். மொடர்ன் டிரஸ்ஸில் ஸ்டைலாகவும், கவர்ச்சியாகவும் இருக்கும் ஐஸ்வர்யாவின் புகைப்படங்களுக்கு நெட்டிசன்கள் செம்ம ஹொட் என கமெண்ட் அடித்து வருகின்றனர்.



## மெசேஜ் சொல்ல ஆசைப்படும் திவ்யதர்ஷினி

விஜய் ரிவியில் காபி வித் டிடி, ஜோடி நம்பர்-1 உள்ளிட்ட பல நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியவர் திவ்யதர்ஷினி. 'நள தமயந்தி', 'பவர் பாண்டி' உட்பட பல படங்களில் நடித்திருக்கும் பிரியதர்ஷினி, தற்போது 'ஜோஸ்வா' என்ற படத்திலும் நடித்து வருகிறார். இந்தப் படத்தில் அவர் பொலிஸ் வேடத்தில் நடிக்கிறார். இப்படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியானது. இந்நிலையில், தனது முதல் பட அனுபவம் குறித்து சமீபத்தில் பேட்டியொன்றில் பேசியுள்ள அவர்,

தான் நடிக்கும் கதாபாத்திரங்கள் மூலம் சமூகத்திற்கு ஏதேனும் நல்ல மெசேஜ்களை சொல்ல ஆசைப்படுவதாகக் கூறுகிறார். அதோடு தனுஷ் இயக்கிய பவர் பாண்டி படத்தில் நான் நடித்த வேடத்தில் பெண்களுக்கு ஒரு மெசேஜ் சொல்ல வேண்டும்.

அதை உங்களைப்போன்ற அனைவருக்கும் பரிச்சயமான பிரபலத்தை வைத்து சொன்னால் பெரியளவில் மக்களை போய்ச்சேரும் என்று சொல்லியே நடிக்க வைத்தார் தனுஷ். அவர் சொன்ன வார்த்தைகளால்தான், நான் திரைப்படத்தில் நடிக்க ஒத்துக்கொண்டேன். அந்தப் படத்தில் ஒரே ஒரு காட்சியில்தான் நடித்தேன். அது என்னை பெரியளவில் மக்கள் மத்தியில் கொண்டுசேர்த்தது. அதனால் அதுபோன்று வித்தியாசமான கேரக்டர்களில் நடிப்பதில் அதிக ஆர்வமாக இருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார் டிடி.






## பிரபுதேவா நடிக்கும் 'ரேக்ளா'

பிரபுதேவா நடிக்கும் புதிய படத்துக்கு 'ரேக்ளா' என்று தலைப்பிடப் பட்டுள்ளது. இப்படத்துக்கு ஜிப்ரான் இசையமைக்கிறார்.

என்.ராஜவன் இயக்கத்தில் 'மை டியர் பூதம்' என்ற திரைப்படத்தில் பிரபுதேவா நடித்து வருகிறார். இதில் மாஸ்டர் அஸ்வந்த் குமார், ரம்யா நம்பீசன், பிக் பொஸ் சம்யுக்தா உள்ளிட்டோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர். இப்படத்துக்கு டி.இமான் இசையமைக்கிறார். அபிஷேக் பிலிம்ஸ் சார்பாக இப்படத்தை ரமேஷ்பிள்ளை தயாரிக்கிறார். இப்படத்தின் ட்ரெய்லர் சமீபத்தில் வெளியாகி வரவேற்பை பெற்றது.

இப்படத்தைத் தொடர்ந்து பிரபுதேவா நடிப்பில் 'பஹீரா', 'யங் மங் சங்', 'பொய்க்கால் குதிரை' உள்ளிட்ட படங்கள் வரிசைக்கட்டி நிற்கின்றன. இது தவிர்த்து இந்தியில் ஷிஷ் குமார் துபே இயக்கத்தில் ஒரு படத்தில் நாயகனாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் பிரபுதேவா. இப்படத்துக்கு 'ஜர்னி' என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், 'வால்டர்' படத்தை இயக்கிய அன்பு இயக்கத்தில் ஒரு புதிய படத்தில் பிரபுதேவா ஒப்பந்தமாகியுள்ளார். இது பிரபுதேவா நடிக்கும் 58ஆவது படமாகும். 'ரேக்ளா' என்று தலைப்பிடப்பட்டுள்ள இப்படத்தை ஒலிம்பியா மூவிஸ் நிறுவனம் பெரும் பொருட்செலவில் தயாரிக்கிறது. இப்படத்தின் டைட்டில் லுக்கை நேற்று (ஜன 26) படக்குழு வெளியிட்டது. ஆக்ஷன் திரைப்படமாக உருவாகும் இப்படத்துக்கு ஜிப்ரான் இசையமைக்கிறார். படத்தில் பணிபுரியும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் பற்றிய விவரங்கள் விரைவில் அதிகாரபூர்வமாக வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஹீரோயின் ஆன நயன்தாரா, ஸ்ருதி தோழி

'ஏழாம் அறிவு' மூலம் ஸ்ருதி ஹாசனுக்கு தோழி, 'நீதானே என் பொன்வசந்தம்' படத்தில் சமந்தாவின் தோழி, தொடர்ந்து 'ராஜா ராணி' படத்தில் நயன்தாரா தோழி... இப்படி பல படங்களில் ஹீரோயினுக்கு தோழியாகவே வந்த தான்யா பாலகிருஷ்ணா, 'கார்பன்' மூலம் ஹீரோயினாக களமிறங்கியிருக்கிறார். அந்த சந்தோஷத்தைக் கொண்டாடிக்கொண்டிருந்தவருடன் பேசியபோது,

**தெலுங்கிலே கூட ஹீரோயினா மூணு, நாலு படங்கள் நடிச்சிட்டீங்களே... தமிழ்ல ஏன் இவ்வளவு லேட்?**

அதுதான் எனக்கும் தெரியலை. ஃபிரண்டா நடிச்சா அடுத்து வந்தது எல்லாமே ஃபிரண்ட் ரோல்தான். அப்பறம்தான் தெலுங்கிலே ரொம்ப ரிஸ்க்கான ஒரு படமா 'செகண்ட் ஹேண்ட்' அமைஞ்சது. தொடர்ந்து கன்னடம், மலையாள மொழிகள்ல கூட ஹீரோயினா நடிச்சிட்டேன். இந்த வருஷம் தமிழ்ல 'கார்பன்' படம் சாத்தியமாகிடுச்சு.

**விதார்த் கூட நடிச்ச அனுபவம் பத்தி சொல்லுங்க?**

'கார்பன்' படத்துக்கு முன்னாடிவரைக்கும் நான் விதார்த் சாரை சந்திச்சதே இல்லை. நடிப்பு ராட்சசன் அவர். ஒரு சீன்... நடிச்சிட்டே போகப் போக அவர் அழணும். ஒரே ஷாட்ல ஓகே வாங்கினார். கம்மி வயசுதான் அவருக்கு. இதான்... இப்படித்தான் நடிப்பேன்னு எல்லாம் யோசிக்கவே மாட்டார். நடிக்க வாய்ப்பு இருந்தா எந்த கெரக்டரா இருந்தாலும் ஓகேன்னு நடிப்பார். அவர் நடிக்கறதைப் பார்த்து பயந்து போயி நான் இன்னும் கொஞ்சம் ஹார்ட் ஒர்க் செய்தேன். சேலஞ்சான நடிகர்.

**ஹீரோயின் ஆகிட்டீங்க... நெக்ஸ்ட் என்ன பிளான்?**

ஒரு பிளானும் இல்லை. இப்பவும் அதே தான்யா பாலகிருஷ்ணாதான். நடிச்சா ஹீரோயின் என்கிற சீனெல்லாம் கிடையாது. நல்ல கெரக்டர் வந்தா நிச்சயம் நடிப்பேன். ஆனா, இனிமே என் கெரக்டருக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்குன்னு பார்த்து அந்த கெரக்டர்கள்ல நடிப்பேன்.

**பிடிச்ச ஹீரோ யார்?**

எப்பவுமே சூர்யா சார்தான். பிடிச்ச ஹீரோ, கிரஷ் எல்லாமே அவர்தான்.


**என்ன மாதிரி ரோல் கிடைச்சா யோசிக்காம நடிப்பீங்க?**

நயன்தாரா மேம், ஐஸ்வர்யா ராஜேஷ்... இவங்க ரெண்டு பேரும் நடிக்கிற எல்லா கேரக்டரும் ரொம்ப தனித்துவமா இருக்கும். அவங்களுக்கு மட்டும் சிறப்பாவே கெரக்டர் டிசைன் செய்வாங்க. அப்படி கெரக்டர்கள்ல நடிக்கணும். அப்பறம் விஜய சாந்தி மேடம் இடம் இன்னமும் காலியா இருக்கு. அந்த மாதிரி ஆக்ஷன், சண்டை, சேஸிங்னு நடிக்கணும்.

**உங்க அடுத்தடுத்த படங்கள் பத்தி சொல்லுங்க?**

பிரசன்னா சார் கூட ஒரு வெப் சீரீஸ், அப்பறம் தெலுங்கிலே ஒரு வெப் சீரீஸ் முடிஞ்சிடுச்சு. தெலுங்கிலே ஒரு படம் ஷூட்டிங் போயிட்டு இருக்கு. இதெல்லாம் இப்பவே சொன்னா ரொம்ப சீக்கிரம் சொன்ன மாதிரி இருக்கும். மேலும் ஒருசில புராஜெக்ட்கள் பேசிட்டு இருக்கேன். சீக்கிரம் சொல்றேன்.






## தமன்னாவின் புதிய முடிவு

தமிழ், தெலுங்கில் சில வருடங்களுக்கு முன்புவரை முன்னணி நடிகைகளில் ஒருவராக இருந்தவர் தமன்னா. இடையில் அவருக்குப் படங்கள் குறைவாக வர ஆரம்பித்தன. அந்த சமயத்தில் படங்களைக் குறைத்துக்கொண்டு திருமணம் செய்துகொள்ளலாம் என தமன்னா விரும்பினார்.

ஆனால், சமீபகாலத்தில் அவருக்கு சில பல புதிய பட வாய்ப்புகள் வருவதால் தனது முடிவை மாற்றிக்கொண்டுள்ளாராம். இன்னும் இரண்டு வருடங்களுக்கு திருமணத்தை தள்ளிப்போட முடிவெடுத்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

தமன்னா தற்போது தெலுங்கில் இரண்டு படங்களிலும், ஹிந்தியில் ஒரு படத்திலும் நடித்து முடித்துவிட்டார். இரண்டு மொழிகளிலும் தலா ஒரு படங்களில் நடித்துவருகிறார். மேலும், கனி என்ற தெலுங்குப் படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார். கன்னடத்தில் ஒரு பான்-இந்தியா படத்தில் நடிக்கவுள்ளாராம். ஆனால், தமிழில்தான் தமன்னாவுக்கு புதிய பட வாய்ப்புகள் எதுவும் வரவில்லை.




## விஜய் ஆண்டனி நடிக்கும் 'ரத்தம்'

தமிழ்த் திரையுலகில் இசையமைப்பாளராகவும், நடிகராகவும் வலம் வருபவர் விஜய் ஆண்டனி. இவர் நடிப்பில் தற்போது ரத்தம் என்ற திரைப்படம் உருவாகி வருகிறது. இப்படத்தை சி.எஸ்.அமுதன் இயக்கி வருகிறார். இவர் ஏற்கனவே தமிழ்ப்படம் என்ற படத்தை இயக்கி பிரபலமானார்.

இப்படத்தில் விஜய் ஆண்டனிக்கு ஜோடியாக மகிமா நம்பியார், நந்திதா ஸ்வேதா மற்றும் ரம்யா நம்பீசன் ஆகியோர் நடிக்கிறார்கள்.

இப்படத்தில் ஒளிப்பதிவு கோபி அமர்நாத், இசையமைப்பாளர் கண்ணன், எடிட்டிங் சுரேஷ், சண்டைக்காட்சிகள் திலீப் சுப்பராயன் ஆகியோர் பணியாற்றி வருகிறார்கள்.

இன்பினிடி பிலிம் வென்டர்ஸ் சார்பில் கமல் போரா, லலிதா தனஞ்செயன், பி.பிரதீப், பங்கஜ் போரா & எஸ்.விக்ரம் குமார் ஆகியோர் இந்தப் படத்தைத் தயாரிக்கின்றனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7